
கல்கி



KALKI

18-6-1967

40 காசு






Pond's
VANISHING CREAM
V

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்®

ஃபாஸ்ஃபோமின் பழரஸ மணம் கமழும் பச்சை நிற வைட்டமின் டானிக். இதில் வைட்டமின் 'பி' காம்ப்ளெக்ஸ் மற்றும் பலவகை கிளிஸரோ ஃபாஸ்பேட்டுகள் கலந்துள்ளது. இதுவே குடும்பத்தினர் அனைவரும் வலிவுடனும், சந்தோஷத்துடனும், ஆரோக்கியமாயும் வாழ உதவுவது. ஃபாஸ்ஃபோமின் வீட்டில் வையுங்கள். இதை அருந்தி வந்தால் களைப்பும் சோர்வும் உங்களை அணுகாது. இழந்த சக்தியை மீண்டும் பெற உதவுகிறது. பசியைத் தூண்டும். வலிவைப் பெருக்கும். நோய்களை எதிர்க்கும் சக்தியை அளிக்கும். குடும்பத்தினர் அனைவரும் ஆரோக்கியத்துடன் திகழ— ஃபாஸ்ஃபோமின்.





நினைவுத் திரையில்...

இந்த வருஷத்தில் ஸ்ரீ வ. ரா. அறுபதாவது பிராயத்தை அடைகிறார். இதை முன்னிட்டு ஒரு விழா நடத்த வேண்டும் என்று தீர்மானித்து அதற்கும் பூர்வாங்கக் கூட்டம் ஒன்று நடந்தது. மணி விழாவைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்றும் அச் சமயத்தில் அவருக்குப் பண முடிப்பு ஒன்று அளிக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

கூட்டம் முடிந்த அரை மணி நேரத்துக்கெல்லாம் வ. ரா. அவர்களின் வீட்டுக்குப் போனேன். 'எனக்காக யாரும் பஞ்சப் பாட்டுப் பாட வேண்டாம்; ஹைதராபாத் நைஜாமின் ஆயிரங்கோடி ரூபாயும் என்னுடையதுதான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்னை யார் தடுப்பது? எழுத்தாளனைக் கௌரவப்படுத்த வேண்டும் என்பதற்காக ஏதாவது செய்தால் செய்யுங்கள். தரித்திரம் என்ற தரித்திரப் பேச்சு வேண்டாம்' என்று பேராசிரியர் பொங்கினார்.

-'கல்கி'- முதல் எழுத்தாளர் என்ற கட்டுரையிலிருந்து.

-கல்கி ஜூலை 18, 1948.


★



♦ செயல் வீரர் சம்பந்தம்



♦ யுத்த அரங்கம்



♦ சடுகுடு..

கல்கி

பொருளடக்கம்

பிலவங்க, ஆனி 4 - ஜூன், 18

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

இலங்கையில் 40 சதம் (தபால் செலவு தனி)

திருமணம்




மணமகள் : ஸௌ. அன்னபூர்ணா

மணமகன் : சி. சிவசங்கரன்

வாழ்க மணமக்கள்!

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் தௌஹித்திரியும், சேலம் டாக்டர் எம். டி. நாகரத்தினம் அய்யர் அவர்களின் புத்திரியுமான ஸௌ. அன்னபூர்ணாவுக்கும், கானன் டங்கர்லி கம்பெனியில் ரெஸிடெண்ட் என்ஜினியராக உள்ள ஸ்ரீ ராமரத்தினம் அய்யர் அவர்களின் குமாரன் சி. சிவசங்கரனுக்கும் மயிலாப்பூர் ராஜேசுவரி கலியாண மண்டபத்தில் 29-5-67 அன்று வெகு விமரிசையாக விவாகம் நடைபெற்றது. முகூர்த்தத்துக்கும், வரவேற்பின்போது நடைபெற்ற ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இசைக் கச்சேரிக்கும், விவாகத்துக்கு மறுதினம் நடைபெற்ற வித்வத் சதஸுக்கும் ஏராளமான பிரமுகர்களும் அன்பர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.


அமெரிக்க உணவு உதவி
மற்ற நாடுகளின் உணவு உதவி
இந்த இரு பருவ மழைகளிருக்கும் வரை கவலையில்லை
YOGESH



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ❋ இதழ் 46

யுத்தம் நின்றது; அடுத்தபடி?

ஏதேனும் இரு நாடுகளிடையே போர் மூளுவதும், அது உலக யுத்தமாகி விடுமோ என்று சர்வதேசங்களும் கதி கலங்குவதுமே கடந்த சில ஆண்டுகளில் உலகின் சரித்திரமாகி விட்டது. நாகரிக வாழ்விலும், விஞ்ஞானத்திலும் முன்னேறி வருவதாக மார் தட்டிக் கொள்ளும் மனித சமுதாயத்துக்கு இது ஒரு மாளாத அவமானம் எனலாம். எனினும் அசல் உலக யுத்தம் மூளாதது இறைவன் கருணையே என்றுதான் கூற வேண்டும். ஓரிடத்திலாவது நிரந்தரமான, இருதரப்பினரும் மனமொப்பிய உண்மைச் சமாதானம் ஏற்படாவிடினும், ஏதோ ஒரு விதத்தில் போர்கள் முடிந்துவிடுவதும் ஆண்டவன் அருளே எனலாம்.

வியட்நாம் கொந்தளிப்பைக் கண்டு எரிமலை எப்போது வெடித்து விடுமோ என்று உலகம் அஞ்சுகையில் மேற்கு ஆசியாவில் போரின் பயங்கரம் உண்டாகிவிட்டது. அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்கு மிடையே யுத்தம் மூண்டது. அமெரிக்காவும் பிரிட்டனும் இஸ்ரேலுக்கு உதவுமென்றும், ருஷியா அரபு நாடுகளின் பக்கம் நிற்கும் என்றும் கருதி, இதன் விளைவாக இது வல்லரசுகளின் யுத்தமாகலாம் என்ற அச்சம் முதலில் ஏற்பட்டது. ஆயினும் அமெரிக்காவும் பிரிட்டனும் எவ்விதத்திலேனும் சமாதானம் ஏற்படவே விரும்பியதும், இந்நாடுகள் இஸ்ரேலுக்கு உதவுவதாக அரபு நாடுகள் குற்றம் சாட்டியதை ருஷியா வெளிப்பட ஆதரிக்காததும் உலகுக்கு நம்பிக்கை ஊட்டின.

படையெடுத்தும் குண்டு போட்டும் நடக்கும் போர் எப்படியாயினும், பொருளாதார யுத்தம் இப்பொழுதே 'சர்வதேச அந்தஸ்தை'ப் பெற்று விட்டது. சூயஸ் கால்வாயில் நடைபெறும் பிரயாணத்தை நாஸர் அவர்கள் அடைத்து விட்டதால் உலகப் பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கும் எதிர் விளைவுகள் ஏற்படும். இந்தியா குறிப்பாகப் பொருளாதாரத் தாக்குதலுக்கு ஆளாகும் என்பது தொழில் துறை நிபுணர்களின் கருத்து. இந்தியாவுக்கு மேல் நாடுகளிலிருந்து கிடைக்கும் பெருத்த உணவு உதவியைத் தாங்கி வரும் கப்பல்கள், சூயஸ் கால்வாய் அடைக்கப்பட்டதால் ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு வரவேண்டியிருக்கும். இதனால் கப்பல் செலவு அதிகமாகும்; கால விரயமும் ஏற்படும். விளைவாக, இஸ்ரேலைவிட அதிகமாக இந்தியாவே பாதிக்கப்படலாம் என்று லண்டன் 'டைம்ஸ்' கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எடுத்த எடுப்பிலிருந்து இஸ்ரேலுக்கு மகத்தான வெற்றி கிடைத்தது விசேஷ கவனத்துக்குரியது. அண்டை நாடுகள் அனைத்தும் பகைமை பூண்டிருக்கையில் இச்சிறு நாடு புரிந்த வீரதீர பராக்கிரமம் ஆச்சரியமானது. 'அரசர்களை நம்புவதை விட ஆண்டவனை நம்புவதே சாலச் சிறந்தது; குளவிக் கூட்டம்போல் என்னைப் பல நாடுகள் சூழ்ந்துகொண்ட போதிலும், நெருப்பை அணைப்பது போல் அவற்றை யெல்லாம் சமனப்படுத்தியாயிற்று' என்ற பைபிள் துதி இஸ்ரேல் விஷயத்தில் உண்மையாகி விட்டது. இஸ்ரேலியரின் போர் ஊக்கத்துக்கு ஒரு முக்கியமான காரணம் உண்டு. அவர்களுடைய நாட்டின் வாழ்வு அல்லது சாவை நிர்ணயிக்கும் பிரச்னை முனைந்ததால் அவர்கள் உத்வேகத்துடன் கிளர்ந்தெழுந்தார்கள். யூதர்களுக்கென உலக மகா சபையால் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் தேசத்தை அடியோடு இல்லாமற் செய்துவிடுவதே அரபு நாடுகளின் ஆசையாகையால், தற்காப்பு உணர்ச்சியில் இஸ்ரேலியர் கொதித்து எழுந்தார்கள். முதலில் குண்டு வீசிப் போர் தொடங்கியது யாராயிருப்பினும் அகாபா வளைகுடாவை அடைத்த எகிப்தின் செயல்தான் போருக்குக் கொடியேற்றம் செய்தது எனலாம். அகாபா வளைகுடா பூகோள ரீதியில் எகிப்தைச் சேர்ந்தது என்று சிலர் கட்சி பேசுகிறார்கள். ஆனால் பூகோள

ரீதியில் மட்டுமின்றி, சரித்திரத்தின் அடிப்படையிலும் கவனித்தே இதன் தருமம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இவ்வளைகுடாத் தீவுகளில் பதினெட்டாண்டுகளுக்கு முன் எகிப்து ராணுவ தளங்கள் அமைக்க முற்பட்டபோதே அமெரிக்கா விழிப்புடனிருந்து அதை ஆட்சேபித்தது. அதற்குப் பதிலாக எகிப்து சர்க்கார், தனது நடவடிக்கையால் கால்வாயின் போக்குவரத்துக்கு எவ்வித ஊறும் விளைவிக்கப்படாது என்றும், முன்பிருந்தது போலவே இனி எப்போதும் அது சர்வதேச சட்டத்துக்கு ஒப்ப அனைவருக்கும் சுதந்திர வழியாக இருக்கும் என்றும் உறுதி கூறியது.

பத்தாண்டுகளுக்குமுன் அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் அவர்கள் இதை வலியுறுத்தியும் சூயஸ் விஷயமாகவும் கூறியது குறிப்பிடத்தக்கது: ''அகாபா வளைகுடா சர்வதேச மார்க்கம் என்றும் அதில் செல்வதைத் தடுக்க எந்த நாட்டுக்கும் உரிமை கிடையாது என்றும் நாம் வற்புறுத்தியுள்ளோம். சூயஸ் கால்வாய் விஷயமாக பந்தோபஸ்து சபை நிறைவேற்றிய ஆறு கொள்கைகளை ஒப்புக் கொண்ட எகிப்து, அக்கால்வாயில் எவ்விதப் பாகுபாடுமின்றிச் சுதந்திரப் பயணம் நடைபெற உறுதி கூறிற்று. எந்த நாட்டின் அரசியலோடும் கால்வாயின் போக்குவரத்தைச் சம்பந்தப்படுத்துவதில்லை என்ற விதிக்கும் எகிப்து கட்டுப்பட்டது. இந்த உடன்பாட்டையோ சர்வதேச ரீதியில் அமைந்த வேறெந்த உடன்பாடுகளையோ எகிப்து துரதிர்ஷ்டவசமாக மீறுமாயின் அதை உலக நாடுகளின் சமூகம் கடுமையான முறையில் கையாள வேண்டும்'' என்றார் ஐஸன்ஹோவர்—பத்தாண்டுகளுக்கு முன்பே!

அடுத்தடுத்து இரண்டு கூட்டங்கள் நடத்தி பந்தோபஸ்து சபை போர் நிறுத்தத் தீர்மானம் கொண்டு வந்தது பாராட்டத்தக்கது. முதலில் கருத்து வேற்றுமை கொண்டிருந்த நாடுகளும் பிறகு ஒன்றுபட்டு இத்தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது உலக நாடுகளுக்குச் சமாதானத்தில் உள்ள ஆர்வத்தைப் பிரதிபலிக்கிறது. 'போரை நிறுத்தோம்' என்று முதலில் பிடிவாதமாயிருந்த நாஸர், பிற்பாடு உலக நாடுகளின் கருத்தை மீறிச் செல்ல முடியாமல் இணங்கியது நல்ல செய்தி.

உண்மைப் பிரச்னை இந்தப் போர் நிறுத்தத்தோடு தீர்ந்து விடுமா? எகிப்து மீண்டும் துராக்கிரகம் செய்யாமலிருக்க வழி காண்பதல்லவா பிரச்னை? இஸ்ரேல் என்ற ஒரு ராஜ்யம் யூதர்களின் பொருட்டாக ஏற்படுத்தப்பட்டு, பொருளாதாரத்தில் நல்ல முறையில் முன்னேற்றம் கண்டு வந்த போதிலும், அப்படியொரு நாடு இருக்கக் கூடாது என்று கருதுபவர்களின் எண்ணத்தைக் களைவதல்லவா உண்மையான பிரச்னை? இஸ்ரேல் வாழ வேண்டுமா, அல்லது அது சர்வதேசங்களும் செய்த ஒரு தப்பிதம் என்று கருதி அதை ஊதித் தள்ளிவிட வேண்டுமா? 1956—ல் சூயஸ் விவகாரத்தின்போது, இஸ்ரேல் எப்போதேனும் தாக்கப்பட்டால் அதற்கு உதவுவதாக உறுதி கூறிய அமெரிக்காவும் பிரிட்டனும் பிரான்சும் ராணுவ ரீதியில் வேண்டுமாயின் 'நடுநிலைமை' வகித்துவிடலாமேயன்றி மனச்சாட்சியின் அடிப்படையில் இவ்வாறு விலகி நிற்க முடியுமா?

யூதர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட சர்வதேசக் காப்பை இப்போது தொடர முடியாதெனில் புதிய இஸ்ரேல் ஒன்று உருவாக வல்லரசுகள் வழி கண்டாக வேண்டும். இஸ்ரேலியர் அண்டை நாட்டினரின் வெறுப்பைப் பெறாமல், எந்தப் பகைவர் எப்போது தம்மைச் சூழ்ந்து கொள்வர் என்ற பயம் இன்றி வாழப் புதிதாக அவர்களுக்கு ஓர் இடத்தை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இது இஸ்ரேலைப் பொறுத்தமட்டிலே கூறப்படும் யோசனை. ஆனால் இஸ்ரேல் இல்லாவிட்டால் இன்னொரு நாடு என்ற ரீதியில் உலகில் வேறு எங்கேனும் பேராபத்து ஏற்படுவதைத் தடுக்க வழி என்ன? சர்வநாச அணுகுண்டு என்ற பயங்கரம் சர்வதேச நடப்புகளின் மீது ஆதிக்கம் செலுத்துகையில் வீரப் பண்பு, நீதி, தார்மிகக் கட்டுப்பாடுகள் இவற்றுக்கு எங்கே இடமுள்ளது? இரு வல்லரசுகளிடமும் அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டதுடன் நாகரிகம், மனச்சாட்சி யாவும் நசித்து விட்டன. அதோடு, பலம் படைத்தவர்கள் பலவீனர்களைக் காக்க அஞ்சி, அக்கிரமத்தையும் ஆக்கிரகத்தையும் மனம் போனபடி செல்ல அனுமதிக்கும் போது உலகின் எதிர்காலம் பற்றி என்ன சொல்வது? இது போன்ற எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆயுதங்களினாலன்றி, பட்சபாதமற்ற ஓர் அகில உலக அமைப்பின் தீர்ப்பைக் கொண்டே பிரச்னைகள் தீர்க்கப்படும் நாள் என்று ஏற்படுமோ, அன்றுதான் உலகம் நிம்மதியாகப் பெருமூச்சுவிட முடியும்.

காமகோடியின் கருணை மொழி

வைரம் பாய்ந்த மரம் என்கிறோமே, அதுபோல் வேதம் வைரம் பாய்ந்ததாக இருக்கிறது. அநாதியாக வந்து கொண்டிருக்கும்படியான சட்டப் புத்தகம் அது. நாம் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றாலும், வேதம் எப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்கிறதோ, அதைத்தான் செய்ய வேண்டும். தர்மங்களுக்கெல்லாம் மூலமானது அதுதான்.



ராஜாஜியின் கருத்துக்கள்

இன்று உலக சமாதானத்துக்கு ஏற்பட்டுள்ள அபாயத்துக்கு ஊதாண்ட் அவர்கள் அவசரப்பட்டு ஐ. நா. படைகளை மேற்காசியாவிலிருந்து வாபஸ் வாங்கிக் கொண்டதும் ஒரு காரணமாகும். தமது செயலுக்கு அவர் தந்துள்ள விளக்கம் 'இலக்கிய ரீதி'யில் ஒரு சாதனையாக இருக்கலாமே யன்றி, ராஜரிகமாகத் திருப்திகரமானதல்ல. ஐக்கிய அரபுக் குடியரசுக்கு இச்சமயத்தில் இந்தியா தனது ஆதரவைப் பிரகடனம் செய்ததும் மற்றோர் அநுசிதமான, அவசியமில்லாத செயல். இவ்விஷயத்தைப் பார்லிமெண்டில் விவாதித்து அதன்பின் முடிவுக்கு வந்திருந்தால் இந்தியாவின் நிலை வேறுவிதமாயிருந்திருக்கும். முற்றிலும் வேறு விதமாயில்லாவிடினும், இப்போதிருப்பதை விடச் சற்றே கட்டுப்பாட்டுடனாவது இருந்திருக்கும்.

ஃஃஃ

மூலதனம் உருவாவதுதான் பொருளாதாரம் வளர வழி. வாயளவில் இந்த உண்மையை அனைவரும் சொல்கிறார்கள். ஆனால் மூலதனம் உருவாவதைத் தடுப்பதற்கே சகலமும் செய்கிறது சர்க்கார். தனி மரங்கள் செழிப்பாக வளர்ந்தால்தான் காடு செழிப்பாக வளர முடியும்.

பொருளாதார வளர்ச்சி என்பது தாவரங்களின் வளர்ச்சி போலும் பிராணிகளின் வளர்ச்சி போலும் நடக்கின்ற ஒன்றல்ல. இடைவிடாமல் தனிமனிதர்கள் ஈடுபாட்டுடன் உழைப்பதன் மூலமே இந்த வளர்ச்சி ஏற்படுகிறது. தனிமனிதர்கள் சுயேச்சையுடன் ஒரு நோக்கத்துக்காகச் செயலாற்றினால்தான் பொருளாதாரம் வளரும். 'தனி மனிதன், உழைப்பு — சேமிப்பு என்ற இலட்சியங்களுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதைப் பண வீக்கம் அரித்தெடுக்கிறது' என்கிறார் அமெரிக்க எஃகு கார்ப்பொரேஷனின் நிதிக் குழுத் தலைவர் ஸ்ரீ ராபர்ட் டைஸன். நம்முடைய ரூபாயின் மதிப்பு வீழ்ந்து வருவதும் ஸ்ரீ டைஸன் கூறும் அர்ப்பணப்பான்மைக்கு ஒரு விரோதியாகும்.

ஃஃஃ

தனியார் துறையின் திறமைக்கு ஒரு சான்று அமெரிக்க டெலிபோன்—தந்தி கார்ப்பொரேஷன். அது பெருத்த லாபம் ஈட்டுகிறது. இந்த லாபத்தையும் தொழில் விஸ்தரிப்புக்கே பயன்படுத்துகிறது. உலகிலேயே சிறந்த இந்த டெலிபோன் பணிக்கு உலகிலேயே மிகக் குறைவான கட்டணம் வசூலிக்கப்படுகிறது. மாறாக சர்க்கார் துறையில் உள்ள அமெரிக்கத் தபால் நிலையங்கள் ஆண்டொன்றுக்கு எண்பது கோடி டாலருக்கு மேல் நஷ்டப்படுகின்றன.

— ஃப்ரீமன்

ஃஃஃ

சென்னை நகரிலுள்ள பல அலுமினிய உருட்டு ஆலைகள் மூடப்பட்டு விட்டன. இதற்கு முக்கிய காரணம், புது பட்ஜெட்டில் ஒரேயடியாக அதிகரிக்கப்பட்டுள்ள வரி. சென்னை அலுமினிய உற்பத்தியாளர்கள் — வியாபாரிகள் சங்கத் தலைவர் சொல்லியிருப்பதிலிருந்து இவ்வாறு தெரிகிறது. இன்னும் பல ஆலைகளும் மூடப்படலாம் என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' கூறுகிறது. இதன்விளைவாக ஏழை மக்கள் வாங்கும் பாத்திரங்களின் விலை உயரும். இது மிகவும் துர்ப்பாக்கியமாகும்.

ஃஃஃ

வருஷ முடிவில் வருமானம் முழுவதையும் கணக்கிட்டு, வரி விதித்து, அதனை வசூல் செய்வதற்குப் பதில் அவ்வப்போது சம்பாதிக்கும்போதே வருமான வரி விதித்து விடலாம் என ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. இது நிருவாகத்தில் ஒரு முற்போக்குச் செயல் எனத் தோன்றக் கூடும். ஆயினும் இதில் யோசித்துப் பார்க்க வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. சம்பாதிக்கும் போதே வரி கட்டி விடுவதெனில் நஷ்டங்கள் ஏற்படும்போது என்ன செய்வது? நஷ்டத்துக்காக வரியில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் குறைக்கப்பட வேண்டுமல்லவா? முதலில் சர்க்காருக்கு வரி கட்டிவிட்டு, பிறகு நஷ்டத்துக்கான தொகையை அதனிடமிருந்து திரும்பிப் பெறுவது சிரமம். சம்பாதிக்கும் போதே வரி வசூல் செய்வதிலுள்ள வேகம், அதைத் திருப்பித் தருவதில் காணப்பட மாட்டாது. முந்தைய வருட மொத்த வருமானத்தைக் கணக்கிட்டு அதன் மீது வரி விதிக்கும் பழைய முறை பொருளில்லாமல் வகுக்கப்பட்டதல்ல.

ஃஃஃ

நேரு அவர்களைப் பற்றித் தாம் எழுதியுள்ள நூலில் க்ராக்கர் அவர்கள் தென்னிந்தியா பற்றிச் சொல்வது குறிப்பிடத்தக்கது:

> இந்தியக் குடியரசில் தென்னிந்தியா அற்பமாகவே கணிக்கப்படுகிறது. இது தென்னிந்தியாவுக்கு நீதி வழங்கியதாகாது என்பதோடு இந்திய தேசத்துக்கே ஒரு நஷ்டமாகும். ஏனெனில், சில முக்கியமான அம்சங்களில் தென்னிந்தியாவே தலைசிறந்து விளங்குகிறது. மற்ற பகுதிகளோடு ஒப்பிடுகையில் அங்கு வன்முறைகள் அதிகம் கிடையாது; முஸ்லிம்கள்பால் துவேஷம் அதிகம் கிடையாது; அங்குள்ள சர்வகலாசாலைகளில் ஒழுங்கீனமும் குற்றங்களும் அதிகம் கிடையாது. அங்கு அரசாங்க நிர்வாகம் மற்றப் பகுதிகளைவிட நல்ல முறையில் உள்ளது. அங்கு தூய்மை அதிகம். லஞ்ச ஊழல் மிகக் குறைவு. ஹிந்து மதத்தைப் பிற்போக்கான முறையில் நிலைநாட்டுகிற ஆர்வமும் தென்னிந்தியாவில் குறைவு. இந்தியாவில் ஆங்கிலம் ஓர் உயிருள்ள மொழியாகக் காக்கப்படுமாயின் அவ்வாறு காப்பது தென்னிந்தியாவாகவே இருக்கும்.

இந்தப் பாராட்டுரைகள் உண்மையானவை. ஆயினும் இந்தக் கெட்ட உலகில் எந்தத் துறையிலுமே நல்லதைக் கெட்டது அடித்துச் சென்று விடுகிறது என்பதை உணர்ந்து எச்சரிக்கையாயிருப்போம்.

என்ன சேதி?

- நீர்ப்பாசன வசதி
- சபாஷ் நேப்பாளம்!
- தமிழும் ஆங்கிலமும்

தமிழக அரசாங்கம் சிறிய நீர்ப்பாசன மராமத்து வேலைகளில் தீவிரமாக ஈடுபட முன்வந்திருப்பது விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெரு மகிழ்ச்சியளிக்கக்கூடிய விஷயமாகும். சோழர் காலத்திலும், பாண்டியர் காலத்திலும், பல்லவர்கள் காலத்திலும் வெட்டப்பட்ட ஏரிகளும் குளங்களும் வடிகால்களும் வாய்க்கால்களும் பழுது பார்க்கப் படாமல் பெரும் நீர்த் தேக்கங்களிலும் அணைக்கட்டுக்களிலுமே காங்கிரஸ் அரசாங்கம் கவனம் செலுத்தி வந்தது. காங்கிரஸ் அரசாங்கம் செய்யத் தவறியதை இப்பொழுது பதவிக்கு வந்துள்ள தி. மு. க. அரசாங்கம் செய்ய முன்வந்திருக்கிறது. மாவட்டந்தோறும் விவசாயப் பெருங்குடி மக்களின் மகாநாடு நடத்தி, ஆங்காங்கு ஏற்கனவே உள்ள நீர்ப்பாசன வசதிகளையும், சீர்ப்படுத்த வேண்டியவைகளையும் கேட்டறிந்து விரைவாகச் செயல்பட முன்வந்திருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் 30 நீர்ப்பாசன வேலைகள் தொடங்கத் தீர்மானித்திருப்பதாகவும், — அதற்கு எட்டுலட்சத்து எண்பதினாயிரம்ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருப்பதாகவும் திரு மு. கருணாநிதி அறிவித்திருக்கிறார். உடனடியாக இவ்வேலைகள் தொடங்கப்படுமாம்.

மொத்தம் இப்பணிக்கு நூறு கோடி ரூபாய் செலவாகுமாம். அதில் இவ்வாண்டு இருபத்தைந்து கோடியாவது செலவழித்து வேலை செய்ய வேண்டும் என்கிறார் மந்திரி.

இவை உணவு உற்பத்திக்கு, விவசாய வளர்ச்சிக்கு மிக அவசியமான செலவுகள் தான். ஆயினும் நிதிவசதி எங்கிருந்து செய்து கொள்ளப் போகிறார்கள் என்பதுதான் கேள்வி.

நேப்பாளம் சின்னஞ்சிறு தேசம். அதன் வடக்கே எகிப்துக்கு உதவத் துடிக்கும் சீனு இருக்கிறது. அதன் தெற்கேயுள்ள இந்தியாவோ, நாஸருக்குத் துணை நிற்பதாக எல்லாருக்கும் முன்னதாகப் பாரோர் அறியப் பிரகடனப்படுத்தி விட்டது. இந்த இரண்டு பெரிய நாடுகளிடையே அகப்பட்ட நேப்பாளம், துணிந்து நியாய உணர்வுடன் இஸ்ரேலை ஆதரிப்பதாக அறிவித்தது! 'சபாஷ்!' போடாமலிருக்கலாமா?

'மொழிபெயர்த்த புத்தகங்கள் மூலம் நம் மாணவர்களுக்கு விஞ்ஞானம் போதிக்க முற்பட்டால், வெளிநாட்டில் அதே வயது மாணவர்கள் அப்பாடங்களில் அடையும் தரத்துக்கு நாம் உயர ஒரு நூறாண்டு பிடிக்கலாம். ஆகவே, மாணவர்களின் நிலைக்குப் புத்தகங்களை இறக்காமல், மாணவர்களை விஞ்ஞானப் பாடங்களை மூல மொழியிலேயே படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு உயர்த்த வேண்டும். அது அவர்களுக்கு ஆங்கிலத்தில் நல்ல பயிற்சியளிப்பதின் மூலம் சாத்தியமாகக் கூடியதே. விஞ்ஞான, பொறி இயல் நூல்களை, தமிழில் மொழிபெயர்க்க முற்படுவது வியர்த்தம்' — இவ்வாறு சமீபத்தில் கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன் கூறியிருப்பதை வரவேற்கிறோம். தமிழ்ப் பற்றும் புலமையும் அவரது பிரத்தியட்ச நோக்கை மறைக்கவில்லை. சொன்ன மொழிகளைச் செயலில் நிறைவேற்ற முனைவார் என்று நம்புவோமாக!

மேற்காசியாவில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது கண்டு உலகம் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறது. எனினும் அராபியருக்கும் யூதருக்கும் இடையில் மனப் புகைச்சல் இன்னும் அடங்கவில்லையே! இந்த விரோதத்துக்கான அடிப்படைக் காரணங்களை இந்தக் கட்டுரை விளக்குகிறது.



யுத்த அரங்கம்

இயேசு பெருமான் சிலுவையில் அறையுண்டதற்கு யூதர்களே காரணம் என்பதாக, அந்த இனத்தின் மீதே கிறிஸ்துவ நாடுகளுக்கு மாறாத வெறுப்பு உண்டு. இவ்வித வெறுப்புக்குப் பாத்திரமான யூதர்களிற் மேற்கு ஐரோப்பாவில் வசித்து வந்தவர்கள் பிரஞ்சுப் புரட்சியின் (1789) போதுதான், 'கெட்டோ' எனப்படும் தமது வாசஸ்தலங்களுக்கு வெளியே வந்து சமூகத்திடை வாழவும், தொழிலும் வியாபாரமும் நடத்தவும் உரிமை பெற்றனர். சிறுகச் சிறுக இழக்காசியாவும் அவர்களுக்கு இந்த உரிமைகளை வழங்கிற்று. பல நூற்றாண்டுகளாக நசுக்கப்பட்டு வந்த யூதர்கள் மிகுந்த உற்சாகத்துடன் தொழில் புரிந்து விரைவிலேயே செல்வச் செழிப்பிலும், அறிவு வளர்ச்சியிலும் உயர்ந்த ஒரு சமுதாயமாகத் தங்களை நிலை நாட்டிக் கொண்டனர்.

சட்டப்படி அவர்களுக்குச் சமூக சுதந்திரம் அளிக்கப்பட்ட போதிலும் அவர்கள்பால் மற்றவர்களுக்கிருந்த வெறுப்பு நீடித்தது. 'கிறிஸ்துவின் மரணத்துக்குப் பொறுப்பான இனத்தைச் சேர்ந்தவர்களே யூதர்கள்' என்ற மதக் கொள்கையால் ஏற்பட்ட துவேஷத்தின் வலிவு குன்றவில்லை. இரண்டே ஆண்டுகளுக்கு முன்புதான் ரோமன் கத்தோலிக்கச் சர்ச்சின் நிர்வாக பீடம் இந்தக் கோட்பாட்டை அதிகாரபூர்வமாக ரத்து செய்தது. இப்போது படிப்பாளிகளான கிறிஸ்துவர்களில் பெரும்பாலோரிடை யூதத் துவேஷம் இல்லாவிடினும், அறியாதாரும் பின்தங்கிய வகுப்பினரும் பழைய துவேஷத்திலிருந்து இன்னமும் மீளவில்லை.

முற்காலங்களில் படிப்பற்ற யூதர்கள் தங்களுக்குச் செய்யுருவிலேயே கொடுமைகள் இழைக்கப்பட்ட போதிலும் அதிகமாக ஆத்திரமுறாமல் பொறுத்துக் கொண்டிருந்தனர். ஆனால் பிற்காலத்தில் படிப்பாளிகளான யூதர்கள் சட்டப்படி சுதந்திரம் பெற்ற பின்பும் தங்களிடம் காட்டப்படும் பகைமையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் ஆத்திரமடைந்தனர். 1890ம் ஆண்டுவாக்கில், யூதத் துவேஷம் மிக உச்சமாக இருந்த ஆஸ்திரியாவில் சில யூதர்கள் ஜியனிஸ்ட் சங்கம் என்ற ஒன்றை நிறுவினர். 'ஜியன்' எனப்படும் பாலஸ்தீனத்துக்கு யூதர்கள் திரும்புமாறு ஊக்க வேண்டும் என்பதே இச்சங்கத்தின் நோக்கம். ஆதியில் ஏப்ரஹாம் என்ற யூதத் தலைமைப் புருஷருக்கும் அவரது வழித் தோன்றல்களுக்கும் இந்த ஜியனை வாசஸ்தலமாகத் தருவதாக ஆண்டவனே வாக்குத் தந்ததாக யூதர்களின் மத நம்பிக்கை. இஸ்ரேலிலுள்ளது இந்தப் புனிதப் பிரதேசம்.

ஜியனிஸ்ட் சங்கம் தோன்றியபின் கொஞ்சம் கொஞ்சமாக யூத மக்கட் தொகை பாலஸ்தீனத்தில் கூடலாயிற்று. அப்போது பாலஸ்தீனம் அரபு நாடுகளில் ஒன்றாகத் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஆளுகையில் இருந்து வந்தது.

1914ல் முதல் உலக மகாயுத்தம் ஏற்படுவதற்குள்ளாக யூதர்கள் பல நாடுகளில் செல்வாக்குப் பெறலாயினர். அமெரிக்காவில் இவர்கள் பெற்ற செல்வாக்குக் குறிப்பிடத்தக்கது. இவர்களது ஆதரவும் தங்களுக்குக் கிடைத்தால் நல்லது என்று யுத்தகாலத்தின் போது பிரிட்டன் கருதி, அதற்காக முயற்சி செய்தது. எனவே யூதர்கள் பாலஸ்தீனத்தில் சுதேசம் எனத்தக்க குடியிருப்பு உரிமை பெறும் கொள்கையைப் பிரிட்டன் ஆதரித்தது. இதே சமயத்தில் துருக்கி சாம்ராஜ்யத்தை எதிர்த்து அரபுக் காலனிகள் கிளர்ச்சி புரியவும் பிரிட்டனே தூண்டுகோலாக இருந்தது. யூதர்கள் பெருமளவில் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறாமல் தாங்கள் தடுப்பதாக அரபுத் தலைவர்களிடம் அது உறுதி கூறியது.

முதல் யுத்தம் முடிந்தபின் பாலஸ்தீனத்தின் ஆட்சி உரிமையைப் பிரிட்டனுக்கே அளித்தது உலக மகாசபை. இப்போது பிரிட்டன், யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் தனித் தனியே தான் முன்பு அளித்த முரண்பட்ட வாக்குறுதிகளை அமுல் செய்ய வேண்டி

யதாயிற்று. முன்பு பாலஸ்தீனம் ஆண்டவனால் யூதர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடாக (Promised Land) இருந்தது. இப்போது பிரிட்டனே யூதர்களின், முகமதியர்கள் இருவருக்கும் அந்நாட்டை வாக்களித்ததால் அது ‘இருமுறை வாக்களிக்கப்பட்ட நாடு’ (twice promised land) என்று வேடிக்கையாகக் கூறப்படலாயிற்று.




இஸ்ரேல் பிரதமர் எஷ்கால்

1918ல் முதல் யுத்தம் முடிந்து 1939ல் இரண்டாம் யுத்தம் தொடங்குவதற்கு முன்னுள்ள இடைக்காலத்தில்யூதர்கள் பெருமளவில் பாலஸ்தீனத்துக்கு வந்து குடியேறினர். முக்கியமாக ஜெர்மனியில் யூதத் துவேஷம் மிகுந்த நாஜி ஆட்சி ஏற்பட்டபின் அவர்கள் கணிசமான அளவில் பாலஸ்தீனத்துக்குப் பெயர்ந்தனர். யூத சர்வகலாசாலை ஒன்று தொடங்கப்பட்டது. மெல்ல மெல்ல அவர்கள் ஓரளவுக்குச் சுயாட்சி அமைப்பொன்றையும் நிலைநாட்டிக் கொண்டனர். இம்மாதிரி நடவடிக்கைகள் ஏற்படுகையில் முகமதியர்கள் மேன்மேலும் வலுவாக ஆட்சேபணை தெரிவித்து வந்தனர். 1945ல் இரண்டாம் உலகப் போர் முடிந்தவுடன், ஐரோப்பாவில் இருந்த ஏராளமான யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேற விரும்பினர். இப்போது முகமதியர்களின் ஆட்சேபம் மிக வன்மையாயிற்று. அந்த நெரிசலில் யூதர்கள் பாலஸ்தீனத்துக்கு வருவதைப் பிரிட்டன் தடை செய்ய நேரிட்டது. பதிலடி தரும் உத்வேகத்துடன் யூதர்கள் பிரிட்டனுக்கு எதிராக ரகசிய ராணுவம் ஒன்றை நிறுவினர். உலக யுத்தத்தில் பங்கு கொண்ட பலர் இந்த ராணுவத்தில் சேர்ந்திருந்தனர். ரகசிய ராணுவம் பிரிட்டிஷ் சிப்பாய்கள் பலரைக் கொன்றது. கூட்டுச் சர்க்கார், தேசப் பிரிவினை என்பதுபோல் பல திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. ஆனால் இவை யாவும் கடைசியில் நிராகரிக்கப்பட்டன. ஒழுங்கீனம் தலைவிரித்தாடியது. உலகமகா சபை அளித்த ஆளுகை உரிமையைப் பிரிட்டன் தானாகவே கைவிட்டு விட்டுத் தனது படைகளைப் பாலஸ்தீனத்திலிருந்து வாபஸ் பெற்று விட்டது. உடனே யூதர்கள், முகம்மதியர்கள் இருவரும் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். ஓராண்டு இருதரப்புக்குமிடை போர் நடந்தது. ஐ. நா. சபை தலையிட்டுச் சமாதானம் செய்து வைத்தது. இஸ்ரேல் என்ற பெயரில் பாலஸ்தீனம் யூதர்களின் ராஜ்யமானதை உலக நாடுகள் பலவும் ஒப்புக்கொண்டன. ஆயினும் அரபு நாடுகள் மட்டும் இன்றளவும் இஸ்ரேலை அங்கீகரிக்கவில்லை.




இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி தயான்

எகிப்தின் தலைமையில் உள்ள அரபு நாடுகள், ‘பாலஸ்தீனத்தில் யூதர்கள் வசிக்கலாம்; ஆனால் அவர்கள் தனியாட்சி பெற்ற ராஜ்யமாக இருக்க முடியாது; தங்களுக்கு மேம்பட்ட ஓர் அரபு அரசாங்கத்தின் கீழேயே அவர்கள் இருக்க வேண்டும்’ என்று கூறுகின்றன. அரபு சர்க்கார் இனிப் புதிதாக யூதர்கள் இஸ்ரேலில் குடியேறுவதைத் தடை செய்யலாம் என்பது இதில் தொக்கி நிற்கிறது. பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முகம்மதிய அகதிகளுக்கு மீண்டும் அந்நாட்டில் நிலம் வழங்கி அவர்களை நிலைநிறுத்துவதற்கும் அரபு அரசு உரிமை கோரக்கூடும். பௌதிக பலத்தினாலேயே யூதர்கள் பாலஸ்தீனத்தைப் பிடித்துக் கொண்டு முகம்மதிய நிலச்சுவான்களை விரட்டியடித்ததாக அரபு நாடுகள் கூறுகின்றன. யூதர்களோவெனில், முகம்மதியர்கள் பாலஸ்தீனத்திலேயே இருப்பதற்குத் தாங்கள் மனமொப்புவதாகக் கூறுகிறார்கள். ஆனால் அரபு








நாடுகள்தான் அவர்களுக்குச் சபலம் உண்டாக்கி அவர்களைப் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேற ஊக்கம் அளித்துப் பிறகு தமது ராணுவத்தில் சேர்த்துக்கொண்டன என்கின்றனர். 'உங்களைக் கொண்டு பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்து, யூதர்களை வென்று, உங்களை மீண்டும் அந்நாட்டில் ஜயசாலிகளாக நிலைநாட்டுவோம்' என்று அரபு நாடுகள் பாலஸ்தீனத்து முகம்மதியர்களுக்கு ஆசை காட்டி அவர்களைத் தங்கள்பால் இழுத்துக் கொள்வதாக யூதர்களின் கூற்று. 1948–49ல் நடைபெற்ற மோதலில் யூதர்கள் அரபு நாட்டின்மீது பல கொடூரமான தீங்குகள் இழைத்தும் இருக்கக் கூடும். ஆயினும் அராபியர் வென்றால் யூதர்களின் ராஜ்ய உரிமையை அடியோடு அழித்து, அவர்களை எத்தகைய இன்னல்களுக்கு ஆளாக்குவர் என்பதுகுறித்து யூதர்கள் கொண்டுள்ள அச்சம் நடைமுறைக் கண்ணோட்டத்தில் மிகவும் நியாயமானதே.

எப்படியோ உலக நாடுகள் பலவும் ஒப்பிய இஸ்ரேல் என்ற யூதநாடு உருவாகிவிட்டது. இஸ்ரேல் ஒரு சிறிய தேசம். பரப்பளவு சுமார் எட்டாயிரம் சதுர மைல்கள். ஜனத்தொகை முப்பது லட்சத்துக்கும் குறைவு. இவர்களில் முஸ்லிம்களும், அரபுக் கிறிஸ்துவர்களும் பத்துச் சதவிகிதம். வெளிநாடுகளில் உள்ள தமது இனத்தவரின் பண உதவியாலும், தொழில்நுணுக்க அறிவாலும், செயலூக்கத்தாலும் யூதர்கள் ஒரு பாலைவனத்தைச்சுபிட்சம் மிக்க நவநாகரிக நாடாக மாற்றி விட்டிருக்கிறார்கள்.

ராணுவ பலத்தின் மீதே தங்கள் ஸ்தானத்தை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்ள இயலாது என யூதர்கள் உணர்ந்திருக்கின்றனர். எனவே அரபு நாடுகளுடன் சமாதானமாகப் போக அவர்கள் முயன்றிருக்கின்றனர். ஆயினும் அரபு நாடுகள் – குறிப்பாக எகிப்து– இஸ்ரேல் என்ற யூத ராஜ்யம் இருப்பதையே ஸ்திரமாக எதிர்த்து வருகின்றன. இரண்டு விஷயங்கள் மட்டில் வேறு விதமாக அமைந்திருப்பின் இந்தச் சர்ச்சை எப்போதோ தீர்ந்திருக்கக் கூடும். முதலாவது, இஸ்ரேல் நாடு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சூயஸ் கால்வாய்க்கும், செங்கடலின் முடியிலுள்ள டைரான் தீவுகளுக்கும் அகாபா வளைகுடாவுக்கும் அருகே இருப்பதால் வல்லரசுகளுக்கும் சச்சரவில் ஈடுபாடு உள்ளது. இரண்டாவது, மிகுந்த திறமையும் ஆதிக்க ஆசையும் கொண்ட நாஸரின் தலைமையில் நடந்த ராணுவ அதிகாரிகளின் புரட்சியால் எகிப்தின் முடியாட்சி கவிழ்ந்தது. வல்லரசுகளுக்கிடையில் உள்ள போட்டி பொறாமைகளை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நாஸருக்குத் தெரியும். புதிதாக வந்து குடியேறி, பழைய அரபியரை விடப் பணக்காரராகி விட்ட யூதர்களின்பால் அரபு நாடுகளின் ஏழை மக்களிடம் துவேஷ உணர்ச்சியைக் கிளப்புவது எப்படி என்பதும் நாஸருக்குத் தெரியும். மற்ற அரபு நாடுகளின் ஆட்சியாளருக்கு எதிராகத் தாம் செய்து வரும் சூழ்ச்சிகளுக்கும் பொதுமக்களின் வெறுப்பைப் பயன் செய்து கொள்ளுகிறார் நாஸர். 1956ல் சூயஸ் கால்வாயை, அதுகாறும் அதனை நடத்தி வந்த கம்பெனியிடமிருந்து பறிமுதல் செய்தார். ருஷிய ஆயுதங்களைப் பெற்று ராணுவத்தைப் பலப்படுத்தினார். இதைக் கண்டு அஞ்சிய இஸ்ரேல் பிரிட்டனையும் பிரான்ஸையும் துணை கொண்டு எகிப்தைத் தாக்கியது. ஆனால் வல்லரசுகள் தலையிட்டு நாஸரைக் காப்பாற்றின.

இப்போது, இந்த 1967ம் ஆண்டில் அவர் இஸ்ரேலுடன் பொருத விரும்பியிருக்க மாட்டார். ஏனெனில் இஸ்ரேலின் ராணுவம் எகிப்து ராணுவத்தைவிடச் சிறப்பான அமைப்புக்கொண்டது. நாஸரின் கூட்டாளியும், ருஷியாவின் ஆதரவு பெற்றதுமான ஸிரியா தலைதெறிக்கச் செயல்பட்டதாலேயே நாஸரும் இன்றைய சண்டையில் ஈடுபட நேர்ந்தது எனலாம். இஸ்ரேலுக்கு எதிராக ஆயுதம் எடுக்குமாறு நாஸர் அழைப்பு விடுத்தாலும் இஸ்ரேலுடன் போர் புரிய அவர் எண்ணியிருக்க மாட்டார். அராபியாவிலும் ஜோர்டானிலும் உள்ள முகம்மதியர்களை, அவர்களது ஆட்சியாளர்களுக்கே எதிராகக் கிளப்பிவிடும் உத்தேசத்தில்தான் நாஸர், 'இஸ்ரேலுக்கு எதிராகப் போர்க் கோலம் பூணுங்கள்' என்ற கோஷத்தை எழுப்பியிருக்கக்கூடும். ஆனால் அவரது திட்டம் குறி தவறி விட்டது!

— பி. ஸ்ப்ராட்



செயல்வீரர் சம்பந்தம்

சென்னை நகர மேயர் திரு சம்பந்தத்தின் வெற்றியின் ரகசியத்தை நகரசபையில் அவரது காரியாலய அறையில் அரைமணி நேரம் அமர்ந்திருக்கும் எவரும் எளிதில் புரிந்து கொள்வர்.

குளிர்ச்சி சாதனம் பொருத்தப்பட்ட அந்த நீளமான அறையில், விசாலமான மேஜை எதிரே — சுவரில் மாட்டப்பட்டுள்ள திரு அண்ணாதுரை அவர்களின் படத்துக்குக் கீழே — மேயர் வந்து உட்கார்ந்து விட்டாரானாலும் பிறகு அந்த அறைக்குள்ளே யார் வேணுமானாலும் நுழையலாம். கட்சியில் மிகுந்த செல்வாக்குள்ள ஒரு பிரபலஸ்தர் வரலாம்; தோட்ட வேலை செய்து பிழைத்து வரும் ஏழைக் குப்பம்மாளும் தயக்கமின்றி வரலாம். ஆனால் எல்லாரும் வரிசைக்கிரமப்படிதான் வர வேண்டும்! முதலில் வந்தவர்களைத்தான் முதலில் பார்ப்பார் அவர்!

மளமளவென்று அவர்கள் வந்த காரியத்தை விசாரித்து அப்போதைக்கப்போது தீர்மானமான ஒரு முடிவெடுத்து அனுப்புவதைப் பார்க்க வியப்பாக இருக்கும். இழுத்துப் பறித்துக் கொண்டு நிற்கும் விவகாரமே கிடையாது. எத்தனையோ அலுவல்களிடையே தன்னம்பிக்கையுடன் துரிதமாகச் செயல்படுவார். அரட்டை அடித்துக்கொண்டு சில விநாடிகள் கூட யாரும் அந்த அறையில் அமர்ந்திருக்க முடியாது. எப்பேர்ப்பட்ட பெரும் புள்ளிகளாகத்தான் இருக்கட்டுமே, ''பக்கத்தில் ஓய்வெடுக்க என்று ஒரு தனி அறை இருக்கிறது. உங்களுக்கு நேரமிருக்குமாயின் அங்கு போய்ச் சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வாருங்களேன்'' என்று கூறி அனுப்பி விடுவார்.

மேயர் சம்பந்தம் அவர்களைக் காலை, மாலை நேரங்களில் கவர்ந்திழுத்து அவரது தேக ஆரோக்கியத்துக்கும் உதவுகிற ஹாக்கி மட்டையுடன் அவரை ஒப்பிடலாம். ஹாக்கி மட்டை நேராக இருக்கும்; கீழ்ப் பாகத்தில் மட்டும் வளைந்திருக்கும். சம்பந்தம் அவர்களும் நேர்மையானவர், கண்டிப்பானவர்; ஆனாலும் மென்மையானவர், வளைந்து கொடுப்பவர்.

ரஷ்யாவில் வால்கோகிராட் நகரசபையினர் இந்திய — சோவியத் நட்புறவை வளர்க்கும் முகமாகச் சென்னை நகரசபையினரோடு நெருங்கிய தொடர்பு கொள்ள ஆசைப்பட்டனர். இரு நகரங்களையும்,— 'இரட்டை நகரங்களாக்கி'க் கொண்டு சென்னை நகரசபையின் ஏழு அங்கத்தினர்களை ருஷ்யாவுக்கு வரும்படி அழைப்பு விடுத்தது, வால்கோகிராட் நகரசபை. இந்த அழைப்பை ஏற்றுச் செல்லும் அங்கத்தினர்கள் பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள். மேயர் சம்பந்தம், நகரசபை காங்கிரஸ் கட்சி தலைவர்களான விநாயகமூர்த்தி, குப்புசாமி, தி. மு. க. கட்சித் தலைவர் வி. முனுசாமி, மத்திய நிதிக்குழுத் தலைவர் சா. கணேசன், பழைய மேயர் கிருஷ்ணமூர்த்தி, முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் காஜா மொய்தீன் ஆகியோர் ரஷியா, போலந்து, கிழக்கு மேற்கு ஜெர்மனிகள் ஆகிய நாடுகளுக்கு ஜூன் 19ந் தேதி பயணமாகிறார்கள்.

சென்னை நகரசபை அங்கத்தினர்கள் அறுவர் அடங்கிய குழுவுக்குத் தலைமை தாங்கி அயல்நாடு செல்லும் மேயர் அவர்களுக்குக் குடிசை வாழ்வோர் முதல் முதலமைச்சர் வரை தமிழர் அனைவரது நல்வாழ்த்துக்களும் உண்டு.

அயல்நாடு செல்லும் இக்குழுவினரை வாழ்த்தியும் குழுவுக்குத் தலைமை தாங்கும் வாய்ப்புப் பெற்ற சம்பந்தம் அவர்களைப் பாராட்டியும் சிலர் இங்கு பேசுகிறார்கள்:

சென்னை நகரசபையின் ஆணையாளர் திரு அம்பாசங்கர்:

''ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் மட்டும் சென்றால் அவர்கள் அங்கு

கண்டவற்றைச் செயல் முறையில் கொணர இங்கு எதிர்க் கட்சிகளிடம் வாதாட வேண்டியிருக்கும். கூட எதிர்க்கட்சியினரும் செல்வதால் எவ்வித சர்ச்சையுமின்றிப் பல நல்ல திட்டங்களைச் செயல் முறைக்குக் கொணரச் சௌகரியமாயிருக்கும்!

"நகராட்சியைப் பற்றிய புதுமைக் கருத்துக்களை ஏட்டளவில் படித்துத் தெரிந்து கொள்வதைவிட நேரில் கண்டறிந்து வந்து அந்த நவீன முறைகளை நம் நாட்டிலும் அமுலாக்க முனைவது நலமல்லவா?" இப்படிக் கூறும் ஆணையாளர் அம்பா சங்கர் மேல்நாடுகள் பலவற்றுக்குச் சென்று திரும்பியவர். அங்கெல்லாம் பாதைகள் அமைத்தல், நகர சுத்தி கரிப்பு முதலிய துறைகளில் உள்ள நவீன முன்னேற்றங்களைக் கூடிய மட்டில் இங்கும் செயலாக்கிப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் உள்ள இவர், இக்குழுவின் அயல்நாட்டு விஜயம் அதற்குத் துணை புரியும் என்று நம்புகிறார்.






தொடர்ந்து ஐந்து மேயர்களுக்கு அந்தரங்க உதவியாளராக நகர சபையில் பணியாற்றி வரும் திரு ரங்கநாதன்:

"மேயர் சம்பந்தம் 1929ம் வருஷம் மார்ச்சு மாதம் 3ந் தேதி பிறந்தவர். நுங்கம்பாக்கம் நகரசபை உயர்நிலைப் பள்ளியில் படித்தவர். ஹாக்கி ஆட்டக்காரர். புகைப்பட நிபுணரும் கூட. இவருடைய பெருமுயற்சியினாலேயே நுங்கம்பாக்கத்தில் விளையாட்டு — பொழுது போக்கு நிலையம் உருவாயிற்று. இப்பொழுது கண்ணப்பர் திடலில் விளையாட்டு—பொழுது போக்கு நிலையம் ஏற்படுத்த முயன்று வருகிறார். எடுத்த காரியத்தைச் சீக்கிரம் முடிக்கவேணும் என்ற வேகமுடைய இளம் காளை."

நகர மன்ற உறுப்பினர் திரு நல்லதம்பி:

"எனது நெடுநாளைய அவா — சென்னை நகர சபையில் உள்ள எல்லாக் கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர் குழு அயல்நாடுகள் சென்று அங்குள்ள முன்னேற்றங்களை நேரடியாகக் கண்டறிந்து வந்து நம் நகரசபையில் கூடிய வரை அவற்றைச் செயலாக்க வேண்டும் என்பது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சி சென்னையில் இருந்தவரை இந்த எண்ணம் ஈடேற வில்லை. தமிழக அரசின் முதன்மந்திரி திரு அண்ணா அவர்கள் இந்த எண்ணத்தை இன்று செயலாக்கித் தந்துள்ளார்."





நுங்கம்பாக்கம் ராஜாஜி வடக்குச் சாலை பக்கத்தில் புஷ்பநகர் குடிசை வாழ்வோர் இருப்பிடங்கள் உள்ளன. எட்டுப் பேர்கள் அடங்கிய குடும்பம் வசிக்கும் எளிமையான சுத்தமான குடிசை ஒன்றில் நுழைகிறோம். 'வாங்க' என்று அழைத்து மேயரைப் பற்றிக் கூறுகிறார் சண்முகம்:

"இந்தக் குடிசைங்களை இங்கேயிருந்து கிளப்ப எத்தனையோ முயற்சிங்க செய்தாங்க. அந்த மவராசன்தான் எங்களுக்குக் காவலா நின்னு எங்களுக்கு இருப்பிடத்தை மீட்டுத் தந்தாருங்க. இருக்க இடம் தந்தவங்களை மறந்திட முடியுங்களா?"

"உங்கள் குறைகளையெல்லாம் அவர் கிட்டே போய் அடிக்கடி எடுத்துச் சொல்லுவீங்களா?" என்று கேட்டோம்.

"நாங்க எதற்குங்க அவர்கிட்டே போய்ச் சொல்லணும்? அவரேதான் எங்க இடத்துக்கு எங்களைத் தேடி வந்து எங்கள் கஷ்டங்களை நீக்கி விடுறாருங்களே?" என்று பெருமிதத்தோடு கூறினார் சண்முகம்.

மேயரின் கார் டிரைவர்:

"எனக்கும் மேயர் ஐயாவுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. எங்க ரெண்டு பேர் பேருமே சம்பந்தம்தானுங்க. நாங்க ரெண்டு பேருமே கார்ப்பொரேஷன் பள்ளியிலே ஒண்ணாப் படிச்சவங்க. நான் நாலு மேயர்கிட்டே டிரைவரா இருந்திருக்கேன். மேயர் ஐயாவும் நானும் பள்ளித் தோழர்களானாலும், உத்தியோக விஷயத்திலே கண்டிப்பா இருப்பாரு. முன்னே இருந்த நாலு மேயர்கள் காலத்திலே விட இப்போ அவர் கிட்டே குறைகளைச் சொல்லித் தீர்த்துக்கிடறவங்க அதிகமுங்க. நேரமாச்சு. கார் அவருக்குத் தயாராயிருக்கணும். நான் வரேன்!"





முன்னாளில் நகரசபை நிதிக் குழுத் தலைவராகப் பணியாற்றியுள்ள திரு முருகேசன்:

"சம்பந்தம் செயல் வீரர். தி. மு. க. கொள்கைப் போராட்டங்களுக்காகப் பலமுறை சிறை சென்றவர் சம்பந்தம். நுங்கம்பாக்கம் தேசியப் பூங்காவிலிருந்து மும்முனைப் போராட்ட காலத்தின்போது போலீஸ்காரர்கள் இவரை ஓடும்படி தடியால் அடித்துத் துன்புறுத்தினர். பலத்த அடிபட்டும் மெதுவாக நடந்து சென்ற தீரத்தை இன்றும் நினைவு கூருகிறேன். இப்படிப்பட்டவரின் தலைமையில் அயல்நாடு செல்லும் குழுவுக்கு என் வாழ்த்துக்கள்."

WHATEVER YOUR AGE... YOU HAVE EVERY RIGHT TO LOOK YOUNG -YOU CAN WITH



Tolbro CREAMS



TI-4

Tolbro international 4, Wilson Road, Ballard Estate, Bombay-1.

Branches :

Mirsapur Road, AHMEDABAD-1 ○ 5, Residency Road, BANGALORE-25
1, Lindsey Street, CALCUTTA-16 ○ 113, Golf Links, NEW DELHI-3
Purushotham Building, 193, Mount Road, MADRAS-2
16, Vijay Plot, RAJKOT-2

□

WANTED STOCKISTS ALL OVER INDIA

வாலிப விருந்து

வெகு நாட்களுக்குப் பிறகு சந்திரபாபுவைத் திரையில் பார்க்கும் போது ஆறுதலாயிருக்கிறது. பெண் வேஷத்தில் வந்து அவர் அடிக்கும் கூத்து கொட்டகையைச் சிரிப்பினால் அதிர வைக்கிறது.

படத்திலேயே தம் பாத்திரத்தை உணர்ந்து நடித்திருப்பவர் டி. எஸ். பாலையா; அவருக்கு இரட்டை வேஷம். ஜமாய்க்கிறார்.

நமக்குப் பழக்கப்பட்ட கதைதான் ''வாலிப விருந்து''. ஒரு பணக்காரரின் சொத்தையும், அவரது ஏகபுத்திரியையும் அடைய ஒரு கயவன் திட்டமிடுகிறான்; அந்தத் திட்டத்தைத் தவிடுபொடியாக்கி, கயவனுக்கு நல்ல பாடம் கற்பித்துக் கன்னியின் கரம் பற்றுகிறான், ஒரு வாலிபன். அவன் தான் கதாநாயகன்.

பாரதியும், ரவிச்சந்திரனும் ஆடாத ஆட்டமில்லை இந்தப் படத்தில். கண்ணைக் கசக்குதல், கண்ணீர் விடுதல் ஆகிய எதுவும் இல்லாமல், ஜம் ஜம் ஜக்குச் சண்டையும், ஜம்மாளியுமாகப் படத்தைக் கடைசி வரையில் 'லைட்'டாகவே எடுத்திருக்கிறார்கள்.

படத் தயாரிப்பையும், டைரக்ஷன் பொறுப்பையும் முரசொலி மாறன் எம்.ஏ., ஏற்றுச் சிறப்பாய்ச் செய்திருக்கிறார்.

மேகலா பிக்சர்ஸின் ''வாலிப விருந்து'' ஒரு பொழுது போக்குச் சித்திரம்.





அதே கண்கள்

சாந்தி பவனத்தில் பல படுகொலைகள் நடந்து விடுகின்றன. ஆனால் அந்தக் கொலைகாரன் யார்? குடும்பத்தின் மூத்த பிள்ளை கமலநாதனா? அடுத்தவன் விமலநாதனா? குடும்ப நண்பர் டாக்டரா? குடும்பத்தில் ஒருவராக இருந்து சகோதரராகப் பழகிய நாட்டு வைத்தியரா? அல்லது கையில் அரிவாளோடு திரிந்த நாயரா? அதுதானே தெரியவில்லை! கதையின் முடிவை யாரிடமும் சொல்லக் கூடாது என்பது படத் தயாரிப்பாளர்களின் வேண்டுகோள். இதற்கு மேல் தொந்தரவு செய்யாதீர்கள்.


காஞ்சனாவுக்கு இந்தப் படத்தில் நிறையச் சந்தர்ப்பங்கள் அளிக்கப் பட்டிருக்கின்றன. குறைந்த உடையோடும், நிறைந்த சிரிப்போடும் படம் முழுவதும் தோழிகளோடு வளைய வருகிறார்; காஞ்சனாவோடு சேர்ந்து கூத்தடிக்கப் பல தோழிகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது போலவே ரவிச்சந்திரனுக்கும் கிடைக்கிறது. ஜமாய்க்கிறார்.

படத்தில் மறக்க முடியாத இடத்தைத் தேடிக் கொண்டவர் நாகேஷ். ஆணாகவும், பெண்ணாகவும் மாறி மாறி அமர்க்களம் பண்ணுகிறார்.

''அதே கண்கள்'' படத்தின் கதை, வசனம், பாட்டு ஆகியவற்றை விடச் சிறப்பாயிருப்பவை கண்ணையும் கருத்தையும் கவரும் மைசூர் பிருந்தாவனக் காட்சிகள். சாந்தி பவனம் செட் அருமையாயிருக்கிறது.


ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸின் ''அதே கண்கள்'' கண்ணுக்கினிய காட்சிகள் நிறைந்த ஓர் இனிய வண்ணப் படம்.

சூரன் பீட்டர் 10 வால்ட் டிஸ்னி



நண்பர்களையும் அன்பான தோழர்களையும் பிரிந்து தனியே தனது சிங்காதனத்தில் உட்கார்ந்திருந்த பீட்டருக்கு வேதனையும் அழுகையுமாக வந்தது. சதா ஆனந்தத்துடன் துள்ளித் திரிகின்ற அவனுக்கு இந்தத் தனிமை தாங்கமுடியாததாக இருந்தது. அந்தக் குழந்தைகளிடமெல்லாம் அவன் எத்தனை அன்பு காட்டினான்? மகிழ்ச்சியளித்தான்? இருந்தாலும் அவர்களுக்கு வீட்டு நினைவு, தாய்தந்தையரின் நினைவு மறக்கவே இல்லையே, ஏன்? அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எல்லாருமே போய் விட்டார்கள்.

அந்தச் சமயத்தில் வெண்டியிட மிருந்து வந்ததாக வந்த அந்தப் பெட்டி அவனுக்குச் சற்று ஆறுத லாக இருந்தது. அந்தப் பெட்டியிலே காப்டன் என்ன வைத்திருந்தான் தெரியுமா? குறித்த நேரத்தில் வெடித்து சர்வ நாசத்தை உண்டாக்கும் ஒரு வெடிகுண்டுதான் அதனுள் இருந்தது.





(தொடரும்....)

"வாருங்கள், என்ன வேணும்?"

'சித்திரி' வெய்யிலில் கண்களை இடுக்கிக் கொண்டு நடந்த நாங்கள் கடைக்குள் நுழைந்தோம். 'வாருங்கள், என்ன வேணும்?'— குளுமையான குரல் ஒன்று எங்களை வரவேற்றது.

கண்கள் இருட்டுக்குப் பழக்கப்படுவதற்கு முன்பாகவே, இளநங்கை ஒருத்தி இதழ்க் கடையில் இளநகையைத் தேக்கியவாறு எங்களெதிரே நின்றாள்.

''பிரஷர் குக்கரா? ஏர் கண்டிஷனரா?'' பக்கத்தில் நின்ற நண்பரைப் பார்த்துக் கேட்டேன்.



விற்பனையாளர் என்றால் பொருள் உற்பத்தியாளர், வாடிக்கைக்காரர் இருவருக்குமிடையே பாலமாகப் பணியாற்ற வேண்டும். இதற்கு மிக மிக முக்கியமானது முக மலர்ச்சி: சிடுமூஞ்சித்தனமல்ல. இந்த இயல்பில் தோய்ந்த பெண்கள் விற்பனையாளராக வந்தால், வியாபாரம் செழிக்கக் கேட்பானேன்?

0 0 0

இந்தப் பக்கத்தில்:
பிரஷர் குக்கர் வர்ணனை நடக்கிறது.

அடுத்த பக்கத்தில்:
ருக்மிணி சிவராமன், வசந்தா.

''என்ன 'ஸன் ஸ்ட்ரோக்'கா? நாம் வந்த காரியம் என்ன என்பதைக்கூட மறந்துவிட்டீரா?''

நண்பர் அடி எடுத்துக் கொடுக்கவே, ''உங்களையோ, உங்களைப் போல் ஒருத்தியையோ பார்க்க வேண்டும். அதற்கு முதலில் முதலாளி — டைரக்டர் யாருடையவாவது அநுமதியையாவது பெற வேண்டும்'' என்றேன்.

அவள் பேசாமல் டைரக்டரின் அறை வரைக்கும் எங்களுக்கு வழி காட்டினாள்.

முகம்மது இப்ராஹிம் கம்பெனியின் டைரக்டர்களில் ஒருவரான ஸ்ரீ நடராஜ முதலியார், 1931ம் ஆண்டு விற்பனையாளராக இந்த நிறுவனத்தில் சேர்ந்தவர். தமது செயல் திறன், சாமர்த்தியம் ஆகியவற்றின் உதவி கொண்டு இன்று டைரக்டராகவும் உயர்ந்திருப்பவர். இவரது அநுபவ அறிவு எத்தனை விற்பனையாளர்களைத் தயாரித்துத் தந்திருக்கிறதோ? இதோ, இந்த ருக்மிணி சிவராமனும் இவரிடம் பயின்று தேர்ச்சி பெற்றவர்தான். அதோ வருகிறாளே, அந்த வசந்தாவும் அவர் மேற்பார்வையில் தொழில் கற்றவர்தான்!

'' 'இதோ பாருங்க! இந்தத் தொழிலில் உங்களுக்கு நாட்டம் செல்வானேன்?' என்று இவங்களை நீங்க கேட்பீங்க. என்னைக் கேட்டால், இந்தத் தொழில் சொல்லி வருவதில்லே. குளத்திலே ஒருத்தனைத் தூக்கிப் போட்டால் ஒன்று அவன் நீந்தணும், இல்லே, தண்ணீரைக் குடித்து மூழ்கணும். இந்த இரண்டிலே ஒன்றுதானே நடக்க முடியும்? அதே போலத்தான் இந்தத் தொழிலுக்கு வருகிறவங்க, தன் முயற்சியிலே முன்னுக்கு வரணும், அல்லது... என்ன நான் சொல்றது, ருக்மிணி? அடுத்தபடியாக இந்தத் தொழிலுக்கு முதல் தேவை முகமலர்ச்சி. என்னைப் போன்ற சிடுமூஞ்சிகளுக்கு இது சரிப்பட்டு வராது. அதனாலேதான்...''

நடராஜனை முடிக்க விடவில்லை, வசந்தா. ''...இந்தக் கம்பெனியிலே முதன் முதலாக நீங்கள் விற்பனையாளராகச் சேர்ந்தீங்க. முதல்தர விற்பனையாளர் என்று பெயர்வாங்கி இன்று டைரக்டராகவும் ஆகியிருக்கீங்க, இல்லையா?'' என்று கேட்டாள்.


''பழைய கதையை விடு, அம்மா! இந்தக் கணக்கையும் இதையும் அதையும் கட்டிக் கொண்டு மாரடிக்கிறதைக் காட்டிலும், உன்னைப் போல் விற்பனையாளராக இருந்தால் எத்தனை விதமான மக்களைப் பார்க்கலாம், பேசிப் பழகலாம் — இதோ பாருங்க, பெண்களை விற்பனையாளர்களாகப் போடுவதிலே என்ன லாபம் என்று கேட்டால், இவங்களுக்கு நல்ல வக்கீலையாகப் பேச வரும்.

சிரிக்கச் சிரிக்கப் பேசுவாங்க. ஆண்களைப் போலச் சட்டெனக் கோபிக்கக்க மாட்டாங்க. அப்படியே கோபிச்சுக்கிட்டாலும் அதிலேயும் ஓர் அழகு இருக்கும். என்னம்மா வசந்தா நான் சொல்றது....?''

''போங்க, சார்!''

''இப்படி நாணிக் குழைஞ்சா எப்படி?—உங்களைப் பற்றிக் கேட்டுப் போகத்தானே இவங்க வந்திருக்காங்க. சொல்லுங்க!'' —நடராஜன் ஃபைலைப் புரட்டத் தொடங்கி விட்டார்.

''இந்த வசந்தா மருத்துவக் கல்லூரியில் சேரவேண்டியவள் சார். மாயவரம் நாஷனல் ஹைஸ்கூலில் எஸ். எஸ். எல். சி. படித்தாள். அப்புறம் பி. யூ. ஸி.யை முடித்துக்கொண்டு மருத்துவக் கல்லூரிக்கு மனுப் போட்டாள். ஆனால் முகம்மது இப்ராஹிம் கம்பெனியிலே இடம் கிடைத்தது!''—சொன்னது ருக்மிணி.



''அதாவது இவள் மனுப்போட்ட வருஷம் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. தமக்கை வீட்டில் சும்மா உட்கார்ந்திருப்பானேன் என்று எண்ணியவள் ஒரு வருஷத்தை ஓட்ட இப்ராஹிம் கம்பெனியை நாடினாள். வேலை பிடித்துவிட்டது. இரண்டு வருஷமாக நிலைத்து விட்டாள்.'' —ஃபைலிலிருந்து தலையைத் தூக்கிச் சொன்னார் நடராஜன்.

''இரு சகோதரிகளுக்கிடையே பிறந்தவள் ருக்மிணி. தந்தை சேஷசாயி கைத்தொழில் எம்போரியத்தில் பணியாற்றுகிறார். கரம் பிடித்த கணவர் ஸ்ரீ சிவராமன் பாட்டர்சன் கம்பெனியில் வேலை பார்க்கிறார். செயின்ட் அந்தோணி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. தேறிய பின் 1962ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து இங்கு வேலை செய்கிறாள்.'' இது வசந்தா.

''சென்னையின் சுறுசுறுப்பான பகுதிதானே இந்த மவுண்ட் ரோடு? வேலைக்குச் சேர்ந்த புதிதில் எங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போலிருந்தது. ஆனால் டைரக்டரைப் போன்றவர்கள் தங்கள் அநுபவத்தையும் ஆற்றலையும் உபயோகித்து இந்தத் தொழிலின் நெளிவு—சுளிவுகளை எங்களுக்குச் சொல்லித் தந்தார்கள்.''

''இப்போதெல்லாம் வாடிக்கைக்காரர்கள் விஷயம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். தங்களுக்கு வேண்டியது என்ன? எங்கே என்ன நல்ல பொருள் கிடைக்கும் என்பதையெல்லாம் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வந்ததும் எடுக்கச் சொல்லிப் பார்த்து 'பில்' கிழிக்கச் சொல்லிவிடுகிறார்கள். முன்பெல்லாம் விலை பேரம் நடப்பதுண்டு. இப்பொழுதுதான் எந்தப் பொருளுக்கும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதே. அதனால் அவர்கள் விலைக் குறைப்புப் பற்றியும் எங்களிடம் வாதாடுவதில்லை.''

''எங்கள் டைரக்டரைப் போன்றவர்கள் அந்த நாளில் பட்ட சிரமங்கள், அநுபவங்கள் எல்லாம் இப்பொழுது எங்களுக்குக் கை கொடுத்து உதவுகின்றன. அந்த நாட்களில் அவர்கள் பட்ட சிரமங்களில் கால்வாசி கூடப் படாமல், நாங்கள் விற்பனையாளர் தொழிலை நடத்தி வருகிறோம். டைரக்டர் சார்! நீங்க ரேடியோ செட் விற்ற சம்பவம் சொன்னீங்களே?''

''என்னை ஏனம்மா இழுக்கிறீங்க உங்கள் பேச்சுக்கிடையில்?'' என்று இடைமறித்தார் நடராஜன்.

''இருக்கட்டும், பரவாயில்லை சொல்லுங்கள்'' என்று நாங்கள் தூண்டவே, ருக்மிணி தொடர்ந்தாள்:

''ஆமாம், சார்! ஒரு துரை இட்ட ரேடியோ விற்கிறதற்காகத் தலையிலே தூக்கிக் கொண்டு போயிருக்கிறாராம் இவர். அந்தத் துரைக்குப் பலபேர் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு ரேடியோ செட் காட்டியிருக்கிறார்கள்! அவர்கள் உடையையும் பேசும் முறையையும் பார்த்து யாருமே மயங்கி விடுவார்களாம். ஆனால் அந்தத் துரையை இவர் மயக்கி யிருக்கிறார். எப்படித் தெரியுமா? புழக்கடை வழியாகப் பட்லரைப் போய்ப் பார்த்து, அந்தத் துரைக்கு வேண்டியவர்கள் யார் என்று அறிந்து, அவர்களில் தம்மிடம் யாராவது ரேடியோ வாங்கியிருக்கிறார்களா என்று கண்டுபிடித்து, அவர்கள் பெயரைச் சொல்லி, ரேடியோவைச் சிறிதும் அலுக்காமல் டெமான்ஸ்டிரேட் செய்து காட்டி இரவு பன்னையும் கோட்டை விட்டு வீட்டுக்கு நடந்தே வந்திருக்கிறாராம்; ஆமாம், ரேடியோவைத் துரைக்கு விற்றுவிட்டுத்தான்!''

''ஒரு பொருளை எப்படியெல்லாம் சிரமப்பட்டு விற்க வேண்டும் என்பது இதிலிருந்து தெரியவில்லையா? அதற்கு எவ்வளவு பொறுமையும் சமத்காரமும் வேண்டும்? கடைக்கு வருகிறவர்கள் எல்லாம் பொருளை வாங்கி விடுவார்கள் என்று சொல்ல முடியுமா? அதை எடு, இதை எடு என்று கேட்டுப் பொறுமையைச் சோதிப்பார்கள். தளரக் கூடாது. வாங்காமலே போனாலும் முகம் சுடுக்கக் கூடாது. இன்று வெறுங்கையோடு திரும்புகிறவர்கள் நாளைக்கு நாங்கள் பண்பும் பணிவுமாகப் பழகியதை நினைத்து வரலாம்.

எங்கள் கையாலேயே பொருளை வாங்கிச் செல்லலாம் அல்லவா? எனவே, இந்தத் தொழிலுக்குப் பொறுமை மிக மிக அவசியம்.''

''அதோடு ஒரு பொருளைப் பற்றி அறியாதவர்களும் அப்பொருளை வாங்க வரலாம். 'மார்பி'க்குப் பதிலாகப் 'பர்பி' கேட்கலாம். அவர்கள் அறியாமையைக் கண்டு நாங்கள் நகைக்கலாமா? அவர்கள் தவற்றைத் திருத்துவதென்றாலும், அவர்கள் மனம் நோகாது திருத்தித் தேவையான பொருளைக் கொடுக்கத்தானே முயல வேண்டும்?''

''ஆளைப் பார்த்துப் பேசத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆடை அணிகளைக் கொண்டு ஒருவரை எடை போடக் கூடாது. கோட்டும் சூட்டும் போட்டிருப்பவர் எங்களோடு சரளமாகத் தமிழில் பேசலாம். சாதாரண வேட்டி கட்டியிருப்பவர் ஆங்கிலத்தில் பேசலாம். நமக்குத் தமிழ் தெரியாது என்று இவள் நினைத்து விட்டாளா? நமக்கு ஆங்கிலம் தெரியாது என்று இவள் நினைத்து விட்டாளா என்று அவர்கள் தங்கள் மனப் போக்குக்கு ஏற்றவாறு எண்ணத் தொடங்கலாம். எனவே, விற்பனையாளர் முதலில் பேசக் கூடாது. வாடிக்கைக்காரர்களைப் பேசவிட்டுப் பார்க்க வேண்டும். அப்புறம் அவர்கள் மனமறிந்து பேச வேண்டும்.''

''விற்பனைக் கலையைப் பொறுத்த வரை முக்கியமான இன்னொரு விஷயம் என்னவென்றால், பொருள் உற்பத்தியாளர், வாடிக்கைக்காரர் இருவருக்குமிடையே விற்பனையாளர்கள் பாலமாகப் பணியாற்ற வேண்டும். விற்பனையாளர்கள் தங்கள் பணியைச் செவ்வனே புரிந்தால்தான் பொருள் உற்பத்தியாளருக்கும் பயன் கிட்டும், வாடிக்கையாளர்களும் லாபமடைவர். எனவே, விற்பனையாளரின் பொறுப்பு இரட்டிப்பாகிறது!''

''விற்பனைத் துறை பற்றிச் சில புதிய கருத்துக்களைத் தெரிந்து கொண்டோம் இன்றைக்கு; நாங்கள் போய் வரவா?'' என்று கிளம்பினோம்.

''சார், இவர் உள்ளே நுழையும்போது பிரஷர் குக்கரோ ஏர் கண்டிஷனரோ கேட்டார்!'' என்றாள் வசந்தா டைரக்டர் நடராஜனைப் பார்த்து.

'பேஷ், விற்பனையாளர்களை நன்றாகத்தான் பயிற்றுவித்திருக்கிறார்கள்! இன்னும் சற்றுத் தாமதித்தால் ஏதேனும் ஒரு பொருளை நம் தலையில் கட்டி விடுவார்கள்' என்ற பயம் பிடித்துக் கொள்ளவே, அவர்கள் மேலே பேச முற்படுமுன் நாங்கள் அவசரம் அவசரமாக வெளியேறினோம்.

— ரா. வீ.

வர்ஜீனியா உல்ஃப் (ஆங்கிலம்)



மார்த்தா, ஜார்ஜ் தம்பதிகள் ஒரு நாள் இரவு ஒரு விருந்துக்குப் போய்விட்டு வீடு திரும்புகிறார்கள். ஓர் இளம் தம்பதியையும் தங்களோடு அன்றிரவு குடித்துக் குதூகலமாக இருக்க அழைத்துவிட்டு வருகிறார்கள். மார்த்தா, ஜார்ஜ் தம்பதிகள் ஒருவரை ஒருவர் வார்த்தைகளால், உணர்ச்சிக் கலவைகளால், கடந்த கால நிகழ்ச்சிகளால் தாக்கிக் கொள்கிறார்கள். இளம் தம்பதிகளும் இந்த உணர்ச்சிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கதைக்கு உயிரூட்டுகிறார்கள். இரவு முழுதும் இந்த நால்வரின் ஆசாபாசங்கள், கோபதாபங்கள், இன்பங்கள், கூச்சல்கள்தான். இடையிடையே பல மதுப் புட்டிகள் காலியாகின்றன. பொழுது விடிகிறது. கதையும் முடிகிறது! இதுதான் படம். ஐந்து அகாதமி பரிசுகளை அனாயாசமாகத் தட்டிக்கொண்டு போன படம். எலிஸபெத் டைலரும் ரிச்சர்டு பர்ட்டனும் வாழ்ந்து காட்டுகிறார்கள் — நிஜ வாழ்விலும் தம்பதிகளாதலால். மார்த்தாவின் பாத்திரப் படைப்பை அற்புதமான லாகவத்தோடு இணையற்ற முறையில் உருவாக்கிக் காட்டியிருக்கிறார் எலிஸபெத். பர்ட்டனோ வேளைக்கு ஓர் உணர்ச்சியை முகத்திலே தேக்கிக் கொண்டு வசனங்களைத்தான் எப்படி அற்புதமாகக் கையாளுகிறார்! இரவு பத்து மணியிலிருந்து அதிகாலை ஆறு மணிக்குள் நடக்கும் கதையானாலும் அதை நாம் மறக்க முடியாதபடி காமிராவைக் கையாண்டிருப்பதும் ஒலி, ஒளிப் பதிவுகளும் சிறப்பிடம் பெறுகின்றன. மிக மிக உயர்ந்த படம்.

விரும்பி ரசிக்க ஒரு முறை புத்தகத்தைப் படித்துவிட்டுப் போவது நலம்.

கண்ணே, சமையல் இதோ தயார்! லீக்கோ இருக்க கவலை ஏன்?

'லீக்கோ'-சிறந்த, சிக்கனமான, புகையற்ற எரிபொருள். எந்தவித கரி அடுப்பினிலும் உபயோகப்படுத்தவல்லது.

லீக்கோ

நேரத்தையும் சிலவையும் மிச்சப்படுத்துகிறது.

LECO நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட், நெய்வேலி-1.




சிறிய 'லீக்கோ' துண்டுகளை எடுத்துக் கொள்ளவும்



பிறகு மெல்லிய அடுக்காக அடுப்பினில் பரப்பி வைக்கவும்



வழக்கமான முறையில் எரிய வைக்கவும்



சில நிமிடங்கள் கழித்து நன்றாக சுடர் விட்டவுடன் மேலும் வேண்டிய அளவு 'லீக்கோ' சேர்த்துக் கொள்ளவும்



FDS NLC 711 TM



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை! கரைகடந்த நுரைவளம்! கேட்பானேன். சேலை, சிற்றுடை முதல் சிறுவரின் ஆடைவரை ... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை! கைப்பட வீட்டிலே துணி வெளுக்க ஒரே வழி! கைகண்ட ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

SU. 38-140 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

மூன்றாவது பரிசு நாவல்

மனக் கோலம்



பி.வி.ஆர்

அத்தியாயம் 11

"நீ ஒரு பைத்தியம், கமலா! அவரை அம்மாவே, நேருக்கு நேர் பார்த்து. 'வெளியேபோ'ன்னு சொன்னாக் கூடப் போக மாட்டார். நீ பாரேன்...'' என்று ஜானு முடிப்பதற்குள் அங்கே வந்த சீதா வெறுப்புடன், ''என்ன அம்மா, இங்கே ரகளை? பொழுது விடிஞ்சு பொழுது போறதுக்குள் யுத்தத்துக்கு மேலே யுத்தமா இருக்கு! ஜானு, என்னடி மறுபடியும் ரகளை?'' என்று கேட்டாள்.

ஜானு படபடப்புடன் அம்மாவின் கட்டளையைப் பற்றிக் கூறினாள்.

''அம்மா ஏதோ ஆத்திரத்திலே சொல்லி யிருப்பாள். நீங்க போங்கம்மா!''

''இல்லே அக்கா, அம்மா ரொம்ப ஸீரியஸாகத்தான் இருக்கா'' என்றாள் கமலா.

''இந்தக் கலியாணத்துக்கு அவர் தான் முட்டுக்கட்டை போடுகிறார்னு அம்மா நெனைக்கிறா.... போதாததற்கு இந்த அலமேலு மாமி வேறு நன்னா வத்தி வச்சு, ரம்பம் அறுத்திருக்கா!''

''இதோ பார் ஜானு! என் கலியாணம் நடக்கணும்னு என் தலையிலே எழுதியிருந்தால் இந்த உலகமே வந்தாலும் முட்டுக்கட்டை போட முடியாது. இதுவரையிலே நடந்ததெல்லாம் போகட்டும். இனிமே பேசாமலிருங்கள். வீடே களையிழந்து நிக்கறது. எனக்கு இருக்கவே பிடிக்கவில்லே.''

சீதாவின் வெறுப்பையோ விரக்தியையோ லட்சியம் செய்யாத ஜானு, நேரடியாக ஒரு கேள்வியை யாரும் எதிர்பாரா வண்ணம் கேட்டாள்.

''சத்தியமாச் சொல்லு அக்கா, உனக்கு இந்தக் கலியாணத்திலே இஷ்டம் இருக்கா?''

''ஏன் கேக்கிறே?....''

''உனக்குப் பூரணமா இஷ்டம் இருக்குன்னா சந்தானம் தலையிடாமே நானே கவனிச்சுக்கிறேன். அப்படி இல்லேன்னா நானே கிளம்பப் போறேன் இதை நிறுத்துவதற்கு!''

''நீ இவ்வளவு பெரிய லங்கிணியா?'' என்று இரைந்தாள் பாரதி.

''ஜானு! தலைகால் புரியாமல் குதிக்காதே. இன்னமே நம்ம இஷ்டத்துக்குன்னு ஒண்ணும் கிடையாது. அம்மா பேச்சைக் கேட்டு நடக்க வேண்டியதுதான் நம்ம பொறுப்பு...''

''அக்கா! அம்மாவை இந்த அலமேலு மாமி மயக்கினான்னா, நீயுமா மயங்கி விட்டே! உன் வாழ்க்கையை நீதான் வாழணுமே தவிர, இந்த அம்மாவோ அந்த மாமியோ இல்லை. தெரியுமா!''

''சரி சரி! நீ இப்போ போய் ரேடியோவைக் கேளு. உன் கொள்கையும் தத்துவமும் அப்புறம் பார்ப்போம்'' என்றாள் சீதா.


ஃ ஃ ஃ

ஜானுவும் கமலாவும் வெளியேறின பிறகு, சீதா ''அம்மா, ஏன் இப்படிச் சந்தானத்தை முகத்திலே அடிக்கிற மாதிரி கரிச்சுக் கொட்டறே? அவர் நல்லவர், பேசாமல் இருக்கார். இன்னொருத்தர்னா உன்னோட சமருக்கு நின்னு சமாளிக்க முடியுமா?'' என்று கேட்டாள்.

அலமேலு அம்மாள் சந்தானத்தைப் பற்றிச் சொல்லியிருந்த தகவல்களையெல்லாம் சொல்லிவிடலாமா என்று ஒரு கணம் யோசித்தாள் பாரதி. ஆனால் அடுத்த கணமே வேண்டாம் எனத் தோன்றியது. ஒரு வேளை அலமேலு சொன்னதெல்லாம் உண்மையாக இல்லாதிருந்தால்? மேலும் நேற்று ஜானு வந்து சமாசாரத்தைக் கொட்டிய பிறகு அவளுக்கே ஒரு சந்தேகமும் பயமும் பிறந்து விட்டனவே? ஜானு சொல்வது சரியாக இருந்தால் அலமேலு அம்மாளுடைய சகவாசம் எதில் கொண்டு போய் விடும்? அவளை நம்பிப் பாரதி பெண்ணைக் கொடுப்பது விவேகமா?

''ஏண்டி, எல்லாருமே என்னைப் போட்டு வதைக்கிறீர்கள்? என் மனமே குழம்பிக் கிடக்கு'' என்றாள் அவள்.

''எனக்குக் கலியாணம் பண்ணணும்னு உனக்கு ஆசை இருக்கிறதிலே தப்பு இல்லே. ஆனால் நீ அனாவசியமாக ஆத்திரப் படறேன்னு எனக்குத் தோணறது. கொஞ்சம் ஆர அமர யோசனை பண்ணி ஒரு தீர்மானமான முடிவுக்கு வாயேன். சந்தானம் இந்த வரன் தனக்குப் பிடிக்கவில்லை என்பதை என்னிடம் சொல்லாமல் சொல்லி விட்டார். ஜானு கமலா பேச்சிலிருந்தும் அப்படித்தான் தெரியறது. பத்து வருஷங்களாக இதே வீட்டிலே இருந்து மூணாம் மனுஷன் என்கிற பேதமே இல்லாமல் பழகிவிட்ட அவருக்கு இதிலே அவ்வளவு பிடித்தம் இல்லேன்னா, அதுக்குக் கண்டிப்பாக ஏதோ ஒரு காரணம் இருக்கணும். நீ அவசரப்படாமல் இருந்தேன்னா, அது என்னன்னு தெரிஞ்சிருக்கும்...''



நிதானமாக, கோவையுடனும், அர்த்த புஷ்டியுடனும் பேசிய சீதாவின் வார்த்தைகள் தன்னைக் கட்டிப் போடுவதை உணர்ந்தாள் பாகீரதி. தக்க பதிலைச் சொல்லத் தெரியாமலும் தவித்தாள். ஒரு விநாடி நேரத்துக்குச் சந்தானமும் அவளுடைய மனக்கண்ணுக்குப் பழைய சந்தானமாகவே தெரிந்தான்.

ஆனால் மனம் திடீரென்று மீண்டும் குழம்ப ஆரம்பித்தது. ரகுபதி! வீடு, வாசல், நிலம், மாத வருமானம், கார்! வாழச் சௌகரியங்கள்! சுக வாழ்வு! ஜானு கமலாவின் எதிர்காலம்!

இவையெல்லாம் பாகீரதியின் முன் நிற்க அவள் தலை சுற்றியது. ரகுபதி அயோக்கியனாகவே இருந்தாலும், கலியாணமானால் சரியாகிவிட மாட்டானா என்ற ஆதங்கம் தோய்ந்த கேள்வி ஒரு மூலையில் எழுந்தது. இந்த ஒரு கலியாணத்தினால் குடும்பமே கடைத்தேறிவிடுமே! இந்தத் தருணத்தைத் தவற விட்டால், இந்த ஜன்மத்தில் சீதாவுக்கு ஏது நல்ல இடத்தில் கலியாணம்? அப்புறம் ஜானுவுக்கும் கமலாவுக்கும் பாகீரதியால் என்ன செய்ய முடியும்? அலமேலு அம்மாள் பணத்துக்குக் கஷ்டப்படுகிறாள் என்பது உண்மையாக இருக்கலாம். அதற்காக ரகுபதி ஏதாவது உதவியும் செய்யலாம். ஆனால் அது

கலியாணத்தை நடத்தி வைக்கத்தான் என்று எப்படி எடுத்துக்கொள்வது! கதா காலட்சேபங்களிலும் கோவிலிலும் சந்தித்தபோதெல்லாம் முகம் மலரப் பாரேதிலை அணுகும் அலமேலு அம்மாளை எப்படிப் பொல்லாதவள் என்று நாக்கில் நரம்பில்லாமல் கூற முடியும்?


இத்தனை காலமாகக் கலியாணப் பேச்சையே எடுத்திராத அவன் திடீரென்று இப்போதுதான் தன் அண்ணா பிள்ளை இருப்பதை உணர்த்தியிருக்கிறான். அதற்குக் காரணத்தையும் சொல்லியிருக்கிறான். கலியாணம் ஆனதும் மனைவியை இழந்த ரகுபதி இத்தனை காலமும் மறுவிவாகத்துக்கு இசையாமல் இப்போதுதான் மனம் மாறியிருக்கிறான். இந்த அலமேலு அம்மாளுக்கும் சித்ராவின் வீட்டாருக்குமிடையில் என்ன நடந்ததோ? யாருக்குத் தெரியும்? ஜானு அரை குறையாகத் தெரிந்ததை வைத்துக்கொண்டு கச்சை கட்டிக்கொண்டு நிற்கிறாள்!

ஒருவேளை அவள் கொண்டு வந்த விஷயம் உண்மையே என்றாலும் இந்த வரனுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கும்! உலகம் ஊர் என்றால் நான்கு பேர் நான்கு விதமாகத்தான் பேசுவார்கள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே போனால் எங்கேதான் போய் முடியும்?

இந்தச் சீதா அவசரப்பட வேண்டாம் என்கிறாள். ஜானு கலியாணத்தையே நிறுத்தி விடுவேன் என்று பயமுறுத்துகிறாள்! சந்தானம் பட்டாசைக் கொளுத்தி விட்டு விட்டு வேடிக்கை பார்க்கிறான். அவளுடைய மனம் மட்டும் இப்போது நன்றாகக் குழம்பி விட்டது. எல்லோருமாகச் சேர்ந்து நன்றாகக் குழப்பி விட்டார்கள்!

இந்தக் குழப்பத்திலிருந்து அவளுக்கு விடுதலை கிடைக்க, கலியாணம் இல்லை என்றாகிவிட வேண்டும்; அல்லது சீக்கிரத்தில் அது நடந்தேறிவிட வேண்டும்!

வெகு நேரமாய் மௌனமாக நின்ற தாயாரின் முகத்தில் பற்பல உணர்ச்சிகள் பிரதிபலிப்பதைக் கண்ட சீதாவுக்குத் துக்கம் பீறிட்டு வந்தது.



பாவம், அம்மா! தன் வாழ்க்கையில் ஏறிவிட்ட சுமையைக் குறைக்க அவள் என்ன பாடு படுகிருள்!

"அம்மா!" என்று அவள் தாழ்ந்த குரலில் ஆரம்பிக்கவும், "பாகீரதி!" என்று அழைத்துக் கொண்டே அலமேலு அம்மாள் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

இப்போது பாகீரதியின் கண்கள் இருண்டன. தலை சுற்றியது. விழுந்து விடுவோமோ என்ற பயத்தில், கவரைப் பிடித்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

'**நீ**ன் கண்ணு பிள்ளை' என்று அலமேலு அம்மாள் ரகுபதியை உறவு கொண்டாடினுளே ஒழிய, உண்மையில் அவள் அவனுடைய அத்தை அல்ல. ஏதோ ஒரு தூரத்து பந்தம். அவ்வளவுதான். ரகுபதி பணக்காரன் என்பது உண்மைதான். சென்னையிலே வீடும் காரும் ஊரிலே நெல்லும் வீடும் இருப்பதெல்லாம் பொய்யல்ல. ஆனல் இவை யாவும் பிதிரார்ஜிதமாக வந்தவை என்று அலமேலு சொன்னுளே அதுதான் கலப்படமில்லாத பொய். ரகுபதி சம்பாதித்துச் சேர்த்த சொத்து இவை! ஆனல் அவன் எப்படிச் சம்பாதித்தான்?

இந்தக் கேள்வியை எத்தனையோ பேர்கள் தங்களுக்குள்ளேயே கேட்டுக் கொண்டு விடை சொல்லத் தெரியாமல் விழித்துக் கடைசியில் கேள்வியையே மறந்து போனுர்கள். ரகுபதியே கூடக் கடந்த சில ஆண்டுகளாக, தனது பூர்வாசிரமத்தை மறந்திருந்தான். இப்போது திடீரென்று தான் சீக்கிரத்தில் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்க, அதன் விளைவாக அலமேலுவின் உதவியை நாட, அவள் பாகீரதியின் பெண் சீதாவைப் பிரேரேபிக்க, அதன் முகாந்திரமாகச் சந்தானம் சொல்லாமல் கொள்ளாமல் அவன் முன் வந்து நின்ற போது மறந்திருந்த பூர்வாசிரமம் நினைவுக்குத் திரும்பியது. அதோடு மட்டுமல்லாமல் இது வரையில் உணர்ந்திராத பயமும் பிறந்தது. சந்தானம் சீதாவின் பொருட்டுத்தான், பாகீரதி அம்மாள் அனுப்பி வந்திருக்கிருன் என்ற மனச் சமாதானம் இருந்தாலும் அது அதிக நேரம் நீடிக்கவில்லை. ஒரு காலத்தில் ரகுபதி, தேவி கம்பெனியிலிருந்துவிட்டு வெளியேறியவன். அதே கம்பெனியின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருப்பவன் சந்தானம். எந்தச் சூழ்நிலையில், என்னென்ன காரணங்களுக்காக ரகுபதியைக் கம்பெனியிலிருந்து நீக்கினுர்கள் என்ற உண்மைகளையெல்லாம் சந்தானம் கண்டிப்பாக அறிந்து வைத்திருப்பான். இந்தக் காரணங்களினுலே சீதாவுக்கும் அவனுக்கும் கலியாணம் தடைப்பட்டுப் போய்விடலாம்! இதைப் பற்றிக்கூட ரகுபதி கவலைப்பட வில்லை! கம்பெனியைப் பொறுப்புடனும் கண்ணியத்துடனும் சந்தானம் நடத்துகிருன் என்ற செய்தியை அவன் மற்றவர்களிடமிருந்து கேள்விப் பட்டிருக்கிருன். அப்பேர்ப்பட்டவன் திடீரென்று சீதாவின் கலியாணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அவனுடைய பழைய புராணத்தையும் இப்போதுள்ள உத்தியோகத்தைப் பற்றியும் அலச ஆரம்பித்து விட்டால்?

ஆரம்பித்து விட்டால்....?

ஒரு நிமிடத்துக்கு ரகுபதியின் உடல் நடுங்கியது! ஆனல் இந்த மாதிரி எத்தனையோ நூற்றுக்கணக்கான நடுக்கங்களுக்குப் பிறகுதான் இந்த வீடு வாசல்கள் எல்லாம் அவனுக்குக் கிடைத்திருக்கின்றன. சந்தானத்தைப் போன்ற எதிரிகளைச் சமாளிக்கச் சாதுரியம்தான் ஏற்ற ஆயுதம்.

ரகுபதி மெள்ள எழுந்து அலமாரியைத் திறந்தான். பாட்டில், சோடா, தம்ளர்கள் எல்லாம் ஒவ்வொரு படியிலும் இருந்தன.

ஒரு கண்ணுடித் தம்ளரில் பானத்தை ஊற்றி விட்டு, சோடா பாட்டிலையும் எடுத்துக் கொண்டு கட்டிலுக்கு வந்து அமர்ந்தான்.

கொஞ்சம் கொஞ்சமாக, சொட்டுச் சொட்டாகச் சோடா கலந்த பானத்தை அவன் உறிஞ்சும் போது அலமேலுவும் சேஷனும் கண்முன் வந்து நின்ருர்கள்.

அவனுக்குப் பார்க்கிற பெண்களையெல்லாம் ஊர்வசி, திலோத்தமை என்றெல்லாம் வாயளாவப் புகழும் அலமேலுவுக்கு ஒரு கோடி காட்டி விட்டால் போதும். அவள் ஊர் முழுதும் சந்தானத்தைப் பற்றித் தூற்ற ஆரம்பித்து விடுவாள். ஆனல் அதை ரகுபதி விரும்ப மாட்டான். பாகீரதியின் ஒர் உள்ளத்தில் மட்டும் விஷம் தோய்ந்தால் போதும். இன்னும் ஒரு நூறு ரூபாய் அதிகம் தருகிறேன் என்ருல், அலமேலு கச்சைக் கட்டிக்கொண்டு இறங்கிவிட மாட்டாளா ?

அப்புறம் ஆபீஸ்! அங்கே ரகுபதியின் ஆள் சேஷன் இருக்கிருன். எத்தனை சிரமப்பட்டும் 'பர்மிட்' பெற முடியாமல் தவிக்கும் சேஷன் வாரத்துக்கு ஒரு தடவையாவது பல்லைக் காட்டிக் கொண்டு ரகுபதியிடம்தானே வருகிருன்? எத்தனை நாட்கள் அவன் ரகுபதியின் வீட்டிலேயே விழுந்து கிடந்திருக்

கிறான்? இந்தச் சேஷனை அவன் விலைக்கு வாங்கப் பணமா கொடுக்க வேண்டும்! கம்பெனியில் ஒரு பீரோவில் உறங்கிக் கிடக்கும் 'பைலை' ஒரு பாட்டிலுக்குப் பெற்று விடலாமே! அப்புறம் சந்தானத்தின் கை ஒடிந்த மாதிரித்தான். வீட்டில் அவனுடைய யோசனைகளோ, எதிர்ப்புக்களோ பாகீரதியிடம் செல்லாது. ஆபீஸிலும் அவனால் எந்த நடவடிக்கையும் இனிமேல் எடுக்க வேண்டும் என்று அவன் நினைத்திருந்தாலும், எடுக்க முடியாது!

தன்னுடைய அழகான திட்டத்தைப் பற்றி அவன் நினைத்துப் பார்த்த போது அவனுக்கே பெருமையாக இருந்தது. 'சந்தானத்தின் வாலை அறுத்து விடுகிறேன்' என்று சற்று உரக்கவே கூறிக் கொண்ட அவன், தம்ளரை மீண்டும் நிரப்பிக் கொள்ள அலமாரியை நோக்கித் தள்ளாடினான்.

அப்போது இரவு மணி ஒன்று.

ஃ ஃ ஃ

மறு நாளே அதிகாலையில் ரகுபதி தன் திட்டத்தின் முதல் பகுதியைச் செயலாக்கக் கிளம்பினான். ரகுபதியைக் கண்டதும் அலமேலு ஆச்சரியப்பட்டுப் போனாள்.

''வாப்பா, ரகு! உட்கார்.... உட்கார்.... இதோ, காப்பி கொண்டு வர்றேன்!'' என்று உபசரித்தாள்.


''நான் காப்பிக்கு வரல்லே!'' என்றான் அவன்.

அலமேலு வீட்டுக்கு அவன் இதற்கு முன் அதிகம் வந்ததில்லை என்றாலும், அவளுடைய காப்பி குடிக்கும்படியாக இருக்கும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

''என்ன விசேஷம்?'' என்று அலமேலு கேட்டாள். முந்தா நாள் வரைக்கும் அவன் சீதாவைக் கலியாணம் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்லியிருந்தான். அந்த எண்ணத்தை மாற்றி விட்டு, அதைச் சொல்லத்தான் வந்திருக்கிறானோ? திடீரென்று பயமும் ஏமாற்றத்தின் முன் நிழலும் அவளுடைய உள்ளத்தில் பிறந்தன. இந்தக் கலியாணம் நடக்காவிட்டால், அவளுக்கு அவன் தரச் சம்மதித்திருந்த ஐந்நூறு ரூபாய் இல்லாமல் போய் விடுமே? பரிதாபமாக அவள் அவனைப் பார்த்தாள்.

''நான் எதுக்கு வந்திருக்கிறேன்னு கேட்கிறியா?'' ரகுபதி வேறு யாராவது இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தான்.

அந்தப் பார்வையைப் புரிந்து கொண்ட அலமேலு, ''யாருமில்லே,



பசுவின் குடல் அதாவது இரைப்பையை ஒரு பெண்மணி எடுத்து பாங்கி நிபுணர்களுக்கு பார்சல் செய்தாள். அதோடு பல ஆயிரம் கில்ட் (டச்சு வெள்ளிக் காசு) மதிப்புள்ள நோட்டுக்களை இந்தப் பசு தின்று விட்டது. ஆராய்ந்து முடிவு செய்து நியாயமான தொகையை எனக்கு அனுப்பி வையுங்கள் என்று வேண்டுகோளும் அனுப்பியிருந்தாள்.

நிபுணர்கள் பரிசோதித்து உண்மையே என்று கண்டுபிடித்து உரிய புதிய நோட்டுக்களைப் பசுவின் சொந்தக்காரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

இப்படித்தினமும் பல புகார்களும் சோதனைகளும் வந்து சேருகின்றன நெதர்லாந்து பாங்கிக்காரர்களுக்கு.

ஆதாரம்: 'தி நெதர்லாண்ட்ஸ்'

தகவல்: 'ரமணன்'

அவர் காஞ்சீபுரத்துக்குப் போயிருக்கிறார்!'' என்றாள்.

''நேத்து ராத்திரி அந்தச் சந்தானம் வந்திருந்தான்......!'' என்று மெதுவாக ஆரம்பித்து விட்டுத் தன் திட்டத்தையெல்லாம் சொன்னான். உபரி 'நூறு ரூபாயை' மட்டும் பேசவில்லை.

''அவன் நல்ல பிள்ளையாச்சே!'' என்று அலமேலு முணுமுணுத்தாள்.

''அது எனக்கும் தெரியும். ஆனால் அவன் காரியத்தைக் குட்டிச்சுவராக்கி விடுவான். அப்புறம் என் நஷ்டத்தை விட உன் நஷ்டம் அதிகமாகிவிடும்....''

''ஆமாம்!'' என்று நடுக்கத்துடன் ஆமோதித்த அவள், ''என்ன செய்யணும்....?'' என்று கேட்டாள்.

''நான்தான் இப்போ சொன்னேனே. இதுக்கு மேலே உன் சாமர்த்தியம். அவன் அந்த வீட்டை விட்டே வெளியேறுகிற மாதிரி இருக்கணும் நீ செய்யறது எல்லாம்!'' என்றான் ரகுபதி.


நீண்ட நேரம் கண்களை அரைகுறையாக மூடிக் கொண்டே அலமேலு யோசித்தாள். ஒன்றும் அவளுடைய எண்ணத்துக்குச் சரிவர அமையவில்லை. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''சரி, நீ கவலைப்படாதே!'' என்றாள்.

(தொடரும்)

முத்தாயி தன்னுடைய அழகான முத்துப் பற்களைத் திறந்தால், முத்து சிதறுமோ சிதறாதோ, கட்டாயம் அழகான, கவர்ச்சி மிகுந்த புன்னகை சிதறி விளையாடும். அப்படிப்பட்டவள் அப்பொழுது என்னும் கொள்ளும் முகத்தில் வெடிக்க, கவலை கழியுடன் தன் குடிசையின் முன்னே வந்து நின்றால் அவளைப் பெற்ற கருப்பாயிக்குக் கதி கலக்கம் உண்டாகக் கேட்கவா வேண்டும்? பாவம், பதறிப் போய் விட்டாள். பெற்ற மனம் பித்து ஆனது.

''ஓம் மூஞ்சி எண்ணிக்கும் இல்லாத திருநாளா இம்மாந் தொலைக் குக் இலேசப் பட்டிருக்குதே? என்ன சங்கதி?'' என்று பதற்றம் மூளக் கேட்டாள். தளர்ந்த மேனி அல்லாடியது.


அதற்குப் பதில் ஏதும் சொல்லாமல் வாசலுக்கு விரைந்தாள் முத்தாயி. சமைந்த பெண்ணின் பருவச் செழிப்பும் உருவக் கவர்ச்சியும் அவளுடன் குலுங்கக் குலுங்க ஓடின. ''ட்ரியோ! ஏலே....ட்ரியோ!'' என்று சொல்லி அதட்டியவளாக, உசிலே மரத்து ஒண்டலே அடைந்த ஆட்டுக் குட்டியைக்



மகமாயிக்கும் பேசத் தெரியும்!

கழி கொண்டு மடக்கித் திருப்பி, மற்றக் குட்டிகளோடு வசப்படுத்தினாள்.

தழைகளைத் தின்று கொண்டிருந்தது அந்த ஆட்டின் பால் மடியைச் சுவைக்கத் தொடங்கி விட்டன அந்த இரண்டு குட்டிகளும்! தாய் ஆடு தன் குட்டிகளை மாறி மாறி — மாற்றி மாற்றிப் பார்த்தது : மறு கணம், பாசத்தை வெளிப்படுத்தத் தினமாகக் குரல் கொடுத்தது. சுற்றுமுற்றும் பார்த்தது: அதன் முகத்தில் துயரமும் ஏமாற்றமும் வேதனையும் நிழலாடின. அத்தகைய உணர்வுகளுக்கு ஜீவாதாரமாகப் பாசம் முழங்கிக் கொண்டிருந்தது !



''ஆத்தாடியோ! இன்னும் ஒரு வெள்ளாட்டுக் குட்டியைக் காணலியே முத்தாயி?'' என்று ஆத்திரத்தின் துயருடன் வினவினாள் தாயார்.

''ஆமாம், ஆத்தா! ஒரு குட்டியைக் காணாமத்தான் தவிக்குது இந்தத் தாய் ஆடு. நானும் அதை நெனைச்சுத்தான் தவிச்சுத் தண்ணியா உருகிக்கிட்டு இருக்குறேன் !'' என்று பதில் மொழிந்தாள் முத்தாயி. அவள் பேச்சு தழுதழுத்தது. கண்களில் விளிம்பு கட்டியது கண்ணீர்.





''ஐயையோ! எம்புட்டு ஆசையா யிருந்தேன், ஆயி மகமாயி புண்ணியத் திலே இந்தத் தடவை மூணு குட்டி போட்டிருக்குதே ஆடு. அப்படின்னு மண்ணிலே காலு பாவாமல், குதிச் சேனே? அந்தப் பாவத்துக்காகவா இப்படிப்பட்ட சோதனை வந்திடுச்சு? குறளி வித்தை வச்சுக் காடு மாத்திறாப் பிலே ஒரே ஒரு குட்டி மட்டும் பொட் டுப் பொழுதுக்குள்ளாற எப்பிடியாடி ஆத்தா கண்மாறிப் போயிட ஏலும்?''

''அதுதானே, எனக்கும் மட்டுப் படல்லே, ஆத்தா! சித்த மூத்தி மடத் துக் குளத்து உள்வாயிலே இருக்கிற அரச மரத்திலே இலே தழைங்களை இறுங்கிப் போட்டுக்கிட் டிருந்தேன். தாயும் மூணு ஆட்டுக்குட்டியும் ஒண் ணடி மண்ணடியாத் தழையைத் தின்னுக் கிட்டு இருந்திச்சு. கழுத்து ஒட்டிலே வேர்வை கசகசத்ததாலே, தண்ணியிலே இறங்கி நாலு கை அள்ளித் தெளிச்சுக் கிட்டுத் திரும்பினேன். வந்து பார்த் தாக்க, ஒண்ணைக் காணல்லியே! நானு என்ன செய்யட்டும்? சுத்து வட்டம் முழுதும் அரிச்செடுத்துப் பார்த் தாச்சு. ஒரு தடயமும் தட்டுப்பட லேயே!'' என்றாள் முத்தாயி. அந்திக் கதிர்கள் அவளது முகத் திரையில் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டே யிருந்தன.

''ஆமாம், நீ ஆடு மேய்ச்சுக்கிட்டு இருக்கையிலே, குளத்திலே யாராச்சும் இருந்தாங்களா?''

சற்றே நிதானமாகச் சிந்தித்தாள் முத்தாயி. பிறகு, தலையைச் சிலுப்பிக் கொண்டாள். தண்ணீர் தெளிக்கப்பட்ட தும் ஆடு தலையைச் சிலுப்பி உலுக்கிக் கொள்ளுமே, அப்படி! ''நம்ம பெரிய அயித்தை புருசன் மட்டுக்கும் குளுச்சி முழுகி வெளியேறிக்கிட்டு இருந்தாக'' என்று பதில் உரைத்தாள் கன்னிப் பெண்.

''அந்த அண்ணாச்சியா? அந்த ஆளு மாசி மலைத் தேவருதான் ஆடு குட்டி போடுறதுக்கு முந்தியே இதை விலைக்குக் கேட்டாரே? அவருகிட்ட தாக்கல் தகவல் சாரிக்கப் புடாதா? வழித் தடத்திலே எங்காணும் குட்டி ஒண்ணு தடம் மாறித் தென்பட்டுச் சான்னு கேட்டா என்ன ஆத்தா?''

''எல்லாம் கேட்டாச்சு. அந்த ஆளு தனக் குத் தெரியாது அப்படின்னு நறுக்குத் தெறிச்ச மாதிரி சொல்லிட்டாரு, ஆத்தா! அவர் மக னுக்கு நான் வாழ்க்கைப்படச் சம்மதிக்கலேங் கிற ஆத்திரம் இன்னமும் அவருக்கு. மூஞ் சியை மாற வைச்சுக்கிட்டு வூட்டுக்குள்ளாற இருந்த வாக்கிலேயே சொன்னாரு அவரு!''

'உம்' என்று பெருமூச்செறிந்தாள் தாய்.

தாய் ஆடு மீண்டும் ஈனமாகக் கத்தியது. பெண் ஆட்டுக்குட்டிகள் இரண்டும் தன் சகோதரனைக் காணாமல் மறுகின. பாசத் தின் பிரிவு அங்கு மௌனமாக வருத்தித் துடித்துக் கொண்டிருந்தது.

முத்தாயி கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு அந்தத் தாய் ஆட்டையும் குட்டி களையும் பரிவுடன் பார்த்தவளாக நின்றாள். பின்னர், அவற்றைக் 'கேட்' மூலையில் கட்டிப் போட்டாள். இலே தழைகளைப் பகிர்ந்து போட்டாள். புளியங்கொட்டைகள் மிதந்த வடிகஞ்சிச் சட்டியைத் தாய் ஆட்டின் முன்னே வசமாக இழுத்து வைத்தாள்.

தாய் ஆடு ஒரு முறை அந்த வடிகஞ்சியை நக்கியது; பிறகு தலையை உலுக்கியது. மீண்டும் குட்டிகளை நாக்கால் தடவியபடி, சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, 'ம்... மே!' என்று குரல் கொடுத்தது.

இரண்டு குட்டிகளும், 'ம்.... மே!' என்று பதில் குரல் கொடுக்கத் தொடங்கின!

பனி வாடை வீசியது.

மாக்கோலத்தில் அம்மன் தேர் எழுதி, அதன் உச்சியில் பறங்கிப் பூவை வைத்துத் தொழுது தலை நிமிர்ந்தாள் முத்தாயி.

காலை இளம் பரிதி கண் சிமிட்டத் தொடங்கியது. ''ஏண்டி, முத்தாயி! ஒங்க வூட்டு ஆட்டுக் குட்டியைக் காணலேயாமே?

பூவை ஆறுமுகம்

நம்ம குப்பாயி இந்தச் சேதியைக் காதிலே போட்டா; ராவுக்கு வர முடியவில்லே. பாவம், அந்தக் குட்டி நாலாறு மாசம் வளர்ந்தாக்க, நாப்பது அம்பதுக்குச் செவ்வாய்ச் சந்தையிலே விலே போகுமே?'' என்று சொல்லித் தன் அனுதாபத்தைத் தெரிவித்தாள் பொன்னம்மா.

''ஆமாடி! என்ன செய்யிறது? எங்க காலத்துக்கு இப்பிடி நடக்குது! அந்த ஆட்டுக் குட்டி எப்பிடித்தான் மாயமாய் மறைஞ்சுதோ, ஒரே கமுக்கமாத்தான் இருக்குது. நாங்க அசலார் ஊட்டுச் சொத்துக்கு இம்மி கூட ஆசைப்படாதவுங்க. எங்க அப்பன் எங்களுக்காக வுட்டுட்டுப் போன சொத்து இந்த மானம் மரியாதை ஒண்ணுதான். இப்படிக்கொத்தவுங்க சொத்தை எந்த ஆம்புளேயோ, எந்தப் பொம்புளேயோ திருடிப் போயிட்டாங்க! எல்லாம் நம்ம குடியிருப்பு ஆளுங்களாத்தான் இருக்கோணும்! ஆயி மகமாயியோட சூட்சமப் பார்வை கட்டு விட்டாப் பூடும்?.......''

முத்தாயிக்கு மூச்சு இறைத்தது.

''நீ சொல்றது முக்காலும் மெய்தான் முத்தாயி. 'களவாணி பாவம் கட்டையோட'ன்னு ஒரு பேச்சு நம்ம எருக்கலக் கோட்டையிலே தலைமுறைத் தத்துவமாய் இருந்துக்கிட்டு வருது. அது பொய்க்காது! வர வர, இந்தச் சனங்களுக்குத் தெய்வம்கூட அத்துப் பூடுச்சு! அதாலதொட்டுத்தான், பிறத்தியார் சொத்துக்கு இப்படி ஆலாப் பறக்குறாங்க?'' என்று பேசிவிட்டு நகர்ந்தாள் பொன்னம்மா.

கருப்பாயி வேர்க்க விறுவிறுக்க வந்தாள்.

முத்தாயி கஞ்சி வட்டியைக் கழுவியவள் அதைத் திண்ணை முன்றிலில் வைத்துவிட்டு நின்றாள். இணுங்கிய முருங்கை இலைகளைக் கையில் இடுக்கியவாறு வந்த தாயை ஏறிட்டு விழித்துப் பார்த்தாள் மகள்.

''முத்தாயி, நேத்திக்கு ராவு அந்த அண்ணாச்சியைக் கண்டு தண்ட முடியலே. இப்ப அந்த மாசிமலைத் தேவரைத் தேடிப் புடிச்சுக் கேட்டேன். 'ஆட்டுக்குட்டி விசயம் எதுவுமே தனக்கு எட்டலே, தனக்கு நம்ம ஆட்டு ஆட்டுக்குட்டி பத்தி அக்கறை இல்லே' அப்படின்னு மூஞ்சியிலே அடிச்சாப்பிலே சொல்லிட்டாரு. அவரு பேசின தோரணையை ரோசிச்சுப் பார்த்தாக்க, நாம ஆளு மாத்தி ஆளு அவரைக் கேட்டதுகூட அவருக்குப் பிடிக்கலேன்னு தோணுது!'' என்றாள் அன்னை.

''அவரு நினைச்சால் நினைக்கட்டுமே! நமக்கா காய்ச்சுத் தொங்குதாம்? பேச்சுன்னு வந்தா, அண்டை அயலிலே உள்ளவங்களை ஒரு பேச்சுக்கு விசாரிக்கிறது நாட்டு வளமைதானே? அல்லாருமே அரிச்சந்திர மகராசா கணக்கிலேதான் வாய்ப் பேச்சுப் பேசுவாக; ஆனா, அவுக அவுக குட்டு அம்பலத்துக்கு வந்தாத்தானே ஊர்நாட்டுக்குப் புலப்பட ஏலும்!''

''ஆமா, ஆத்தா!'' என்று மகளின் பேச்சுக்கு உத்தாரம் மொழிந்தாள் கருப்பாயி.

அப்போது, வேலாயுதம் மாப்பிள்ளை நடை போட்டுக் கொண்டு அங்கு வந்து நின்றான். அவனுடைய களை சொட்டிய முகத்தில் இப்போது இலேசம் படர்ந்தது.

முத்தாயி நாணத்தின் பதுமையாக வாசல் வேப்பமரத்து ஓண்டலிலே வந்து ஒண்டிக் கொண்டாள்.

'' வாங்கங்கிறேன் '' என்று முகமன் மொழிந்தாள் முத்தாயியின் தாய்.

''ஆமா. சங்கதி எல்லாம் எனக்கு விழுந்திச்சு. எப்பிடி அந்த ஆட்டுக்குட்டி மாயமாய் மறைஞ்சுதுங்கிறது! ஒரே பூடகமாத்தான் இருக்குது! ஒரு சேதியை உங்க காதிலே போட்டு வைக்கலாமின்னுதான் பறிஞ்சு வந்தேனுக்கும்!'' என்று கணப் பொழுது நிறுத்தினான் வேலாயுதம்.

காட்டு ரோஜா என்றுதான் முத்தாயியைக் கிராமத்தில் யாரும் சொல்லுவார்கள். அவ்வளவு அந்தம் மிகுந்தவள் அவள். அவளுக்கென்று முறை மச்சான்கள் மூன்று நாலு பேர் இருந்தார்கள். பசை மிகுந்தவர்கள் அவர்கள். ஆனால் அவர்கள் யார் பேரிலேயும் முத்தாயியின் கன்னி நெஞ்சம் ஒட்டினால்தானே? மாசிமலைத் தேவர் என்றால் பத்து மா நஞ்சைக்கும் இருபது மா புஞ்சைக்கும் உடைமைக்காரர்தான். அவர் மகனும் அவளுக்கு 'முறை'தான். என்றாலும் அந்த மாப்பிள்ளையை அவள் ஏற்க ஒப்பவில்லை! ஒரு துண்டு புஞ்சை நிலத்தை மட்டுமே தந்தை வழிச் சொத்தாகக் கொண்டு வயிறு வளர்த்து வந்த முத்தாயிக்கு மாசிமலைத் தேவரின் பெரிய இடத்துச் சம்பந்தம் கட்டோடு பிடிக்கவில்லை. 'அந்த ஆம்பளே மனசுசுத்தம் இல்லாதவுகளாம். இனத்தடியிலே பேச்சு அடிபடுது. அவுகளுக்கு நானு முந்தானை போட வாய்க்காது!' என்று கச்சிதமாகச் சொல்லி விட்டாள் பெற்றவளிடம். அதிலிருந்து இரு குடும்பங்களுக்கும் இடையில் பகை ஏற்பட்டு விட்டது. முத்தாயியின் மனசுக்குப் பிடித்த மாப்பிள்ளையாக இந்த வேலாயுதம் அந்தஸ்து பெற்றான். தன் குடும்பம் மாதிரியே அவன் குடும்பமும் இருந்தது. சமநிலைப்பட்ட சூழல். ''இவுகளையே நானு கட்டிக்கிடறேன். கட்டின பெண்சாதியைக் கண் கலங்க வைக்காம இவுக காப்பாத்துவாங்க என்கிற நம்பிக்கை எம்மனசிலே விழுந்திருச்சு. ஆயி மகமாயி குடுத்த மனத்திடமும் கையும் காலும் இருக்குது. இதுகளைக் கொண்டு கஷ்டத்தை வெளிக் காட்டாம, மானமாய்க் காலந் தள்ளிப்புடலாம் ஆத்தா!'' என்றும் கூறினாள் முத்தாயி. தாயும் சம்மதம் கொடுத்தாள்.

''சொல்லுங்கங்கிறேன் வாய்த் தாக்கலே'' என்று தூண்டினாள் முதியவளான கருப்பாயி.

''நேத்து ராவு நான் அறந்தாங்கிச் சந்தைப் பேட்டையிலேயிருந்து திரும்புகாலிலே மாசிமலைத் தேவர் ஊட்டு வாசலோட வந்துகிட்டிருந்தேன். அப்ப எங்க சின்னய்யிமவன் கப்பையா ஒங்க ஆட்டுக் குட்டி பறிபோன இடொமத் தாக்கலைச் செப்பினான். அப்படியே கல்லாட்டம் நின்னுகிட்டிருந்தேன். அப்போ மாசிமலைத் தேவர் ஆறுகலம் கொள்ளுற ஒரு ஈச்சங்குடையைத் துணி போட்டு மூடிக்கினு தலையிலே வச்சுச் சுமந்துகிட்டு வடக்காலே நாடிப் போனாரு. அமாசை இருட்டிலே சடை மட்டும்தான் கண்ணுக்குத் தெரிஞ்சுது. ஆனால், அதுக்குள்

ளாற இருந்த சாமான் என்று ஏதுன்னு எனக்கு விளங்கல்லே! சத்த கழிச்சு, ஆட்டுக் குட்டி கத்தின மாதிரி ஒரு சத்தம் மட்டும் என் காதுக்கு விளுந்திச்சு!.... தடம் பார்த்து நடந்து போறதுக்குள்ளே அந்த மனுசன் எந்தத் திக்கிலே விழுந்து மடங்கினார்னு புரியலே. திரும்பிட்டேன். இன்னிக்குக் கருக்கலோட அக்கம் பக்கம் கத்திரிக்காடு அரிதி போயி சாரிக்கப் பார்த்தேன். ஒரு துப்பும் ஒரு தடயமும் கெடைக்கல்லே. மாசிமலைத் தேவரு கொடுக்கல் வாங்கல் வைச்சிருக்கிற ஊரு குருந்தரக் கோட்டை மட்டுக்கும் இருக்குது! மாசிமலைத் தேவரைப் பத்தி எனக்கு அம்புட்டு ஒசந்த கருத்து இல்லாங்காட்டியும், அம்புட்டுத் தொலைவுக்கு மட்டமான அபிப்பிராயமும் இது பரியந்தம் எம் மனசிலே நெருங்கினது கிடையாது. நடந்த நடப்பு இதானுங்க. எந்தப் புத்திலே எந்தப் பாம்பு இருக்குமோ, யாராலே காண வாய்க்குது?...." என்று சொல்லி மூச்சு விட்டான் வேலாயுதம்.

"அப்படீங்களா சமாசாரம்?.... எனக்கு இப்பல்ல சங்கதி புரியுது!... ஊம்!" என்றாள் கருப்பாயி.

"அயித்தைக்கில்லே சொல்லுறேன். நல்லவுங்க பொருள் நாடு தப்பிப் போனாலும், ஒங்ககிட்டே தன்னாலே வந்து சேர்ந்துப்புடும். இதைப் பத்தி இந்தத் தன்னாத வயசிலே கவலைப்பட்டுக்கிட்டு இருக்காம, மத்த வேலைங்களைக் கவனியுங்க !" என்று சொல்லிவிட்டு விடைபெற்றான் வேலாயுதம்.


மாசிமகத் திருநாளுக்கு மகமாயி கோயிலுக்குப் போய் விட்டுத் திரும்பினாள் கருப்பாயி; விபூதி பிரசாத முடிச்சைத் தன் குடிசை வாசலில் குந்தி அவிழ்த்தாள். 'மவளே எங்கண்ணுப்புறத்தாலே காணமே ? உருமப் பொழுது வந்திடுச்சே ?' என்று எண்ணமிட்டது தாயுள்ளம்.

"ஆத்தா!" என்ற அழைப்புக் கேட்டுத் தலை நிமிர்ந்தாள் முதியவள்.

"இந்தாடி ஆத்தா, சோளமுறுக்கு !" என்று சொல்லி, சோள முறுக்குக் கொண்டையை மகளிடம் பாசத்துடன் நீட்டினாள் தாய்.

மகளுக்குப் பாசக் கண்ணீர் தன்னளத்தது. "ஆத்தா, வளமை மாறும இன்னும் கூட எனக்குத் திங்கிறதுக்குப் பட்சணம் பண்டம் வாங்கியாந்திருக்கியே ? நீ கொஞ்சம் இன்னு !" என்று சொல்லி, செம்பாதியைப் பெற்றவளிடம் சமர்ப்பித்தாள் முத்தாயி.

"ஆத்தாளோட அன்பைத் தட்ட ஏலுமா ?" என்று சொல்லிக் கொண்டே சோள முறுக்குகளை ஏந்தினாள் கருப்பாயி. அவள் பார்வை, எதிர்ப்புறத்தே நின்று கொண்டிருந்த ஆட்டையும் அதன் குட்டிகளையும் சாடியது. அவள் மனக் கண்ணில், காணாமற்போன அந்தப் பச்சிளம் ஆட்டுக்குட்டி நிழலாடியது. கறுப்பு உடலும் அழகிய அமைப்பும் கொண்ட அந்தக் குட்டியின் காதுப்புறங்களிலே இருந்த வெண்மை வண்ணம் அவளால் மறக்கவொண்ணாத



"என்னடா அம்பி! இன்னொரு ஐஸ்க்ரீம் வாங்கித் தரட்டுமா...?"

"இன்னொண்ணு ? .... இன்னும் ஒண்ணுகூட வாங்கித் தரல்லியே நீங்க !"

"ஏண்டா மறந்துட்டியா ? போன வருஷம் ஒண்ணு வாங்கித் தந்தேனே !"

"......! ......! ......!"

இன்பக் கனாப் போல அமைந்திருந்தது. அவள் நெடுமூச்செறிந்தாள்.

"மாசம் மூணு நெருங்கப் போவுதே ? காணாமற் போன நம்ம ஆட்டுக்குட்டியைப் பத்தின தடயம் எதுவுமே தட்டுப்படக் காணமே ?.... ம் !" என்று வருந்தி நெட்டுயிர்த்தாள் தாய். தாய் ஆடு கதறியது. பிரிந்த தன் குட்டியை எண்ணி மௌனக் கண்ணீர் சொரிந்ததோ ?

"ஆத்தா ! அது பத்தின ஒரு சேதியைச் சொல்லத்தான் இம்மாம் அவதியாய் வந்து நிற்கிறேன் !" என்றாள் முத்தாயி.

"என்னடி ஆத்தா ? பொட்டுனச் சொல்லிக் காட்டு !" என்று பறந்தாள் கிழவி.

"கஞ்சிப் பொழுதுக்கு நேரா, சத்த முந்தி நம்ம ஊட்டை நாடி வந்துக்கிட்டிருக்கிறப்ப, என்னமோ ஒரு குருட்டாம்போக்கிலே மறுகித் திரும்பி, மாசி மலைத் தேவர் ஊட்டுப் பக்கமாத் திரும்பி, நடந்தேன். அப்ப, அவர் ஊட்டு வாசலிலே நம்ம ஊட்டு காணாமப் போன அந்த ஆட்டுக்குட்டி நின்னுச்சு. நம்ம குட்டியேதான் அது. அது நல்லா வளர்ந்திருக்குது. காதிலே உள்ள வெள்ளை நிறம் ரொம்பத் தூக்கலாய்ப் பளிச்சின்னு இருக்குது ! 'இதான் எங்க ஆட்டுக்குட்டி'ன்னு தேவர்கிட்டே சொன்னதுக்கு, 'இது நானு வாரத்துக்கு வடக்கே விட்டிருந்த குட்டியாக்கும். தாய் ஆடு நசிலே அவதிப்படுறதாலே, இதைக் கொண்டுகிட்டு வந்திட்டேனாக்கும் ! இது எம்விட்டு ஆடு ! இன்னொருவாட்டி இதுபத்தி ஏதாவது சொன்னியோ அப்பாலே மூண்டிடும் வம்பு! ஆமா!' அப்படின்னு காட்டமாச் செப்பிட்டாரு ஆத்தா ! மகமாயி சந்நதிக்கு வந்து சூடத்தைக் கொளுத்திச் சத்தியம் செய்குவேன், அது அச்சுக் குலையாத நம்ம வெள்ளாட்டுக் குட்டியின்னு ! நானு விடலே அந்தக் கிழவனே ! 'சத்தியம் பண்ணுவீங்களா?' அப்படின்னு மல்லுக்கு இழுத்தேன். 'உம்'

மின்னு விராப்போட பேசிருது....!'' என்று நடந்த நடப்பை விளக்கினாள் முத்தாயி.

''ஆமா, இப்ப நாம என்ன செய்யிறது ? அந்த அன்னைச்சி இம்மாங்கொத்த முடிக்க மாறி ஆகுன்னு வைலேசமும் நான் நினைக்கவே இல்லியே, ஆத்தா? இப்ப நாம அந்தக் குட்டி நம்மதுன்னு எப்படி ருபிக்க ஏலும்? வாயில்லாச் சீவனுச்சே அது? ஆயி மகமாயியும் வாயில்லாச் சீவனாய் ஆகிப்புட்டாளே?'' என்று கலங்கினாள் கருப்பாயி.

இவர்களின் பேச்சைக் கேட்டு விவரம் அறிந்து கொண்ட பாவனையில், தாய் ஆடு மகிழ்ச்சியுடன் துள்ளியது. அன்னை மகமாயி அந்த ஆட்டுக்கு விவரம் உணர்த்தியிருப்பாளோ ?

'' ஆத்தா, மகமாயியா வாயில்லாச் சீவன் ? அவ இல்லாட்டி நாமளெல்லாம் எப்பிடிப் பேச வாய்க்கும்? நம்ம சொத்தை எப்பிடியும் நம்மகிட்டே சேர்ப்பிச்சிருவா, ஆயி மகமாயி !.... இப்பவே போயி, ஊர்ப் பஞ்சாயத்தைக் கூட்டுறதுக்குத் தோது பண்ணுவம்! அப்பாலே கூத்தை நேருக்கு நேராப் பாரு, ஆத்தா !''

‘ஊர்ப் பஞ்சாயம்’ கூடியது !

களத்து மேட்டுத் திடலில் ஜனநெரிசல் அமளிப்பட்டது. ஆறு கரைத் தலைக்கட்டுக் காரர்கள் கம்பீரமாகக் குந்தியிருந்தனர்.

ஒருபுறம் மாசிமலைத் தேவர் வயிற்றைக் கையால் பிசைந்தவராக நின்று கொண்டிருந்தார். எதிர்ப்புறத்தில் கருப்பாயியும் அவள் மகள் முத்தாயியும் நின்றார்கள்.

''ஐயா, மாசிமலைத் தேவரே ! நீங்க வயசிலே ஓசந்த புள்ளி. ஒங்க பேரிலே கருப்பாயி சொல்லிக் காட்டுற குற்றச்சாட்டுக்கு நீங்க என்ன சவாப்புச் சொல்லுறீங்க ?'' என்று அந்த அறுவரில் ஒருவர் கேள்வி தொடுத்தார்.

''என்னோட ஊட்டிலே நிக்கிற அந்த ஆட்டுக்குட்டி என்னோடதுதாங்க! இதிலே என்ன சொல்ல வேண்டிக் கிடக்குது ?'' என்றார் மாசிமலைத் தேவர்.

''வாயில்லாச் சீவன் விவகாரத்திலே நீங்க என்ன சொல்லுறீங்க, ஆத்தாளும் மகளும்?'' என்று அறுவரில் இரண்டாமவர் குறுக்கிட்டார்.

''இம்மாம் பெரிய கும்பலிலே சமைஞ்ச பொண்ணு நானு பேசறதுக்கு நேர்ந்ததுக்கு மூத்தவுங்களும், நல்லவுங்களும் என்னைச் சமிச்சுப்புட வேணும்! சொத்து எங்க ஊட்டுதுங்க! அவரு இல்லேன்னுக்க, அத்தோட விட்டுப் போச்சுங்களா கதை ?'' என்று முழங்கினாள் முத்தாயி.

''வாய்ப் பேச்சை வளர்த்து விடப்புடாதுங்க பஞ்சாயத்திலே! அந்த ஆட்டுக்குட்டி தன்னதுன்னு சொல்லுதே இந்தப்பொண்ணு. அதுக்கு என்ன ஆதாரமுங்க ?'' என்று ஒரு போடு போட்டார் மாசி மலைத் தேவர். மறுகணம், 'ஆ!' என்று முனகினார்.

''அந்த ஆட்டுக்குட்டி எங்கது என்கிறதுக்கு ஆதாரம் இருக்குதுங்க!'' என்றாள் முத்தாயி.

''என்ன ஆத்தா ஆதாரம்?'' என்று கேட்டது ஊர்ப் பஞ்சாயம்.

''ஆயி மகமாயிதான் ஆதாரம்!'' என்றாள் முத்தாயி, கண்களை மூடித் தியானத்தில் லயித்தவளாக.

''ஆயிமகமாயி சொன்னால் சரிதான் !'' என்று இணங்கினார் மாசிமலைத் தேவர். அவருக்கு இப்போது முனகல் மிஞ்சியது. வெளிக் காட்டிக் கொள்ளாமல் தவித்தார், பாவம்! வயிற்று வலி!....

''அப்படின்னு, அவரு ஊட்டிலே நிக்கிற அந்த ஆட்டுக்குட்டியைக் கொண்டுகிட்டு வரச் சொல்லுங்க! ஆத்தா, நம்ம ஆட்டையும் சொச்சக் குட்டிங்களையும் கொண்டா!'' என்றாள் முத்தாயி.

கணங்கள் சில மௌனத்தை விழுங்கின.

''ஆத்தா, வந்துட்டியா?''

கிழவி கருப்பாயியின் கைப்பிடியில் அவளுடைய தாய் ஆடும் இரு குட்டிகளும் நின்றன.

அதோ, வந்து விட்டார் மாசிமலைத் தேவர், அந்த ஆட்டுக்குட்டியுடன்!

கம்பீரமான அமைதியுடன் தலை நிமிர்ந்து நின்றாள் முத்தாயி. அவளது மார்பகம் எம்பி எம்பித் தணிந்து கொண்டிருந்தது !

அந்தக் குட்டியைக் கண்டதும் தாய் ஆடு பாசத் திளைப்புடன் ஓங்கார நாதமிட்டுக் கத்தியது.

மறுகணம், தேவரின் கைப் பிடிப்பில் இருந்த அந்த ஆட்டுக்குட்டி கட்டறுத்துக் கொண்டு, தாய் ஆட்டை நோக்கி ஓடி வந்து, பாசத்தின் வீறுடன் தாய் ஆட்டை அண்டி, அதன் பால் மடியில் பால் குடிக்கத் தலைப்பட்டது. ஏனைய இரு குட்டிகளும் அந்த ஆட்டுக்குட்டியைப் பாசச் செறிவுடன் நக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தன. தாய் ஆட்டின் கரிய பெரிய விழிகளின் அடிவாரத்தில் கண்ணீரின் அமுதத் துளிகள் சத்தியப் பாசத்தின் சாட்சிகளாகத் தெறித்துச் சிதறின! அந்தத் தாய் ஆடு இப்போது மகிழ்வின் துடிப்பால் துள்ளி விட்டது ! தாயுடன்குட்டிகள்மூன்றும்குரல் கொடுத்தன!

ஊர் அதிசயித்தது.

''பஞ்சாயத்துக்காரவுகளே! ஆயிமகமாயி பேசறதைக் கேட்டீங்களா?'' என்று வினவினாள் முத்தாயி.

''ஆமா, தாயே ! ஆயி மகமாயிக்கா பேசத் தெரியாது? ஆத்தா மூத்தவ ஒன் பேச்சுக்கு மதிப்புக் குடுத்து, அந்த வாயில்லாச் சீவன்களைப் பேச வச்ச திருக்கூத்தை நேருக்கு நேராகக் கண்டுகிட்டோம்! எங்களுக்குப் புதுப் பாடம் படிக்கக் குடுத்திட்ட ஆயி நீயேதான் !''

ஊர்ப் பஞ்சாயத்தின் நீதிக் குரல் விரிந்தது. மறுகணம், ''மாசிமலைத் தேவர்! நீங்க ஒங்க அடாவடிக்குத் தண்டனையாய் அவராதம் ரூவா இருபத்தஞ்சு கட்டிப்புடணும் இப்ப!.....'' என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

முத்தாயியின் கண்கள் பொடித்தன!

நீதியின் குரலைக் கேட்க முடியாமல், வயிற்று வலியால் துடித்து, தவித்துத் தரையில் புரண்டு கொண்டிருந்தார் மாசிமலைத் தேவர் ! அண்டப் பெருவெளியில் மாயச் சிரிப்பொன்று எதிரொலித்துக் கொண்டேயிருந்தது!



அவனுக்கு போர்ஹான்ஸ் கொண்டு பற்களைத் தக்கபடி பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க வேண்டிய காலம்

உங்கள் குழந்தை தூரத்து இடங்களைப் பற்றி அறிய ஆவலாயிருக்கும் போது உங்களை நாடுகிறான். உங்களிடமிருந்து அவன் கற்கும் முக்கியமான விஷயங்கள் பல. அவற்றில் ஒன்று போர்ஹான்ஸ் பற்பசையினால் பற்களைத் தக்கபடி பராமரித்தல். போர்ஹான்ஸ் ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும், தடுக்க உதவுகிறது.

பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட போர்ஹான்ஸ் ஈறுகளைப் பாதுகாக்கும் விசேஷப் பொருள் கொண்டது. அது உங்களுக்கு மட்டுமின்றி உங்கள் குழந்தைக்கும் நல்லது. எனவே இன்றும், என்றும் பற்கோளாறுகளைத் தடுப்பது எப்படியென்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். அவனை இரவிலும், காலையிலும் போர்ஹான்ஸ் உபயோகிக்கச் செய்யுங்கள். இப்பொழுதே அவனுக்கு ஆயுட்கால முழுதும் பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்றுக் கொடுங்கள்.



போர்ஹான்ஸினால்
பற்களைப் பாதுகாக்கும் முறையைக் கற்பிக்க இதுவே சிறந்த சமயம்



இலவசம்! "பற்களையும், ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற விவரமான வண்ணப் புத்தகம் 10 மொழிகளில்* கிடைக்கிறது. தபால் செலவுக்கு 10 பைசா தபால் தலைகளை அனுப்பவும்: மானேர்ஸ் டென்டல் அட்வைசரி ப்யூரோ, தபால் பை நம்பர் 10031, பம்பாய்-1.

பெயர் ....

முகவரி ....

*வேண்டிய மொழியைக் கோடிட்டுக்காட்டுக: தமிழ், ஆங்கிலம், இந்தி, மராத்தி, குஜராத்தி, உருது, வங்காளம், தெலுங்கு, மலையாளம் அல்லது கன்னடம்.
உங்கள் குழந்தை படிக்க வேண்டிய முக்கியமான புத்தகங்களுள் இதுவும் ஒன்று.

K 6

போர்ஹான்ஸ் பற்பசை—பல்வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பெற்றது

CMGM-18 B TM



வெள்ளி விழா இரண்டாவது பரிசு நாவல்

கல்லுக்குள் ஈரம்

ர. சு. நல்லபெருமாள்

அத்தியாயம் 23

முதல் சந்திப்பு

வெய்யில் நன்றாகக் காய்ந்தது. அதைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்படவில்லை. தன்னை அப்பாவும் தீக்ஷிதரும் பார்த்துவிடக் கூடாது என்ற கவலை தான். காலை பத்து மணிக்குக் கூட்டம் சைனாபஜாருக்கு வந்தது. ஹைகோர்ட்டுக்கு எதிரே வந்ததும் போலீஸ் படை ஒன்று கூட்டத்தை மறித்துக் கொண்டது. வெள்ளைக்கார சார்ஜெண்ட் ஒருவன் கூட்டத்தைக் கலைந்து போகும்படி கூறினான். கூட்டம் நகராமல் அங்கேயே நின்றது. வெள்ளைக்கார சார்ஜெண்ட் கூட்டத்தைப் பார்த்து ஏசினான். ரங்கமணிக்கு அது வேடிக்கையாயும் இருந்தது, பயமாயும் இருந்தது. திடீரென்று கூட்டத்தில் யாரோ "வந்தே மாதரம்" என்று கோஷமிடவும், கூட்டம் முழுதும் அந்த மந்திரச் சொல்லை உரக்க முழங்கியது.

வெள்ளைக்கார சார்ஜெண்டின் சிவப்பு முகம் இன்னும் சிவந்தது.

"கலைந்து போகவில்லையானால் சுடுவேன்" என்று கர்ஜித்தான் சார்ஜெண்ட். கூட்டத்திலிருந்த ரங்கமணி என்ன நினைத்தானோ, கீச்சுக் குரலில், "வந்தே மாதரம்" என்று கத்தினான். அந்தச் சிறுவனின் கோஷத்துக்கு மறுமொழி சொல்வது போல் கூட்டம்,— "வந்தே மாதரம்" என்று கூவியது. கோஷமிட்டுக் கொண்டே கூட்டம் முன்னேறத் தொடங்கியது. அதைக் கண்ட சார்ஜண்ட் தடியடிப் பிரயோகம் செய்யும்படி உத்தரவிட்டான். அவ்வளவுதான்; காத்து நின்ற போலீஸ் படை, வேட்டை நாய்கள் மாதிரி கூட்டத்தின் மீது பாய்ந்தது. கூட்டம் சிதறியது. பலர் கீழே சாய்ந்தார்கள். ஒரே குழப்பம்.

ஊர்வலத்தின் முன்னால் மூவர்ணக் கொடியைப் பிடித்துக் கொண்டிருந்தவனின் தலையில் அடி விழுந்தது. அவன் கீழே சாய்ந்த போது, அவன் பக்கத்திலிருந்தவன் கொடியைக் கீழே விழாமல் பற்றிக் கொண்டு, "வந்தே மாதரம்" என்று கோஷமிட்டான். ஆத்திரம் கொண்ட போலீஸ்காரன் ஒருவன், குண்டாந் தடியால் அவனைத் தாக்கினான். அடியை வாங்கிக் கொண்டே, "வந்தே மாதரம்" என்று கூவினான் அத்தொண்டன். கூட்டத்தில் புகுந்த போலீஸ் படை, கண் மூக்குத் தெரியாமல் தடிகளை வெறி கொண்டு சுழற்றியது. எங்கு பார்த்தாலும் இரத்தக் களறி. அந்தப் பயங்கரத்தைக் கண்டு பதறி நின்றான் ரங்கமணி. செய்வதறியாது திகைத்தான். பீதியினால் பிரமை பிடித்துப் போய் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றான். அவன் பக்கத்தில் நின்ற ஒருவர், அவன் கையைப் பற்றிக் கரகரவென்று இழுத்துக் கொண்டு ஓடினார். ரங்கமணி தன்னை விடுவித்துக் கொள்ள முயன்று திமிறினான்; நின்று திரும்பிப் பார்த்தான். அவன் கண்ட காட்சி......

ஒரு தொண்டனை வெள்ளைக்கார சார்ஜெண்ட் மண்டை பிளக்கும் வரையில் அடித்துக் கொண்டிருந்தான். "வந்தே மாதரம்" என்று நினைவு பிரியும் வரை தொண்டன் சொல்லிக் கொண்டே இருந்தான். அதைக் கண்ட சாமிநாதன் ஆத்திரத்துடன் சார்ஜெண்ட் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான். கீழே விழுந்த சார்ஜெண்டும், சாமிநாதனும் கட்டிப் புரண்டார்கள். சார்ஜெண்ட் தன் கையிலிருந்த தடியினால் சாமிநாதனின் தலையில் ஓங்கி அடிக்கவும், சாமிநாதனின் பிடி தளர்ந்தது. சார்ஜெண்ட் மீண்டும் ஆவேசத்தோடு தடியால் தாக்கினான். அந்த அடி சாமிநாதனின் முகத்தில் விழவே, மூக்கிலிருந்து

இரத்தம் பீறிட்டுப் பொங்கியது. வலி தாங்காமல் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கீழே உட்கார்ந்தான் சாமிநாதன். பிறகு விலாவில் எலும்பு முறியும்படியாக ஓங்கி அடித்தான் சார்ஜெண்ட். துடித்துப் போய்ச் சாமிநாதன் கீழே சாய்ந்தான். தரையில் சாய்ந்து விட்ட பிறகும் சார்ஜெண்ட் அவன் மண்டையில் தடியால் ஓங்கி அடித்தான். கபாலம் உடைந்து பீறிட்டு வந்த இரத்தம் மண்ணில் பெருகியது. அதற்குப் பிறகும் சார்ஜெண்ட் கண்மூடித்தனமாகத் தாக்கினான்.

இந்தக் காட்சியைக் கண்டதும், 'அப்பா' என்று அலறிக் கொண்டு, தன்னைப் பிடித்திருந்தவரின் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தான் ரங்கமணி. கீழே கிடந்த சாமிநாதனை பூட்ஸ் காலால் எட்டி மிதித்து உருட்டிக் கொண்டிருந்தான் வெள்ளைக்கார சார்ஜெண்ட். பாய்ந்து வந்த ரங்கமணி பலமாக சார்ஜெண்டின் கால்களை இறுகப் பிடித்துக் கொள்ளவே, சார்ஜெண்ட் நிலைகுலைந்து கீழே விழுந்தான். அதே சமயம் பக்கத்திலிருந்த ஒருவன் சார்ஜெண்டின் கையிலிருந்த தடியைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டான். கீழே விழுந்த சார்ஜெண்ட் கடும் கோபத்துடன் எழுந்து ரங்கமணியை உதைக்கக் காலை ஓங்கினான். ஆனால், அதற்குள் கூட்டம் அவனைச் சூழ்ந்து கொள்ளவே, தன் கையில் ஆயுதம் இல்லை என்பதை உணர்ந்து போலீஸ் படையினர் நின்ற இடத்தை நோக்கி ஓடினான். இதற்குள் தீட்சிதர் அங்கு வந்து சாமிநாதனைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு ரங்கமணியையும் இழுத்துக் கொண்டு கூட்டத்தை விட்டு விலகி ஓடினார்.

எங்கும் ஒரே குழப்பம். அடிபட்டவர்களின் அலறலும், ஓடுபவர்களின் கூச்சலும், போலீஸ் படையின் ஆணவ இரைச்சலும் அந்த வீதியை நரகமாக்கி விட்டன.

சாமிநாதனைச் சிதம்பரம் பிள்ளையிடம் கொண்டு போய்ச் சேர்த்தார் தீட்சிதர். ஆனால் சாமிநாதனின் உயிர் வழியிலேயே பிரிந்து விட்டது. சிதம்பரம்பிள்ளையின் கண்களில் நீர் பெருகியது.



ரங்கமணி பிரமை பிடித்தவாறு சாமிநாதனையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய நினைவை சார்ஜெண்ட் மாறி மாறித் தடியால் சாமிநாதனை அடித்ததும், சாமிநாதனின் மண்டை பிளந்து இரத்தம் பீறிட்டதும், சாமிநாதன் துடிதுடித்து மண்ணில் சாய்ந்ததும் தாம் ஆட்கொண்டிருந்தன. அந்தப் பயங்கரக் கொலையைக் கண்டதால் அவனுடைய பிஞ்சு மனம் அதிர்ச்சியடைந்திருந்தது. அதுவும் அவனுடைய கண்ணெதிரிலேயே அவனுடைய தந்தை மண்டை சிதறி மயங்கி விழுந்த காட்சியை அவனால் தாங்க முடியவில்லை. தந்தை இறந்து விட்டதைப் புரிந்து கொள்ளும் நிலையில்கூட அவன் இல்லை. பிரமை பிடித்து விழித்தபடியே இருந்தான். கொஞ்ச நேரத்துக்குப் பேசும் சக்தியைக்கூட இழந்து விட்டான். சிதம்பரம்பிள்ளை, அவனை மார்போடு அணைத்துக் கொண்டு கண்ணீர் சிந்தினார்.

ரங்கமணியின் நிலையைக் கண்டு தீக்ஷிதர் பதறினார். பயங்கரக்





காட்சியைக் கண்ட அதிர்ச்சியில் அவன் புத்தி பேதலித்து விடுமோ என்று அஞ்சினார்.

மாலை நான்கு மணி இருக்கும். ரங்கமணி திடீரென்று எழுந்து வாசல் பக்கம் ஓடினான். தீட்சிதர் ஓடிப் போய் அவனைப் பிடித்துக் கொண்டார். ரங்கமணி திமிறிப் பார்த்தான். தீட்சிதர் பலமாகப் பிடித்து அவனை வீட்டுக்குள் அழைத்து வந்தார்.

''விடுங்கள்....அந்தக் குரங்கு மூஞ்சி வெள்ளைக்காரனை இப்போதே போய் ஓரே போடு போட்டு அவன் மண்டையைப் பிளந்து விடுகிறேன், விடுங்கள். ஐயோ என்னை விடுங்களேன்'' என்று கத்தினான். சிதம்பரம் பிள்ளை அவனை ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

''கொஞ்சம் அமைதியாயிரு. இதோ பார், உன் அப்பாவை. பக்கத்தில் உட்கார்ந்து கொள்'' என்றார். அவனைச் சாமிநாதனின் சடலத்தின் பக்கத்தில் அழைத்துப் போய் உட்கார வைத்தார். சிறிது நேரம் தந்தையின் முகத்தையே உற்றுப் பார்த்தான்.

''பதிலுக்கு நான் அடிக்கிறேன் அப்பா. வெள்ளைக்காரப் பயலைச் சும்மாவிட மாட்டேன். அத்தனை வெள்ளைக்காரனையும் சுட்டுத் தள்ளி விடுகிறேன்'' என்று சாமிநாதனின் முகத்துக்கு நேராகக் குனிந்து பேசினான் ரங்கமணி. இந்தக் காட்சி அங்கு கூடி யிருந்தவர்கள் அனைவரின் கண்களிலும் நீரைச் சுரந்துவிட்டது. சிதம்பரம் பிள்ளைக்குத் துக்கம் தாளவில்லை. கீழே அமர்ந்து ரங்கமணியை அணைத்துக் கொண்டார்.

''தம்பி, உன்னுடைய வீரத்தைப் பாடப் பாரதி இல்லை. உன்னுடைய துடிப்பை உணர்ந்து மகிழத் திலகரும் இல்லையடா. நாமெல்லாம் அநாதைகளடா அநாதைகள்'' எனக் கூறிக் கண் கலங்கினார் சிதம்பரம் பிள்ளை.

மறுநாள் மாலையே ஒரு காரில் சாமிநாதனின் தந்தை நெல்லையப்ப பிள்ளை வந்துவிட்டார். மகனைக் கண்டு கதறி

னார். அப்போதுகூட ரங்கமணி அழவில்லை. சாமிநாதனைச் சிதையில் வைத்துத் தீயிட்ட போதுதான் ரங்கமணி கதறி அழுதான். அதுவரை உள்ளேயே நுழைந்து கிடந்த அதிர்ச்சியும், பழி வாங்கும் உணர்ச்சியும், கோபமும், அழுகையாகப் பெருக்கெடுத்தன. அவன் வாய்விட்டு அழுததைக் கண்ட பிறகுதான் தீட்சிதருக்கு மனம் நிம்மதி அடைந்தது. அதுவரை யாருடனும் பேசாமல் எதுவும் செய்யாமல், இருந்த இடத்திலேயே இருந்து, பிரமை பிடித்தவனைப் போல் சாமிநாதனின் சடலத்தையேதான் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய உள்ளத்தில் குமைந்து கொண்டிருந்த உணர்ச்சிக்குப் போக்கிடம் இல்லை. நல்ல வேளை, சுடுகாட்டில் அவனுடைய மனம் திறந்து கொண்டது. வெகு நேரம் அழுதான். கண்ணீரால் மனப்பாரம் ஓரளவு குறையும் வரை அழுதான்.

தாத்தாவுடன் ஊருக்குத் திரும்பும் போது, சிதம்பரம்பிள்ளையிடம் விடைபெற வந்தான் ரங்கமணி.

"தம்பி, ஊருக்குப் போய் நன்றாகப் படிக்க வேண்டும். தாத்தாவுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது. நீ முன்னுக்கு வருவதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கிறோம்" என்றார் சிதம்பரம் பிள்ளை.

"வெள்ளைக்காரப் பயல்களைச் சுட்டுப் பொசுக்கி விட்டுத்தான் மறு வேலை. நேற்று, அப்பா சொப்பனத்தில் வந்து, பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றார்களே" என்றான் ரங்கமணி.

"அதையெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் படிப்புத்தான் முக்கியம்" என்றார் பிள்ளை. பதில் ஒன்றும் சொல்லாமல் ரங்கமணி எங்கோ பார்த்துக் கொண்டு நின்றான். சிதம்பரம்பிள்ளையின் சொல்லை அவன் கேட்கத் தயாராயில்லை. அவனுடைய வெறியெல்லாம் வெள்ளையர்களைப் பழி வாங்க வேண்டும் என்பதுதான்.

"உங்கள் பேரனை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். துணைக்குத் தீட்சிதர் இருக்கிறார்" என்று கூறி வழியனுப்பி வைத்தார் சிதம்பரம் பிள்ளை.

ஃ ஃ ஃ

இந்தச் சம்பவம் நடந்து பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டாலும், அந்த இடத்துக்கு வந்ததும் ரங்கமணிக்கு நினைவு பின் வாங்கியது. அதே காட்சி, மீண்டும் அவன் நினைவில் நிழலாடியது. அதை நினைவில் அசை போட்டுக் கொண்டே நடந்தான் ரங்கமணி. கடற்கரையை நெருங்கியதுகூடத் தெரியாமல் நினைவில் மூழ்கிவிட்டான்.

"என்ன யோசனை?" — என்று தீக்ஷிதர் கேட்டார்.

"ஒன்றும் இல்லை, அப்பா சாகும் போது ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் போய்விட்டார்களே. பேச முடிந்திருந்தால் என்னிடம் என்ன சொல்லி யிருப்பார்கள்?"

"நன்றாகப் படி. நல்லவனாக நடந்து கொள் என்றுதான் சொல்லியிருப்பான்" — என்றார் தீட்சிதர். அதைக் கேட்டு ரங்கமணி சிரித்தான்.

"தீட்சிதர்வாள்! எங்கப்பாவோடு நெருங்கிப் பழகியிருந்தும் உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். 'டேய், தம்பி; பழிக்குப் பழி வாங்குடா' என்று கூறியிருப்பார்கள்" என்றான்.

"பழிக்குப் பழி வாங்குவதால் என்ன லாபம்? சாமிநாதனின் உயிரைக் கொண்டு வந்துவிட முடியுமா? பழி வாங்கத் துடிக்கும் மனத்துக்குச் சாந்தியே கிடையாதப்பா. நடந்ததை மறந்து விடு."

"மறக்க முடியவில்லையே....!" என்று கூறிக் கண்களை இறுக மூடிக் கொண்டான் ரங்கமணி. பிறகு சொன்னான்: "நான் செத்தால்தான் மறக்க முடியும்."

"பழைய நினைவிலேயே நொந்துபோயிருக்கிறாய். நினைவை மாற்று. மனத்தை வேறு எதிலாவது செலுத்து. நான் ஒன்று சொல்லுவேன். கேட்பாயா?" என்று கேட்டுவிட்டு ரங்கமணியை ஆவலுடன் உற்றுப் பார்த்தார் தீட்சிதர்.

"என்ன?"

"ஒரு கலியாணத்தைப் பண்ணிக் கொள்."

இதைக் கேட்டு ரங்கமணி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

"நாடு விடுதலை அடைந்த பிறகுதான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும்" என்றான்.

"அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உனக்கு ஒரு துணை பக்கத்திலிருந்தால் மனத்துக்கு அமைதி கிடைக்கும். பழி வாங்கும் வெறியும் தணியும். ஆண்களை உண்மையிலேயே மனிதர்களாக வாழ வைப்பது.— பெண்கள்தாம். அந்தத் துணை இல்லாததால் தான் நீ இப்படிக் கரடுமுரடாகப் பேசுகிறாய்" என்றார் தீட்சிதர்.

அப்போதுதான் நிலவு உதயமாகிக் கொண்டிருந்தது. நிலவில் யாருடைய முகமோ தெரிந்தது. உற்றுப் பார்த்தான். அவனுடைய இதயராணியின் முகம்தான்..... இதென்ன அதிசயம், திரிவேணியின் முகமும் தெரிகிறதே......!

மீண்டும் உற்றுப் பார்த்தான்.

ஒன்றும் தெரியவில்லை. வெறும் நிலவுதான் இருந்தது. தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டான். பிறகு மணலில் துண்டை விரித்துப் படுத்தான். தீட்சிதர் சம்மணம் போட்டுக் கொண்டு வெற்றிலை போடத் தொடங்கினார். சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக மேலே ஏறத் தொடங்கியது.


ஹைகோர்ட் கடற்கரையில் படுத்திருந்த ரங்கமணிக்குத் தூரத்தில் மெரினா கடற்கரையும் அங்கு மொய்த்துக் கொண்டிருந்த கூட்டமும் தெரிந்தன.

"இங்கு வந்திருக்காமல் மெரினாவுக்குப் போயிருக்கலாம்" என்றார் தீக்ஷிதர்.

"அங்கு கூட்டம் அதிகமாக இருக்கும். இப்படி நிம்மதியா யிருக்க முடியுமா?" என்றான் ரங்கமணி.

"அங்கு சற்று ஒதுக்குப்புறமாகப் போய் இருந்தால் ஒரு தொந்தரவும் இராது" என்று கூறிக்கொண்டே வெற்றிலையை மடித்து வாயில் போட்டுக் கொண்டார் தீக்ஷிதர்.

"ஒதுக்குப்புறத்தில் நமக்கு இடமேது? ஒதுங்கிய இடங்களை யெல்லாம் ஜோடி



வயிற்றுக் கோளாறுகளினால் எங்களுக்கு தொல்லை இல்லை

ஏனெனில் நாங்கள் இப்பொழுது பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை உபயோகித்துக் கொண்டு இருக்கிறோம்.

அதிகமான புளிப்புகளினால் ஏற்படும் வயிற்று கோளாறுகள் சிறந்த முறையில் மில்க் ஆப் மக்னீஷியா நிவாரணம் அளிக்கிறது.

பிலிப்ஸ மில்க் ஆப் மக்னீஷியா நவீன விஞ்ஞான முறைக்குத் தெரிந்த ஒரு புளிப்பு நிவாரணி — துரிதமாக பலனளிக்கும். நிச்சயமாகவும் இதமான முறையிலும் பூரண குணம் கிடைக்கும்.

அநேகமாக ஒவ்வொருவரும் சிற்சில சமயங்களில் அஜீரணம், வாயுப் பொருமல், நெஞ்செரிச்சல், அல்லது பித்தம் முதலியவைகளால் அவதிப்படுகிறார்கள்.

ஒருபொழுதும் பிலிப்ஸ மில்க் ஆப் மக்னீஷியா உங்கள் வசம் இல்லாமல் இருக்க வேண்டாம். அபாயம் அற்றதும் நம்பிக்கை னதுமான பிலிப்ஸ மில்க் ஆப் மக்னீஷியா குடும்பத்தில் எல்லோருக்கும் தேவைப்படும்.

மலச்சிக்கலை பிலிப்ஸ மில்க் ஆப் மக்னீஷியா இதமான முறையில் நீக்கி உங்களுடைய ஜீரண உறுப்புகளை எப்பொழுதும் போல் இயங்கச் செய்கிறது.

பிலிப்ஸ்

மில்க் ஆப் மெக்னீஷியா

மான்யுபாக்சரர்: ரிஜிஸ்டர்ட் யூஸர்
டேய்ஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபுக்சரிங்)
பிரைவேட் லிமிடெட்,
62, பண்டல் ரோட், கல்கத்தா-19




தேர்ந்தெடுக்கப் பலரகங்கள்
ரூ. 125 க்கு மேற்பட்டு ரேடியோக்களும் டிரான்ஸிஸ்டர்களும்
மாடல் டிபி 0816
மாடல் டிபி 0581
மாடல் டிபி 0579
மாடல் டிபி 0509
மாடல் டிஏ/டியு 0777
மாடல் டிஏ 0926
மாடல் டிஏ/டியு 0202
மாடல் டிஏ/டியு 0776
மாடல் டிஏ/டியு 0824
மாடல் டிஏ 0366
நட்பு மிக்க உங்கள் மர்பி வியாபாரியிடம் இன்றே அவற்றைக் காணுங்கள்.
murphy
மர்பி
Murphy sets the standard
NAS b142d

ஜோடியாகக் காதலர்கள் ஆக்கிர மித்துக் கொண்டிருப்பார்கள்'' என்றான் ரங்கமணி. நீலகிதர் சிரித்துக் கொண்டார். அவரு டைய கைவிரல்கள் வெற்றிலை யில் சுண்ணும்பைத் தடவுவ திலும், வெற்றிலையை மடிப்ப திலும் சுறுசுறுப்பாயிருந்தன.

ரங்கமணியின் பார்வை, மெரி னுக் கடற்கரைப் பக்கமாகவே சென்றது. அவனுடைய நினை வும் அந்தப் பிராந்தியத்தையே சுற்றி வந்தது.

மெரினு கடற்கரையில் எத் தனையோ நிலவு வேளைகளில், அவனும் அவனுடைய இதய ராணியும் இதய இரகசியம் பேசிய நாட்கள் நினைவில் வட்ட மிட்டன. கடந்தகால நினைவில் உணர்விழந்து கிடந்தான்.

சிந்திக்கும் வேகத்தில் பேச முடிந்தால்?



ஆதாரம்: காரனெட்
தகவல்: பாபு

நாம் சாதாரணமாகப் பேசும் வேகம் நிமிடத்துக்கு 125 வார்த்தைகள். ஆனால் நாம் நினைக்கும் வேகம் நிமிஷத் துக்கு 500 வார்த்தைகள். அதாவது நாம் பேசுவதை விட நான்கு மடங்கு அதிவேக மாகச் சிந்திக்கிறோம்! வளவள வென்று பேசி 'உங்களைப் 'போர்' அடிக்கும் ஒருவர் சிந் திக்கும் வேகத்தில் பேசவும் முடிந்தால் உங்கள் கதி என்ன? யோசித்துப் பாருங்கள்!

சென்னையில் அவன் படித்துக் கொண் டிருந்த காலத்தில் நடந்த சம்பவங்கள் அவை.

கல்லூரியில் மாணவர் சங்கத்துத் தலைவர் தேர்தல் நடந்து கொண்டிருந்தது. ஒரு மாணவரும், ஒரு மாணவியும் போட்டி யிட்டார்கள். அதில் ரங்கமணிக்கு முதலில் அக்கறை யில்லை. ஆனால் தேர்தலில் இடை ரென்று ஒரு திருப்பம் ஏற்பட்டபோதுதான் ரங்கமணியின் கவனம் அதில் சென்றது. போட்டியிட்ட மாணவன் போட்டியிலிருந்து விலகப் போவதாகக் கேள்விப்பட்டபோது தான் ரங்கமணி தேர்தலில் அக்கறை கொண்டான்.

போட்டியிட்ட மாணவனைப் போட்டியி லிருந்து விலகும்படி கமலவாசகி என்ற மாணவி கேட்டதாகவும், அதற்கு அந்த மாண வன் சம்மதித்துவிட்டதாகவும் தகவல் கிட்டிய போது ரங்கமணி கொதித்தெழுந்தான்.

தேர்தல் நாளன்று கல்லூரியில் எல்லா மாணவர்களும் கூடினார்கள். போட்டியிடும் நபர்களின் பெயர்களைக் கல்லூரித் தலைவர் வாசித்தபோது போட்டியிடும் மாணவன் எழுந்து, தான் விலகிக் கொள்வதாகச் சொன்னபோது, ரங்கமணி, ''வெட்கம், மகா வெட்கம்'' என்று கூக்குரலிட்டான். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. விமலா என்ற மாணவியே போட்டியின்றித் தேர்ந் தெடுக்கப்பட்டாள் என்று கல்லூரித் தலைவர் அறிவித்ததும், ரங்கமணி, வேகமாக மேடை யில் ஏறிப் பேசத் தொடங்கினான்.

''கல்லூரித் தலைவர் அவர்களே, சகோதர சகோதரிகளே, வெற்றி பெற்ற சகோதரி விமலாவுக்கு என் வாழ்த்துக்கள். சரித் திரத்தைப் புரட்டினால் பல அரசர்களைப் பெண்கள் மயக்கித் தோல்வியடையச் செய் திருக்கிறார்கள் என்பது புலனாகும். அரசியல் சதிகளுக்குக்கூடப் பெண்களின் அழகு பயன் பட்டிருக்கிறது. இதே பாணியைக் கையாண்டு விமலா வெற்றி பெற்றது, போற்றத் தக்க தாகும்...''

அந்தச் சமயத்தில் மாணவிகள் இருந்த பக்கத்தில் சலசலப்பு ஏற்பட்டது. விமலா, ஆவேசத்துடன் எழுந்து நின்றாள்.

''எங்கள் அழகுக்கும் இந்தத் தேர்தலுக் கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லை'' என்று இரைந்து கத்தினாள். ரங்கமணி அமைதி யாகச் சொன்னான்:

''அது உண்மைதான். உங்களுடைய அழகுக்கும் இந்தத் தேர்தலுக்கும் சம்பந்த மில்லை என்பதற்கு உங்களுடைய முகமே சாட்சி.''

இதைக் கேட்டுக் கூட்டத்தில் குபீரென்று சிரிப்பொலி கிளம்பியது.

''இந்த மாதிரியான மட்டரகமான பேச் சுக்களை நாங்கள் பொறுக்க மாட்டோம்'' என்றாள் விமலா.

''நான் என்ன பொய் சொல்லிவிட்டேன்? தேர்தலுக்கு நின்றவனை அனுகி, விலகிக் கொள்ளத் தூண்டியது பொய்யா? உங்கள் முகராசி அவனிடம் செல்லாது என்பதை உணர்ந்து, உங்களுக்காகக் கமலவாசகி என்ற அழகிய மாணவியை அவனிடம் அனுப்பி, அவனை விலகிக்கொள்ளுமாறு செய்தது பொய்யா? நீங்களே அவனிடம் நேரில் சென்று விலகிக் கொள்ளுமாறு வேண்டி யிருக்கலாமே. அதை விட்டு விட்டு, அழகில் சிறந்த கமலவாசகியை அனுப்பியதன் கார ணம் என்ன?'' என்று கேட்டான் ரங்கமணி.

''விசுவாமித்திரரிடம் மேனகையை எதற் காக இந்திரன் அனுப்பினான்; அதே கார ணம்தான்'' என்று குறுக்கே பேசினான் ஒரு மாணவன்.

இதைக் கேட்டதும் கமலவாசகி கோபத் துடன் எழுந்தாள்.

''நான் அவரை விலகிக்கொள்ளும்படி செய்தேன். இதில் என்ன தவறு?'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

''என்ன காரணத்தைக் காட்டிப் போட்டி யிலிருந்து விலகி நிற்கச் சொன்னீர்கள்?''— ரங்கமணி கேட்டான்.

''போய்க் கேட்டேன். உடனே அவர் ஒப்புக் கொண்டார்'' என்றாள் கமலவாசகி, அலட்சியமாக.

''இதற்கு என்ன அர்த்தம்? உங்களுடைய அழகு வேலை செய்திருக்கிறது. சேலையைக் கண்டு பல்லை இளிக்கும் அந்த நண்பனும் உடனே ஒப்புக் கொண்டு விட்டான். இது

உங்களுக்கு அவமானமாயில்லை? போட்டியிடும் நண்பரை விலகச் சொன்னதற்காக நீங்கள் தலைகுனிய வேண்டும். உங்களைக் கண்ட உடனேயே விலக அவன் சம்மதித்ததற்காக இன்னும் அதிகமாக நீங்கள் தலைகுனிய வேண்டும். உங்களுடைய அழகும் சிரிப்பும் இந்த மட்டமான காரியத்துக்குப் பயன்பட்டிருக்க வேண்டாம்'' என்றான் ரங்கமணி.

நிலைமை அளவு கடந்து போவதையறிந்த கல்லூரித் தலைவர், ''ரங்கமணி! தனிப்பட்டவர்களைத் தாக்கிப் பேசக் கூடாது'' என்றார்.

''எது தனிப்பட்ட விஷயம்? இது இக்கல்லூரி மாணவர் அனைவருக்கும் பொதுவான விஷயம். எங்களுக்குத் தலைவனாக ஒருவனைத் தேர்ந்தெடுக்கும் ஒரு புனித விழா இது. ஆனால் நடந்த தேர்தலோ.... மன்னிக்கவும், இது தேர்தல் இல்லையே, ஒரு கேலிக்கூத்து'' என்றான் ரங்கமணி. இந்தச் சமயத்தில் போட்டியிலிருந்து விலகிய மாணவன், கோபத்துடன் எழுந்தான். ''போட்டியிலிருந்து விலகியது என் இஷ்டம்'' என்றான்.

''உன் இஷ்டப்படி செய்ய இது உன் சொந்த விஷயம் மட்டுமில்லை. இத்தனை மாணவர்களின் பிரதிநிதியாக நீ போட்டியிட்டிருக்கிறாய். முதலில், போட்டிக்கு மற்ற மாணவர்களின் சம்மதம் பெற்றுக்கொண்டு பெயர் கொடுத்தாய். உனக்காகப் பல மாணவர்கள் தீவிரமாகப் பணிபுரிந்தார்கள். இந்த நன்றியை யெல்லாம் மறந்து, ஒரு மாணவி உன்னைத் தேடிவந்த குதூகலத்தில் விலகச் சம்மதம் கொடுத்தாயே, யாரிடம் கேட்டுச் சம்மதித்தாய்? உனக்காகப் பணிபுரிந்த நண்பர்களிடமாவது சம்மதம் கேட்டாயா? கமலவாசகி சிரித்துப் பேசியதும் உன் சுய அறிவு மழுங்கிவிட்டது'' என்றான் ரங்கமணி. மாணவர்கள் உற்சாகத்தால் ஆரவாரம் செய்தார்கள். அந்த மாணவனோ கோபத்தினால் பேச முடியாமல் தவித்தான். ரங்கமணி மேலும் பேசினான்:

''போட்டியிலிருந்து விலகப் போவதை முன்பே அறிவித்திருந்தால் நாங்கள் யாராவது போட்டியிட்டிருப்போம். அதையும் கெடுத்தாய்.... போ.... கடைக்குப் போய் ஒரு சேலையை வாங்கிக் கட்டிக் கொள். உன்னை விலகச் சொன்ன கமலவாசகிக்கு ஒரு வேஷ்டி வாங்கிக் கொடு'' என்று கூறிவிட்டு, மேடையிலிருந்து இறங்கி வேகமாக வெளியேறினான். மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள். மாணவிகளோ திக்பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தார்கள்.

மறுநாள் காலையில் கல்லூரி வாசலில், ஒரு கரும் பலகையில், போட்டியிலிருந்து விலகிய மாணவனின் உருவம்மாதிரி ஒன்றை வரைந்து அதற்குச் சேலையும் ரவிக்கையும் வரைந்து, கீழே அவன் பெயரையும் எழுதி விட்டான் ரங்கமணி. மாணவர்கள் அனைவரும் அந்த இடத்தில் கூடிச் சித்திரத்தை ரசித்துக்கொண்டிருந்தார்கள். கல்லூரி மணி அடித்ததும் கூட்டம் கலைந்து வகுப்புக்குள் போகத் தொடங்கியது. அந்தப் படத்துக்குப் பக்கத்தில் ரங்கமணி மட்டும் நின்றுகொண்டு படத்துக்கு மீசை வரைந்து கொண்டிருந்தான்.

''மிஸ்டர்.... மிஸ்டர்.....'' என்ற குரலைக் கேட்டுத் திரும்பினான். பின்னால் கமலவாசகி நின்று கொண்டிருந்தாள்.

''நேற்று நீங்கள் எங்களைத் தாக்கிப் பேசியது தவறு'' என்றாள் கமலவாசகி.

''உண்மைதான். ஏதோ கோபத்தில் உங்களையும் சேர்த்துப் பேசிவிட்டேன். ஒரு பெண்ணின் சிரிப்புக்கும் பார்வைக்கும் சுயமரியாதையை அடகு வைத்து மானத்தை இழந்த அவனை மட்டும்தான் தாக்கியிருக்க வேண்டும். எவ்வளவு சின்னப்புத்தி இருந்தால் நீங்கள் கேட்டதும் அவன் சம்மதித்திருப்பான்'' என்றான் ரங்கமணி.

''நீங்கள் இன்னும் தடம் புரண்டுதான் பேசுகிறீர்கள்'' என்றாள் அவள் எரிச்சலுடன்.

''நீங்கள்தான் அந்த மாணவனைத் தடம் புரள வைத்து விட்டீர்களே! இதோ இந்தப் படத்துக்குப் பக்கத்தில் வேண்டுமானால் உங்கள் படத்தை வேஷ்டியுடன் வரையட்டுமா?'' என்று ரங்கமணி கேட்டான். அவனை எரித்து விடுபவளைப்போல் முறைத்துப் பார்த்துவிட்டு, வேகமாகக் கல்லூரிக்குள் நுழைந்து விட்டாள், கமலவாசகி.

''இந்த அழகுக்கு அந்த மாணவன் பல்லை இளித்து ஏமாந்ததில் என்ன அதிசயம் இருக்கிறது. விசுவாமித்திரரே அழகுக்கு முன்னால் தோற்றாரே; இந்தச் சாதாரண மாணவன் எந்த மூலை?'' என்று முணகினான் ரங்கமணி.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மத்தியானம் கமலவாசகி, கல்லூரிக்குள்ளிருந்து வந்து கொண்டிருந்தாள். கல்லூரியின் வடக்கு வாசல் பக்கத்தில் ரங்கமணி நிற்பதைக் கண்டதும், மேற்குப் பக்கத்து வாசல் வழியாகச் செல்ல வேகமாகத் திரும்பினாள். திரும்பிய வேகத்தில் பக்கத்திலிருந்த முட் செடியில் புடைவை மாட்டிக்கொண்டு அவளைப் போக விடாமல் இழுத்தது.

''ஐயோ....'' என்றாள். குரலைக் கேட்டுத் திரும்பிய ரங்கமணி, பரபரப்புடன் உதவிக்கு ஓடினான். ''அவசரப்படாதீர்கள். நான் எடுத்து விடுகிறேன்'' என்று கூறி முட்களிலிருந்து புடைவையை விலக்க முயன்றான்.

''வேண்டாம்... வேண்டாம்'' என்றாள் கமலவாசகி, எரிச்சலுடன்.

''பரவாயில்லை, உங்களால் எடுக்க முடியாது. புடைவை கிழிந்து விடும்.''

''பல்லைக் காட்டியதால் முள்ளிலிருந்து புடைவையை விடுவித்ததாகப் பிரசாரம் செய்வீர்கள்.... விலகுங்கள். நானே எடுத்துக்கொள்கிறேன்'' என்றாள் கமலவாசகி.

''ஓ...அதைச் சொல்லுகிறீர்களா? நான் அவனைப் போல் நடந்து கொள்ள மாட்டேன். நீங்கள் பல்லைக் காட்டாவிட்டாலும் நான் இந்த உதவியைச் செய்கிறேன்'' என்று கூறிக் கொண்டே புடைவையை முள்ளிலிருந்து எடுப்பதில் ஈடுபட்டான். 'களுக்' கென்று சிரித்தாள் கமலவாசகி. குனிந்திருந்த தலையை நிமிர்த்தி அவளைப் பார்த்தான் ரங்கமணி. அவளும் பார்த்தாள். மறு கணம் அவள் பார்வை தரையை நோக்கித் தாழ்ந்தது. ரங்கமணிக்கு என்னவோ போலிருந்தது அந்தப் பார்வை.

வெறும் பார்வைக்கு இவ்வளவு இனிமை உண்டா....?

(தொடரும்)



செய்திப் படங்கள்

■ வால்டேரில் நியூ காலனி ஆஸ்திக சமாஜத்தில் திருவையாறு பிரும்மஸ்ரீ அண்ணாசாமி பாகவதர் சமீபத்தில் ஹரிகதை வழங்கிச் சிறப்பித்தார்.

■ ஹௌரா திருவள்ளுவர் கலை மன்றத்தின் பதின்மூன்றாவது ஆண்டு மலரைச் சென்னை முதன் மந்திரி திரு அண்ணாதுரை அவர்களுக்கு மன்ற உபதலைவர் திரு கல்யாணம் வழங்குகிறார்.





■ நேரு நினைவாக ரஷ்யப் பரிசு பெற்ற இந்தியக் கவி சுத்தானந்த பாரதியார் மாஸ்கோவில் போடல்ஸ்க் பகுதியில் ரஷ்ய மக்களோடு அளவளாவுகிறார்.

■ முன்னாள் மந்திரி திரு கே. வேங்கடசாமி நாயுடு அவர்களின் எழுபத்தோராவது பிறந்த நாள் உபராஷ்டிரபதி திரு வி. வி. கிரி அவர்களின் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. அவருக்கு உபராஷ்டிரபதி பொன்னாடை போர்த்துகிறார்.



அத்தியாயம் 10

பழி தீர்ந்தது!

இளவரசன் இளநன்னனைத் தேடிக் கொண்டு துளு நாட்டு அரண்மனையினுள் நுழைந்தனர் நார்முடிச் சேரலும் கொங்குச் சேரரும். அவர்களுக்கு—முன்னே புகழ் பெற்ற சில முதன்மையான சேரப் போர் வீரர்கள் சென்றனர். வீரர்களுக்கு நடுவே செங்குட்டுவன் சென்றான்.

துளு நாட்டு அரண்மனையிலே புகுந்த சேரப் படைகளுக்குத்தான் எத்தகைய வரவேற்புக் காத்திருந்தது! வெள்ளைக் கொடி தாங்கிய போர் வீரர்கள் அரண்மனைக்குள்ளே அணிவகுத்து நின்றனர். துளு நாட்டுப் பெண்கள் கையிலே விளக்குகள் தாங்கிச் சேர மன்னனையும் அவனுடைய தானைத் தலைவர்களையும் வரவேற்றார்கள்!

அரச மன்றத்திலே நுழைந்த சேர இளவரசன் செங்குட்டுவன் அப்படியே வியப்பிலே ஆழ்ந்து போனான். இரண்டு கைகளையும் கூப்பி வணங்கி அன்போடு வரவேற்றான் இளநன்னன்.

''சேர மன்னனே! நார்முடி வேந்தே! இந்த இளவரசனுடைய வணக்கத்தை நீங்கள் அன்போடு ஏற்று அவனை மனமுவந்து வாழ்த்த வேண்டும். இளநன்னனுடைய குண நலன்களையும், உத்தமப் டண்புகளையும் பற்றி நன்கு அறிந்துள்ள பலரிலே நானும் ஒருவன். சிப்பியிலே விளைந்த நல் முத்து இது! முத்தை நமக்குத் தந்துவிட்டு இதை ஈன்ற சிப்பி மறைந்து விட்டது!'' என்றார் கொங்குச் சேரர்.

''நன்கு சொன்னீர்கள் கொங்குச் சேரரே! அப்படியே ஆகட்டும்! சிப்பிகளைப் பிளந்து அவற்றிலிருக்கும் நல்



வெண்ணிலவுப் பெண்ணரசி

சோமு



முத்துக்களை எடுத்துக் கொள்வது என்பது நம்முடைய சேர மரபோடு ஒட்டிய செயல்தானே! இளநன்னன் என்ற இந்த நல்முத்து இனி நாம் அணிந்து மகிழக் கூடிய அரச முத்து!''

பாதங்களைத் தொட்டு வணங்கிய இளநன்னனை அன்போடு தழுவிக் கொண்டான் நார்முடிச் சேரல் மன்னன்.

''தம்பி, வணங்கி எழுந்த துளு நாட்டு இளவரசனாகிய நீ, இனி நம்முடைய மக்களின் வணக்கத்துக்கு உரியவன். சேர அரண்மனைகளிலே பிறந்து வளர்ந்த இளவரசர்களைப் போலவே, நீயும் இனி நமது அன்புக்குரிய அரச மகன். செங்குட்டுவக் களிறே, நீயும் வேலவனும் இனி இளநன்னனை நம்மில் ஒருவனாக ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து இளநன்னன் நம்முடைய சேர மரபுக்குரிய 'உதியன்' என்ற பட்டத்தைச் சூடி, இந்தத் துளு நாட்டை நமது சார்பிலே ஆண்டுவரக் கடவன்! உரிய காலத்தில் உரிய முறைப்படி அவனுக்குகந்த வகையிலே திருமணம் செய்வித்து, இனித் துளு நாடு என்பது சேர நாட்டின் கிளை அரசு என்று கூறும் வகையிலே இந்த நாட்டுக்கு ஒரு மறு வாழ்வை நிலை நாட்டுவோமாக!''

இவ்வாறு அறிவித்தார் நார்முடிச் சேரல் மன்னர். சேர வீரர்கள் திருச்சின்னம் முழங்கி வாழ்த்தொலி எழுப்பினார்கள். கொங்குச் சேரனும் சேர இளவல் செங்குட்டுவனும் இளநன்னனுக்கு அருகிலே சென்று இருபுறமும் நின்று கொண்டார்கள். துளு நாட்டுக்குரிய எதிர்கால அரசன் என்ற முறையிலே, அவனை இருவரும் இரு மருங்கிலும் நின்று வழிநடத்தியவாறு, படைகள் முன் செல்ல, அரச வீரர்கள் வாழ்த்துக் கூற, அரச மன்றத்தின் முகப்புக்கு அழைத்துச் சென்றார்கள். இதன் பின்னர் அணிகள் கலைந்து இளநன்னனும் துளுவீரர்களும் மட்டும் போர்க்களத்தை நோக்கிச் சென்று, உயிர்நீத்த அரசனுக்கும் மற்றத் தானைத் தலைவர்களுக்கும் உரிய சடங்குகளிலே அரச மரபோடு முனைந்தார்கள்!

அரண்மனைக்குள்ளே அரச ஏற்பாடுகள் இவ்வாறு செயற்பட்டபோது சிறைக்கூடத்திலே கதவுகள் திறந்து சூலபாணிக் கிழவர் மிகுந்த

கேசம் உதிருகிறதே என்ற கவலையா?



இன்றே ஸில்விக்ரின் உபயோகிக்கத் தொடங்கி உங்கள் கேசத்திற்குப் புத்துயிர் அளியுங்கள்

இந்த அபாயக் குறிகளை அசட்டை செய்யாதீர்கள்.

கேச உதிர்வு. உச்சந்தலையிலே திளவு. கார்போல் வரண்ட உரோமம். உங்கள் கேசத்திற்கு உகந்த ஊட்டமில்லை என்பதற்கான அறிகுறிகள் இவை. ஊட்டமின்மைதான் இளமையிலேயே வழுக்கை விழக் காரணமாகிறது. அந்த ஊட்டமின்மைக்கு உரிய நிவாரணம் ஸில்விக்ரின்—கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

ஸில்விக்ரின் எப்படி வேலை செய்கிறது.

18 அமினோ-அமிலங்களை உங்கள் கேசத்திற்கு உணவாக அளிக்கிறது இயற்கை. இந்த அமினோ—அமிலங்கள் எல்லாமே அடர்வாக ஒன்று செறிந்த வடிவில் கிடைக்கச் செய்வது ஸில்விக்ரின் ஒன்றே. அது வேகமுடன் மயிர்க்கால்களை ஊடுருவி, ஊட்டமளித்து உரமேற்றி, பாங்கான கேச வளர்ச்சியை ஊக்குவிக்கும்.

உபயோக விதிமுறைகள்:

உங்கள் உச்சந்தலைமீது அன்றடம் இரு நிமிட நேரம் ப்யூர் ஸில்விக்ரின் தேய்த்திடுங்கள். கேச நிலை அபிவிருத்தி அடையும் வரை உபயோகியுங்கள் ப்யூர் ஸில்விக்ரின். கேச நலம் மீண்டு விட்டதென்றால் அதன் பின் கேச நலனைக் காத்துக் கொள்ளத் துணை புரிவது ஸில்விக்ரின் ஹேர் டிரஸ்ஸிங்-ப்யூர் ஸில்விக்ரின் அடங்கிய, எண்ணெய் அடிப்படை கொண்ட லோஷன்.

ஆல் அபௌட் ஹேர் (All About Hair) என்ற புத்தகத்தின் இலவசப் பிரதியைப் பெற, எழுதுங்கள்: டிபார்ட்மெண்ட் K-1, தபால் பெட்டி 727, பம்பாய்-1.



ஸில்விக்ரின் தயாரிப்புகள்— ஆடவர், பெண்டிர் யாவரும் உபயோகிக்கத் தக்கவை.

ஸில்விக்ரின்

கேசத்திற்குரிய இயற்கையான போஷாக்கு.

LPE-Aiyars S. 1 TAM

அன்போடு வெளி வந்தார். வாசலிலே அவரை வரவேற்று அவருடைய பாதங்களிலே விழுந்தான் அழலாடி.

"அழலாடி!" என்று கூப்பிடும்போதே கிழவருக்கு நெஞ்சை அடைத்தது. அப்படியே தலை சுற்றியது. மகள் பொன்மணியின் நினைவிலே மனம் கிறங்கியது. மயக்கமுற்றுக் கீழே சரிந்த கிழவரை இரண்டு கைகளாலும் தாங்கி அணைத்தான் அழலாடி.

சேர வீரர் கைத்தாங்கலாகச் சூலபாணிக் கிழவரை அரச மன்றத்துக்கு அழைத்து வந்தார்கள். மயில் விசிறியினால் அவருக்குக் காற்று வீசிக் கண்களைத் துடைத்துக் கொடுத்து நெற்றியிலே சூடு ஏற்றினான் அழலாடி. கிழவர் கண்களைத் திறந்தார். திரிகடுகக் குடிநீர் கொடுத்து மயங்கிய கிழவரை நினைவு தெளிய வைத்தார்கள் அரண்மனை வைத்தியர்கள்.

"அழலாடி! நீ கூறிய உறுதிமொழியை நிறைவேற்றி விட்டாய். அதைப் பார்த்து மகிழப் பொன்மணிக்குத் தான் கொடுத்து வைக்கவில்லை. முல்லை மூதூரிலே என்னுடைய குலக் கொழுந்து எரிந்து சாம்பலாகி விட்டது! என்ன செய்வது!"

இப்படிச் சொல்லும்போதே கிழவருக்கு மறுபடியும் நெஞ்சை அடைத்தது. வைத்தியர்கள் அருகில் வந்து மருந்துப் பொடியைத் தேனிலே குழைத்து நாவிலே தடவினார்கள்.

அழலாடி மயில் விசிறியினால் கிழவருக்குக் காற்று வீசினான். கண்கள் கலங்கின. மனைவியின் நினைவு அழலாடிக்கு நெஞ்சை நிரப்பி எண்ணங்களை உருக்கியது. முல்லைமூதூரிலே பிடித்து எரிந்த நெருப்பு அவனுடைய இதயத்தைச் சுட்டது.

கிழவர் கண்களை விழித்தார். சுற்றுமுற்றும் பார்த்தார்.

"அழலாடி! எத்தனையோ போர்க்களங்களைப் பார்த்த உடம்புதான் இது. ஆனாலும் பாசம் என்று ஒன்று ஏதேதோ செய்கிறது இந்த உடம்பை! ஒரு வீரனுக்கு இருக்க வேண்டிய நெஞ்சுத் திடத்தையெல்லாம் அன்பு இளக்குகிறது. ஆனாலும் இனி நாம் செய்து முடிக்க வேண்டிய ஒரு முதன்மையான கடமை இருக்கிறது. அதைச் செய்து முடிக்கும் வரை என் நினைவு தடுமாறக் கூடாது. என் உடம்பு தளரலாகாது. அழலாடி, புறப்படு. இப்போதே புறப்படு. தன்னைக் கொன்ற உன்னுடைய வீர வாளிலே அந்த அரச இரத்தம் முற்றும் உலர்ந்து போகும் முன்பு நடு கல்லிலே கொண்டு உனது வீர வாளை இட்டு வணங்கக் கடவாய் மகனே! புறப்படு, புறப்படு!"

கிழவருடைய உடம்பிலே ஒரு புதிய வேகம் பிறந்தது. மயங்கிய உறுப்புக்களிலே உரம் பாய்ந்தது. கிழவர் வெறி கொண்டு எழுந்தார்.

"அழலாடி! அரச ஊர்திகளை ஆயத்தம் செய்து கொண்டு இப்போதே நடு கல்லுக்குப் புறப்பட வேண்டும். இந்த உடற்கூட்டிலே மனவேகம் சுழலத் தொடங்கி விட்டது. ஏதோ ஒன்று என்னைப் பிடித்து ஆட்டுகிறது. கோசர் குலத்தின் பழியைத் துடைத்தாய் அல்லவா! அந்த வீரச் சாதனையைப் பாராட்டி உன்னை வாழ்த்துவதற்காக நடுகல்லிலே கோசர் தலைமகனுடைய ஆவி துடித்துக் கொண்டு நிற்கிறது. ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல் நாம் அங்கே செல்ல வேண்டும்! புறப்படு மகனே!"

சூலபாணிக் கிழவர் இவ்வாறு சொல்லிக் கொண்டே எழுந்து நடக்கத் தொடங்கினார். அங்கே கூடியிருந்த வைத்தியர்களுக்கும் போர் வீரர்களுக்கும் அது ஏதோ ஓர் ஆவி உலகத்து இயக்கம் போலத் தோற்றம் தந்தது. கிழவருடைய நடமாட்டமாக இல்லை அது!

அழலாடி அது கண்டு ஒரு விநாடியும் தாமதிக்க விரும்பவில்லை. தன்னைச் சுற்றி நின்ற வீரர்களைச் சுற்றுமுற்றும் பார்த்தான். அப்போது அந்த வீர அணியை ஊடுருவிக் கொண்டு உள்ளே வந்தான் வேலவன் கோதை.

"தம்பி அழலாடி! நாம் நடு கற்காட்டுக்குச் செல்ல வேண்டிய முறையிலே எல்லா ஏற்பாடுகளையும் முடித்தாயிற்று. அரச ஊர்திகள் நமக்காகக் காத்திருக்கின்றன. இப்போதே புறப்படுகிறோம்!"

வேலவன் கோதை இவ்வாறு அறிவித்ததும், சூலபாணிக் கிழவரும் அழலாடியும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அரச ஊர்திகளுக்கு முன்னும் பின்னும் சேர வீரர்கள் குதிரைகளிலே சென்றார்கள். ஊர்திகளிலே வேலவன் கோதை, அழலாடி, சூலபாணிக் கிழவர், மூவரையும் தொடர்ந்து அரசச் சுற்றத்தார்களிலே முதன்மையான சிலர் சென்றார்கள்.

என்றோ ஒரு நாள், ஓர் இரவிலே தன்னந் தனியாக ஏதோ ஓர் உணர்ச்சி வெறியிலே ஓட்டமும் நடையுமாகச் சென்றாளே பொன்மணி, அதே காடு. அந்த எல்லையிலே வந்ததும் வேலவனும், அழலாடியும், சூலபாணிக் கிழவரும் ஊர்தியிலிருந்து இறங்கிச்

சிவிகையிலே ஏறிக் கொண்டார்கள். குறிப்பிட்ட சில தலைவர்கள் மட்டும் சிவிகைக்கு முன்னும் பின்னும் குதிரைகளிலே சென்றார்கள்.

''வீரர்களே ! நீங்கள் எல்லாரும் காட்டின் எல்லையிலே நின்று பாதுகாவல் புரியுங்கள். நாங்கள் நடுகல்லுக்குச் சென்று மீளுகிறோம் !''

இவ்வாறு கட்டளை இட்டான் வேலவன் கோதை !

சூலபாணிக் கிழவருடைய முகத்திலே நடு கல்லை நெருங்க நெருங்க ஒரு தெளிவு உண்டாயிற்று. இது வரை இருந்த கலக்கம் இப்போது எங்கோ மறைந்து விட்டது. கண்களிலே எந்த வைகய வேதனையும் இல்லை. நெற்றியிலே துயரம் மறைந்து பெருமிதம்தெளிந்தது.

''தம்பி வேலவா!'' என்று அழைத்தார் சூலபாணிக் கிழவர், சிவிகையிலிருந்து இறங்கிக் கொண்டே.

''தம்பி! வாழ்விலே சிலருக்குத்தான் இத்தகைய பெரும் பேறு கிடைக்கும். அது எனக்கு இன்று கிடைத்தது!''

இவ்வாறு வேலவனிடம் சொன்னார் சூலபாணி. அவருடைய உடம்பில் எத்தகைய பதற்றமும் இல்லை.

''அழவாடி ! உள்ளத்திலே பால் வார்ப்பது என்று ஓர் அழகான சொல் நம்முடைய அருமைத் தமிழ் மொழியிலே வழங்கி வருகிறது அல்லவா! இந்த நடு கல்லிலே பாலை வார்க்கிற போது, என் முதிய உள்ளத்திலும் பாலை வார்க்கிறீர்கள் நீங்கள் இருவரும்! நமக்கு நாக்கிலே பால் பட்டால் சுவைக்கும்! உள்ளத்திலே கொண்டு பாலை வார்க்கும் போது அதுவும் சுவைக்கிறது என்பதை நீங்கள் இருவரும் புரிந்து கொள்கிறீர்களா? வயதான ஒரு கிழவனுடைய மனம் உங்களுக்குப் புரிகிறதோ இல்லையோ, ஒன்றுமட்டும் உங்களுக்கு உறுதி சொல்லுகிறேன். இறந்து போன பிறகு இறந்து சென்ற பெரியோர்கள் புதிதாக நம்மிடம் எதுவும் எதிர்பார்ப்பதில்லை. அவர்களுடைய கனவுகளை யெல்லாம் நனவாக்குவதற்காக நாம் செயல் புரிகிறோம் அல்லவா, அந்தச் செயல்தான் ஆவிகளுக்கு நாம் வார்க்கக்கூடிய உண்மையான பசும் பால்! நடு கல்லுக்குள்ளே கண் துயில்கிற கோசர் தலைமகனுக்கு இன்று தான் உண்மையாகப் பால் வார்க்கிறோம் நாம். அந்தப் பசும் பாலிலே தூளு நாட்டின் அரச இரத்தம் கலந்திருக்கிறது. அந்த ஆவிக்கு இன்று தான் உள்ளம் குளிரும்! இந்தக் குளிர்ச்சிக்காக, இந்தத் தண்மையான அமைதிக்காக இந்த நடுகல்வீரன் எத்தனை ஆண்டுகள் நடு கல்லுக்குள்ளே துடிதுடித்துக் கொண்டு நிற்கிறான் ! என் அப்பனே, கோசர் குலத் தலைவனே ! என் தெய்வமே, இதோ வீரன் வந்து நிற்கிறான் உன் முன்னிலையிலே! நீ கேட்ட அரச இரத்தம் அவனுடைய வீர வாளிலே தோய்ந்

□ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □



கவியின் பழக்கம்!


கோலரிட்ச், லாம்ப் என்ற இரண்டு ஆங்கிலக் கவிகள் நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். கோலரிட்சின் பழக்கம் எப்போதும் பேசிக் கொண்டேயிருப்பது.

ஒரு பூங்காவில் ஒரு நாள் காலை லாம்ப், அவரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

லாம்பின் கோட்டுப் பித்தானைப் பிடித்துக் கொண்டார் கோலரிட்ச். லாம்ப்போ அவசர வேலையாகப் போக வேண்டும். என்ன செய்வது என்று சிந்தித்தார். கோலரிட்ச் அறியாமல் தம் பொத்தானைக் கத்தரித்துவிட்டு லாம்ப் போய்விட்டார்.

ஆனால், என்ன ஆச்சரியம்! மாலையில் தம் வேலையை முடித்துக்கொண்டு அவ்வழியே அவர் திரும்பும்போது லாம்பின் பொத்தானை இன்னும் அதே நிலையில் வைத்துக் கொண்டு, ஆகாயத்தைப் பார்த்துப் பேசிக் கொண்டேயிருந்தார் கோலரிட்ச்!


இருபது
லட்சத்திற்கு
மேற்பட்ட மக்களை
மகிழ்விப்பது
கோல்ட்
ஸ்பாட்
GOLD
SPOT
இந்தியாவின்
உன்னத
விற்பனையுள்ள
பானம்
Creative Unit-GS-



ஜம்ஷெட்பூரில் தொழிற்சாலையின் பாதுகாப்பு பணியின் பகுதி

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் 75 சதவீதம் தவிர்க்கக் கூடியதாயுள்ளன என்று அனுபவத்தில் தெரியவருகிறது. ஏனெனில் தொழிலாளிகளின் கவனக்குறைவுதான் அவைகளுக்கு காரணமாகின்றன. அதனால்தான் டாடா ஸ்டீலில் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒவ்வொரு தொழிலாளிக்கும் வலியுறுத்தப்படுகிறது.

டாடா ஸ்டீல் ஆலையில் ஒரு தொழிலாளி முதன் முதலாக வேலையில் சேர்ந்தவுடன் அவருக்கு அறிவிக்கப்படுவது பாதுகாப்பு விதி முறைகள் தான். அப்படி ஆரம்பிக்கப்பட்ட படிப்பினை கடைசி வரை தொடர்ந்து போதனைமூலம் நடைபெற்று வருகிறது. இயந்திரம் இயங்கும் இடங்களில் ஒழுங்கான கண்காணிப்பு, பாதுகாப்பு சாதனங்களை கையாளும் திறன், பாதுகாப்பு எச்சரிக்கை கமிட்டியின் சுறுசுறுப்பான உழைப்பு இவையெல்லாம் சேர்ந்து கவனக்குறைவால் ஏற்படும் விபத்துகளை முற்றிலும் தவிர்க்க உதவுகின்றன. தொழிலாளிகள் பயமில்லாமல் தொழிற்சாலையில் பணியாற்றும் சூழ்நிலையை உருவாக்குகின்றன. தவிர, பாதுகாப்பு விதிமுறைகளைப் பற்றிய பிரசாரம், பொருட்காட்சிகள், போட்டிகள் எல்லாம் ஒவ்வொரு தொழிலாளியிடமும் பாதுகாப்பு விதிகளை அனுசரிக்கும் பழக்கத்தை வழக்கமாக்கி விடுகின்றன.

1961ல் மாதத்திற்கு சராசரி 249 விபத்துகளாக இருந்தது 1966ல் 64 விபத்துகளாக குறைந்து விட்டதே இவர்களின் தளரா முயற்சியின் வெற்றியாகும். 1966 ஜூன் மாத முதல் தேதியிலிருந்து 14ம் தேதி வரை தொழிலாளிகள் 24 லட்சம் மணிகள் யாதொரு விபத்துமில்லாமல் யந்திரங்களுடன் ஒன்றி பணியாற்றினர். இச்சாதனை நம் நாட்டின் கனரக தொழிற்சாலைகளின் சரித்திரத்தில் கண்டிராத மகத்தான ஒன்றாகும்.

ஜம்ஷெட்பூரில் பாதுகாப்பு என்பது தொழிலாளிகளின் பணியின் பகுதியாக அமைந்துவிட்டது. அதனால்தான் தொழில் துறை வாழ்விற்காக இல்லாமல் அவர்கள் வாழ்வின் ஒரு பகுதியாகவே வளர்ந்து வருகிறது.

டாடா ஸ்டீல்

The Tata Iron and Steel Company Limited

TN 3617A

இருக்கிறது. உன்னுடைய குலத்தின் பழியைக் கழுவிக் களையக்கூடிய உதிரம் அது. அந்த வீர வாளை உன்னுடைய காலடியிலே வைத்து வணங்குவதற்காக இதோ வந்து நிற்கிறான் அழலாடி! அவனை வாழ்த்தி உன்னுடைய அமைதியிலே எங்கள் குலங்கள் எல்லாம் தழைப்பதற்குத் திருவருள் செய்யப்பனே, நடு கல் வீரனே!''

சூலபாணிக் கிழவருடைய உடம்பிலே இதுவரை இருந்த நிதானம் குறைந்து ஒரு துளக்கம் உண்டாயிற்று. அவரை இரண்டு கைகளினாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டான் வேலவன் கோதை.

நடு கல்லுக்குரிய வழிபாட்டை முடித்துக் கொண்டு, அந்த நடு கல்லின் முன்னிலையிலே வீர வாளை உறையிலிருந்து உருவி வைத்தான் அழலாடி! ''நாவலோ நாவல்!'' என்று நாவலித்தார் சூலபாணிக்கிழவர். கையும் காலும் பதறி உடம்பெல்லாம் நடுங்கிற்று அவருக்கு!

பூக்குடலையிலிருந்து இரண்டு கை நிறைய மலர்களை எடுத்தார் கிழவர். ஆடுகின்ற உடம்போடு நடு கல்லுக்கு அருகிலே சென்றார். அப்படியே மலர்களை அந்த நடுகல்லிலே சொரிந்து விம்மி விம்மி அழுதார் கிழவர். மகளைப் பிரிந்த துயரமா அது! அல்லது தன் மகளுக்குக் கொடுத்த உறுதி மொழியை அழலாடி நிறைவேற்றி முடித்துவிட்டான் என்ற உவகையா அது! அல்லது இரண்டுமே சேர்ந்து கலந்த ஓர் உணர்ச்சிப் பெருக்குத்தானா?

''வேலவா, அழலாடி! நீங்கள் இருவரும் இப்படி என் அருகிலே வாருங்கள்!''

இவ்வாறு சொல்வதற்குள் கிழவருக்கு உடம்பு தள்ளாடியது.

''தம்பி, என்னால் நிலத்திலே கால்களைப் பாவி நிற்க முடியவில்லை. நீங்கள் இருவரும் என்னைச் சற்றுத் தாங்கிப் பிடித்துக் கொள்கிறீர்களா?''

வேலவனும் அழலாடியும் கிழவருக்கு இருபுறமும் நின்று தள்ளாடிய உடம்பைத் தாங்கிப் பிடித்தார்கள்.

''பொன்மணி போய் விட்டாள்! ஆனால் எங்கே போய் விட்டாள் அவள். எங்கும் போய்விட வில்லை. தீயிலே எரிந்து சாம்பலானது அவளுடைய உடம்புதானே! உள்ளமுமா சேர்ந்து எரிந்து விடும் அந்த நெருப்பிலே! இல்லை அழலாடி, என் செல்வமே, இங்கே பார், என் முகத்திலே வருத்தமே கிடையாது. ஒரே மகிழ்ச்சி, ஒரே உவகை, எல்லையில்லாத களிப்பு என் உள்ளத்தில் பொங்கி முகம் எல்லாம் பொங்கி வழிகிறது. பார்த்தாயா! அழலாடி, நீ வீரன்! நீ வீர மகன்! சொன்னதைச் சொன்னபடி நிறைவேற்றி முடித்த கட்டிளங்காளை நீ! உனக்கு என் வாழ்த்து. உனக்கு இந்த நடுகல்வீரனின் வாழ்த்து! அதோடு, அதோடு, இன்னொன்று உனக்குச் சொல்ல வேண்டும். இந்த நடுகல் வீரனின் முன்னிலையிலே அதையும் சொல்லிவிட வேண்டும். தம்பி வேலவா, நீயும் நன்றாக உற்றுக் கேள். சொல்கிறேன்!''

பதறிய உடம்பிலே மீண்டும் உறுதி பாய்ந்தது. கிழவர் கால்களை நன்றாக நிலத்திலே ஊன்றி நின்று கொண்டார். பேசத் தொடங்கினார்:

''தம்பி அழலாடி, பொன்மணி நெருப்பிலே போய் விட்டாளே என்று இனி அவளுக்காகக் கலங்காதே! தனது வாழ்வைவிட அவள் முதன்மையாக மதித்துப் போற்றிய கடமை ஒன்று இருந்தது. அதை நீ நிறைவேற்றி முடித்து விட்டாய். மற்றப்படி அவளுக்கும் எனக்கும் 'நீ செய்யக் கூடிய கைம்மாறு வேறு என்ன உண்டு இந்த உலகிலே? ஒன்றும் இல்லை! இனி நமது வீர மரபு தழைக்க வேண்டும். கோசர் குலப் பழியைத் துடைத்து முடித்த உன்னுடைய வீர மரபிலே உன்னைப் போன்று நூறுநூறு வீரர்கள் இனி வருங் காலத்திலே தோன்றி எழ வேண்டும். மாண்டு ஒழிந்த அந்த நன்னன் மரபிலே இனி நமக்கு எத்தகைய பகையும் இல்லை. அவனுடைய உயிரைக் காவு வாங்கினோம் என்பதே நடுகல் வீரனுக்கு அமைதி தந்த ஒரே செயல். அந்த ஒரு செயலிலே எல்லாப் பகைமையும் தீர்ந்தது. நச்சுப் பாம்பிலே நாகமணி பிறப்பது போல, நன்னனுக்கு இரண்டு நல்ல பிள்ளைகள் — இளநன்னன், இளநன்னி! இந்தச் சிறைக்கூடத்துக்கு வரும் வரை நன்னர் குலத்திலே இப்படிப்பட்ட உத்தமப் பிள்ளைகள் தோன்றியுள்ளதை அறியாமல் இருந்தேன். ஆதனுடைய மாணவர்கள் சிலர் சிறைக்கூடத்திலே எனக்கு உற்ற துணைவர்களாக அமைந்து, பல செய்திகளை எனக்கு உணர்த்தினார்கள். அது காரணமாக, உங்கள். இருவருக்கும் நான் சொல்லக்கூடிய ஒரு கடமையுரை உண்டு. இளநன்னனைச் சேரமன்னர்கள் மன்னித்து ஆட்கொள்வதோடு, தந்தையின் கொடுமைகளைக் கண்டு மனம் கசந்து போயுள்ள அந்த உத்தமப் பிள்ளைக்கு மறு வாழ்வு கொடுப்பதிலே நீங்கள் இருவரும் முக்கியமான பொறுப்பு மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். நன்னர்களை

வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் இருவரும் அறவே கைவிட்டு, இளநன்னனுடைய மறு வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். அதோடு வேலவன் கோதை வெள்ளைத் தீவுக்குரிய அரசப் பொறுப்பை மேற்கொண்டு செல்லும்போது, அழகாடியை இளநன்னனுக்குரிய தானைத் தலைவனாகவும் உற்ற வேளையில் உதவும் ஒரு நண்பனாகவும் நன்னன் நாட்டிலே அமர்த்தி வைத்து, நன்னன் குலத்துக்கு மறு மலர்ச்சி வழங்க வேண்டும் என்பது என் விருப்பம். நன்னன் மடிகிறவரை என் உள்ளத்தில் வெறுப்பும் கசப்பும் பகைமையும் குமுறிக் கொண்டிருந்தன அல்லவா! இரத்தம் தோய்ந்த இந்த வீர வாளை நடு கல்லிலே வைத்து வணங்கிய பிறகு, என் உள்ளத்தில் ஏற்படுகிற உணர்ச்சிகள் முற்றிலும் வேறு வகையாக இருக்கின்றன. பகைமை அன்பாக மாறுகிறது. வெறுப்பு இரக்கமாகப் பெருகுகிறது. நன்னனிடம் இருந்த சினம் எல்லாம் இப்போது இளவரசனிடம் வாஞ்சையாகப் பொங்குகிறது. என்னுடைய இந்த ஆசையை நீங்கள் நிறைவேற்றுவதோடு, இளநன்னி, இளநன்னி, ஆம் அந்த இளநன்னி, அவள் என்னுடைய, என்னுடைய —''

சூலபாணிக் கிழவருக்கு உடம்பு 'படபட' வென்று ஆடியது. வேலவனும், அழகாடியும் ஆடுகிற அந்த முதிய உடலை அணைத்துப் பிடித்தார்கள். சூலபாணிக் கிழவரின் கண்கள் மயங்கி வந்தன. உடம்பிலே நீலம் பாய்ந்தது.

''தம்பி, தம்பி அழகாடி, பொன்மணி போய் விட்டாள். அவளுக்குப் பிறகு எனக்கு மகள் இல்லையே என்ற குறைக்கு இனி ஒரு மகளும் கிடைத்து விட்டாள். பழி தீர்த்த குழந்தை இனியும் வஞ்சம் தீர்க்காதீர்கள்! அது தவறு. நமது பகைமை நன்னனுடைய மரணத்தோடு அதுவும் மடிந்தது. அந்தக் குலம் இனி நம்மோடு இணைந்து விட்டது. இனி இனி இளநன்னி —''

சொற்களை முடிப்பதற்கு முன்னால் கிழவருடைய குரல் அடைத்தது. உயிரற்ற உடலாக அழகாடியின் மீது சரிந்தார் சூலபாணிக் கிழவர். **(தொடரும்)**

படித்துப் பாருங்கள்

அருணோதயம்

பம்பாய்த் தமிழ்ச் சங்கம் சமீபத்தில் வெள்ளிவிழா கொண்டாடிய போது, இலக்கிய வானில் மலர்ந்ததுதான் இந்த 'அருணோதயம்' நாடக நூல். இதை எழுதிய குமாரி ஆர். சூடாமணி அவர்களுக்கு முதற் பரிசுத் தொகையாக ரூபாய் ஆயிரம் அளிக்கப்பட்டது.

பம்பாய் ஷண்முகானந்தக் கலையரங்கில் தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த கலையன்பர்கள் இந்நாடகத்தை அரங்கேற்றம் செய்தார்கள். நடிப்பதற்காகவே எழுதப்படும் கதைகள், சில சமயங்களில் படிப்பதற்கு ஏற்றவாறு ஓட்டம் பெறாமல், திக்கு முக்காட நேர்வதுண்டு. அந்த ரகத்தைச் சேர்ந்ததல்ல அருணோதயம். நாடகம் பார்க்கும் வாய்ப்புப் பெறாதவர்கள் படிப்பதற்கும் ஏற்ற வகையில், ஆரம்பம் முதல் கடைசி வரையில் புதிர்கள் பல நிறைந்து ஒரு மர்மக் கதையாக அமைந்திருக்கிறது படைப்பு. கதை ஓட்டத்துக்குச் சாலை அமைத்துக் தரும் இரு பாத்திரங்களாக விளங்குகிறார்கள் கல்யாணியும், சுவாமி சாரதா சரணரும்.


நாற்பது வயது தாண்டிவிட்ட சீமாட்டி தான் என்றாலும், கல்யாணியின் மண வாழ்க்கையில் வீசிய புயல்கள் அவளை ஒரு வாழாவெட்டியாக்கி விடுகின்றன. மனத்தில் ஆசை கொண்ட நடராஜை அவள் மணக்க வொட்டாமல், அவளுடைய தந்தை, பணம் காசுகளுக்கு ஆசைப்பட்டுச் சோமசுந்தரம் என்பவனுக்கு அவளை மணம் முடித்து வைத்து விட்டுக் கண்ணை மூடிவிடுகிறார். சிறு வயதிலேயே தாயை இழந்த கல்யாணிக்குத் தாயாகவும் விளங்கி நல்வாழ்வுக்கு அடியெடுத்துக் கொடுக்க வேண்டிய தந்தை செய்த தவறு, பல பின் விளைவுகளுக்குக் காரணமாகிறது. சோமசுந்தரம் கல்யாணியைப் புறக்கணித்து விட்டு அஞ்சலை என்ற பெண்ணை மணம் புரிந்துகொண்டு விடுகிறான்.

கல்யாணி தனது ஏமாற்றங்களுக்கெல்லாம் யார் மீதாவது கொடுமைகள் புரிந்து பழி தீர்த்துக் கொள்ள நினைக்கிறாள். கொடூரமாகப் பலரிடம் நடந்து கொள்கிறாள். இறுதியில் அவள் தற்கொலை செய்து கொண்டு சாகும் போதுகூட அந்தப் பழி வாங்கும் உணர்ச்சி மறையவில்லை அவளிடம். கொலை நடந்ததாகச் சந்தேகம் ஏற்பட்டுப் பிறகு சரியாகிறது. கல்யாணியைக் கைப்பிடிக்க முடியாது போனதும் சுவாமி சாரதா சரணராக மாறிய நடராஜ் மட்டும் நிகழ்ச்சிகளை எண்ணி அவளுக்காக இரங்குகிறார்.

''நாடகக் கலையுடன் நாற்பதாண்டுகள் தொடர்புடையவன். பல நாடக ஆசிரியர்களுடன் கூட்டுப் பணி ஆற்றியிருக்கிறேன். ஆனால் ஒரு நாடகத்துக்கு முகவுரை எழுதுவது இதுதான் முதல் தடவை'' என்று கூறும் நாடகக் கலைஞர் திரு எஸ். வி. சஹஸ்ரநாமம் தமது முகவுரையில் அருணோதயத்தை எடை போட்டு ஆராய்ந்து பார்த்துப் பாராட்டுரைகள் வழங்கியிருப்பது மிகப் பொருத்தமானதும்.

கிடைக்கும் இடம்: பாரி நிலையம், 59, பிராட்வே சென்னை — 1; விலை: ரூ. 3.


J.B. MANGHARAM'S
Salto
J.B. MANGHARAM & CO.,



மாதத்திற்கு மாதம் உங்கள் கனவு நனவாகும் நாள் நெருங்குகிறது...பாங்க் ஆப் பரோடா ரெகரிங் டெபாசிட் கணக்கு உதவியால்!

ஒரு ரெப்ரிஜரேட்டர், ரேடியோ, அல்லது ஒரு தையல் மெஷினை நீங்கள் வாங்க விரும்பி, ஆனால் அது சாத்தியமில்லை என்று நினைத்தால் அது தவறு. ஒரு பாங்க் ஆப் பரோடா ரெகரிங் டெபாசிட் கணக்கு உங்களுடைய இக்கனவுகளை நனவாக்க முடியும். 2 முதல் 9 வருடங்கள் வரை, மாதம் ரூ. 5 விதம் சிறு தொகைகளாகவேகூட நீங்கள் சேமிக்க இது உதவுகிறது. உங்களுக்குகந்த ஒரு திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள். பிறகு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுடைய மாதத் தவணைகளைச் செலுத்துவதோடு சரி. மற்றவற்றை எங்களிடம் விட்டுவிடுங்கள். நாங்கள் கணிசமான வட்டி தருகிறோம்: ஆண்டுக்கு 5½ முதல் 7 சதவிகிதம் வரை. நீங்கள் பெற விரும்பிய ரெப்ரிஜரேட்டர், ரேடியோ அல்லது தையல் மெஷினை வாங்கப் போதுமான பணம் உங்களை அறியாமலேயே சேர்ந்துவிடும்.

பாங்க் ஆப் பரோடாவில் ஒரு ரெகரிங் டெபாசிட் கணக்கை ஆரம்பித்தால் ரூ. 5 அல்லது அதன் பெருக்கங்களில் முறையான தவணைகளாகச் செலுத்தி நீங்கள் சேமிக்க முடியும்; செலுத்தப்பட்ட மொத்தத் தொகையும் வட்டியும் சேர்ந்து ரூ. 50,000-க்கு மேற்படலாகாது.

தி பாங்க் ஆப் பரோடா லிட்.

(ஸ்தாபிதம்: 1908) பதிவுபெற்ற அலுவலகம்: மாண்ட்வி, பரோடா.

இந்தியாவில் 260க்கு மேற்பட்ட கிளைகளை உடையது. தவிர, லண்டன், கிழக்கு ஆப்ரிக்கா, கிழக்கு பாகிஸ்தான், பிஜித் தீவுகள், மரிஷஸ், குயானா ஆகிய இடங்களிலும் கிளைகள்.

எங்கள் திட்டத்தின் அம்சங்களை விவரிக்கும் "May we help you?" என்ற ஆங்கில துண்டுப் பிரசுரத்தை இலவசமாகப் பெற எங்களுக்கு எழுதுங்கள்.

CMBB-24R-TAM

அவனுக்கு வேண்டியது

ஜி. பாலசுப்பிரமணியம்



பிரபல வழக்கறிஞர் ஒருவருக்குக் குமாஸ்தா தேவைப்பட்டதால் உள்ளூர்ப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார். வேலைக்கு மனுச் செய்த பல இளைஞர்கள் அவரைப் பேட்டி காண வந்தார்கள். யாரை, எப்படித் தேர்ந்தெடுப்பது என்று யோசனை செய்த வழக்கறிஞர் ஹாலில் அவர்களை வரிசையாக உட்காரச் சொன்னார். அவர்களுக்கு மத்தியில் தாமும் ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''இப்போது நான் ஒரு சிறுகதை சொல்லப் போகிறேன். நடுநடுவில் உங்கள் மனத்தில் பட்டதைக் கேட்கலாம். பிறகு யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று முடிவெடுக்கிறேன்'' என்றார் வழக்கறிஞர். கதையை ஆரம்பித்தார்.

''விவசாயி ஒருவன் விதை நெல்லையும், அறுவடையான தானியங்களையும் மூட்டை மூட்டையாய் அடுக்கி வைத்திருந்தான். மூட்டைகளுக்கிடையே பெரிய எலி ஒன்று புகுந்து நாசம் செய்ய ஆரம்பிக்கவே எப்படியும் அதைக் கொன்றுவிடுவது என்று தீர்மானம் செய்தான் விவசாயி.

''ஒரு துவாரத்திலிருந்து எலி திடீரென்று பாய்ந்து ஓடிவந்தது. துப்பாக்கியால் குறி பார்த்து எலியைச் சுட்டான் விவசாயி. அவ்வளவுதான்; மூட்டைகளில் தீப்பிடிக்க ஆரம்பித்தது.''

''ஆமாம், துப்பாக்கியால் சுட்டால் மூட்டைகளில் எப்படித் தீப்பிடிக்கும்?'' என்று கேட்டான் ஓர் இளைஞன்.

அவனுடைய கேள்விக்கு நேரிடையாய்ப் பதில் கொடுக்காமல் மேலும் கதையைத் தொடர்ந்தார் வழக்கறிஞர். ''மூட்டைகளெல்லாம் தீப்பிடிக்கவே ஓடிப் போய்ப் பக்கெட்டில் தண்ணீரை எடுத்து வந்து மூட்டைகளின் மீது கொட்டினார் விவசாயி.''

''ஒரு பக்கெட் தண்ணீரால் ஒருவர் நெருப்பை அணைக்க முடியாதே!'' என்று சொன்னான் ஓர் இளைஞன்.

''நெருப்பை அவரால் மட்டும் அணைக்க முடியவில்லை. சத்தம் போட்டார். வேலைக்காரி இன்னொரு பக்கெட் தண்ணீருடன் ஓடோடி வந்தாள்.''

''அதற்குள் நெருப்புப் பரவ ஆரம்பித்திருக்குமே?'' என்றான் இளைஞன்.

''சத்தம் போட்டால் வேலைக்காரி மட்டும்தானா வருவாள்?'' இன்னொரு இளைஞனின் கேள்வி இது.

''வேலைக்காரிக்குப் பின்னால் அவருடைய மனைவி, குடும்பத்தினர், அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்தனர்.''

''எவ்வளவு பேர்கள் தீயை அணைக்கப் பக்கெட் கொண்டு வந்தார்கள்?''

''பக்கெட் எவ்வளவு இருந்தாலும் ஒரு சமயத்தில் கிணற்றிலிருந்து ஒரு பக்கெட் நீர்தானே எடுக்க முடியும்?''

''மூட்டைகளைத் தள்ளித் தள்ளித் தனியாகப் பிரிக்கலாமே?''

''கடைசியில் அவர்களால் நெருப்பை அணைக்க முடிந்ததோ?'', ''விதை நெல் மூட்டைகள் என்ன ஆயின?'' ஒவ்வொருவரும் நெருப்பு பரவும் வேகத்தை விட அதிகமாகக் கேள்விகளைப் பொழிந்து கொட்டினார்கள்.

இதற்கு மேல் வழக்கறிஞர் சிரிப்பை அடக்க முடியாமல் வாய்விட்டே சிரித்து விட்டார். வந்த இளைஞர்களுக்கு என்னவோபோல் இருந்தது.


''நீங்களெல்லாம் கதையை ஆர்வத்துடன் கேட்டீர்களென்பதில் சந்தேகமேயில்லை'' என்று சுற்றிலும் பார்த்துக் கொண்டே சொன்னார் வழக்கறிஞர். கடைசியில் உட்கார்ந்திருந்த ஓர் இளைஞன் மட்டும் எதுவுமே கேட்காமல் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

''நீ ஏன் இதுவரை வாய் திறந்து ஒன்றுமே கேட்கவில்லை?''

''ஐயா, கடைசியில் எலியின் கதி என்ன? விவசாயி அதைக் கொல்ல முடிந்ததா, இல்லை தப்பி ஓடிவிட்டதா? நீங்கள் கதையை முடிக்காததால் அதைப் பற்றிச் சொல்வீர்கள் என்று நினைத்து இதுவரை ஒன்றும் கேட்கவில்லை!'' என்றான் இளைஞன்.

''அதுதானே பார்த்தேன். எலி எப்படியோ போகட்டும். எனக்குத் தேவையான ஆளாக நீ கிடைத்து விட்டாய். மூட்டைகள் தீப்பிடித்து, பக்கெட்டில் வேலைக்காரியும் மற்றவர்களும் தண்ணீர் கொண்டு வந்து, அக்கம் பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஓடோடி வந்து ஏற்பட்ட ஏகப்பட்ட குழப்பத்திலும் நீ ஒருவன் தான் எலியை மறக்கவில்லை. காரியத்தில் கண்ணாயிருக்கும் உன்னை நானே முதல் வேலையில் அமர்த்தியிருக்கிறேன்'' என்றார் வழக்கறிஞர்!

ஆதாரம்: ''பேசிட் இன் கோர்ட்''



கோடீஸ்வரருடன் பேட்டி!

அந்த நகரத்தில் உள்ள கோடீசுவரர் ஒருவரைப் பேட்டி கண்டு அவர் எவ்வாறு பணக்காரர் ஆனார் என்பதைப் பற்றி ரசமான தகவல்களைச் சேர்க்கப் பிரபல பத்திரிகைக்காரர் ஒருவர் கோடீசுவரர் மாளிகைக்கு வந்தார்.

'அதுவா? அது பெரிய கதை ஆயிற்றே. நான் அதை உங்களுக்கு விவரமாகச் சொல்கிறேன். அது வரையில் இந்த மின்விளக்கு வீணாக எரிவானேன்?' என்று கூறி விளக்கை அணைத்து விட்டார் கோடீசுவரர்.

''உங்கள் கதை எனக்கு அவசியமே இல்லை. நான் வந்த காரியம் முடிந்து விட்டது. நான் வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே பத்திரிகைக்காரர் புறப்பட்டார்.

தகவல்: 'ரமணன்'

"வாலிபனாக இருந்தபோது நான் செய்கிற பத்து வேலைகளில் ஒன்பது தோல்வி அடைவதை உணர்ந்தேன். எனக்கு தோல்வி பிடிப்பதில்லை. அதனால் பிறகு முன்னை விட பத்து மடங்கு அதிகமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டேன்."

► பெர்னாட்ஷா.

அதிர்ஷ்டதேவதை அழைக்கிறது!

"நான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவன். நான் எவ்வளவு அதிகமாகக் கஷ்டப் பட்டு உழைக்கிறேனோ அவ்வளவு அதிகமாக அதிர்ஷ்டமும் என்னை வந்து சேருவதாகக் கண்டு பிடித்திருக்கிறேன்."

► ஸ்டீபன் லீகாக்.

திரட்டியவர்: 'லலிதா மணாளன்'

பல்சுவைப்பக்கம்



ரவிகுமாரி அடிக்கடி உபயோகிக்கும் பழமொழி ''உழக்கில் கிழக்கு மேற்கு பார்ப்பார்களா'' என்பது.

ஆனால் கோவை ஜில்லா தாராபுரம் தாலுகா வாசிகள் இப்பழமொழிக்கு விதிவிலக்கு.

இங்கே எல்லாமே திசையை மையமாய் வைத்துத்தான் விசையை முடுக்கி விடுகிறார்கள். வீட்டுக்குள்ளேயே ''வடக்காலே போய் மேற்கே திரும்பினா சமையல்கட்டு'' என்கிறார்கள்.

எல்லாவற்றையும் தூக்கியடிப்பது முனிசிபாலிடி மானேஜர் பரசுராமன் சொன்னது. அது, வெற்றிலையில் மூலிகை வைத்து நோயாளியிடம் வைத்தியன் கொடுத்த திரவம்தான்.

''கிழக்கு பேக்கா மென்னு வடவாலிலா துப்பிடு பத்து நிமிஷம் பொறுவு.'' - கப்புடு


கிழக்கு மேற்கு...

சிரிக்கும் விமானிகள்!

வான் படையில் பல ஆண்டுகளாக வழக்கத்திலிருந்து வரும் துணுக்குகளும், உண்மை நிகழ்ச்சிகளும் :

அடுத்த முறை!

ஒரு பாசறையின் தலைமை அதிகாரி விபத்தில் இறந்து போனார். இராணுவ மரியாதைகளுடன் மிகச் சிறப்பான முறையில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. இறுதி யாத்திரை அணிவகுப்பில் ஒருசில தவறுகளைக் கவனித்த புதிய தலைமை அதிகாரி, ஸ்டேஷன் வாரண்ட்



அதிகாரியைக்கூப்பிட்டு, "இறுதி அணிவகுப்பு இப்படித்தானா நடைபெறுவது? ஒழுங்குப்படி சரியாக நடைபெறவில்லையே?" என்று கடிந்துகொண்டார்.

"மன்னிக்கவும். அடுத்த முறை இப்படித் தவறு நடைபெறாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்றார்.



முட்டையின் அம்மா!

இந்தி மொழி தெரியாத ஒரு தெலுங்கர்.

ஆக்ரா கடைத் தெருவில், முட்டைக் கடையில் ஒரு கோழி முட்டையை வைத்துக் கொண்டு எதையோ எடுத்துரைக்க இயலாமல் நிற்கிறார்.

"அண்டாகா மா ஹை? (முட்டையின் அம்மா இருக்கிறதா?)"

கடைக்காரன் விழிக்கிறான்.

"க்யா சாப், அண்டாகா மா?"

"ஏக் 'முர்கி' தேதோ!" என்றேன். அவருக்கு வேண்டியிருந்தது ஒரு பெட்டைக் கோழி!

சொன்னபடி நடந்தால்!

வான் படையில் புதிதாகச் சேர்ந்த ஒரு புதியவர், ஆங்கில நடன அரங்குக்கு அறிமுகமானவர்களுடன் போக விரும்பினார். "நவநாகரிக நங்கையருடன் கைகோர்த்து நடனமாடுகையில் 'உம்மணாமூஞ்சி' மாதிரி இருக்கக்கூடாது. சிரித்துப் பேசிப் பழக வேண்டும். குடும்ப விவகாரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று பழகியவர்கள் சொன்னார்கள்.

அந்தப் புதிய நபர் நடன அரங்கிற்குச் சென்ற முதல் நாள், மேற்கத்திய இசைக்கேற்ப இடுப்பசைக்கும் அழகிய ஒரு பாவையுடன் ஆடும்போது: "கண்ணே! உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா?" என்றார். அவள், "இல்லை!" என்றாள். தொடர்ந்து "உனக்கு எத்தனை குழந்தைகள்?" என்ற இவரது கேள்விக்குப் பின் அங்கிருந்து வெளியேற நேர்ந்தது. நண்பர்களின் ஆலோசனைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்ட பின் மறுநாள் நடனத்துக்குச் சென்றார்.

இன்று வேறொரு பெண்ணுடன் நடனம்.

"பூவையே! உனக்கு எத்தனை குழந்தை?"

"மூன்று!"

"உனக்குத் திருமணமாகிவிட்டதா?"

பிறகு அவர் நடன அரங்குப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை.



ஏன் முடியாது?

"நம்மைப்போல் அவன் பழைய காலுறை போடமாட்டான். எப்போதும் புதிய 'சாக்ஸ்' தான்!"


"அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது? ஒரு சாக்ஸ் வாங்கினால், ஒரு மாதமானாலும் சலவை செய்யாமல், அதையே உபயோகித்துக் கிழிந்த பின் விட்டெறிவான்!"

- கலாபன்வாலா




WATER SUPPLY
in rural or urban areas
is not a problem
when you install
MYERS Deepwell Ejecto Pump



For continuous supply of cool, fresh water under pressure Myers EJECTO Pump has no equal.

Consider these advantages :–

1. It supplies water directly from source to any desired point or points.
2. It can be installed at ground level.
3. It needs no overhead tank.
4. Its capacity of 300 to 5000 g.p.h. is suitable for most needs.
5. It works silently, efficiently, economically.
6. It is ideal for small industries, hotels, flats, etc.



4 good reasons why you should buy this pump:–

1. *Compact and simple.* Parts easily accessible for maintenance.
2. *Robust construction.* Pumps and parts guaranteed against faulty workmanship.
3. *Motor above ground level.* No danger of catching damp and burning out.
4. *Elimination of noise.* Noise-free operation is a great asset where large quantities of water have to be pumped daily.

There are other

Myers or **Wasp**

Power Pumps & Hand Pumps, too.

WATER SUPPLY SPECIALISTS PVT. LTD.

Kal- M. 330, Thambuchetty Street, Madras 1.

WS-98A



சடுகுடு-பெண்கள் விளையாட்டா?

மே மாதம் 5-ம் தேதி முதல் 27-ம் தேதி வரை, அகில இந்தியக் கபடிப் போட்டிப் பந்தயம் மிகச் சிறப்பாக மன்னார்குடியில் நடைபெற்றது. மன்னார்குடி விக்டோரியா கிளப்பின் ஆதரவுடன் நிகழ்ந்த இப் போட்டியில் பாரதத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த ஏறக்குறைய அறுபத்தி ஐந்து அணிகள் – பெண்கள் அணி உட்பட—பங்கு கொண்டன. பதினேழு நாட்கள் தொடர்ந்தாற்போல் இரவு எட்டிலிருந்து நள்ளிரவையும் கடந்து மின்னொளி வெள்ளத்தில் ஆட்டங்கள் ஆடப்பட்டன. பந்தயத்தோடு தொடர்பு கொண்ட சிலருடைய பேட்டிகள் இதோ:

□ **குமாரி விவியன் செல்வராஜ்** (தலைவி, பெங்களூர் ப்ளு ஹாக்ஸ் அணி.):

கபடி நம்முடைய தேசிய விளையாட்டு. அதிகச் செலவில்லாமல் ஆடக் கூடியது. ஆனால் மற்ற விளையாட்டுக்களைப் போலவே உடல் வலிமையைக் கொடுக்கக் கூடியது. அத்துடன் புத்தி சாதுரியத்துக்கும் நிறைய இடமுண்டு இதில்.

நான் இந்த வருஷம் பி. யு. ஸி. தேர்வு எழுதியிருக்கிறேன். என் அணியில் உள்ள எல்லோருமே கல்லூரி மாணவிகள். என்னையும் சேர்த்து மூன்று பேர்கள் பல விளையாட்டுக்களில் தேர்ச்சி உள்ளவர்கள். ஹாக்கி, கூடைப் பந்து, கோகோ முதலியன விளையாடுவோம்.

சென்ற ஆண்டு இறுதியில் தேசிய சாம்பியன் கோப்பைக்கான போட்டியில் மைசூர் ராஜ்யப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டேன். அந்தப் போட்டி பரோடாவில் நடந்தது.

என்றாலும்' இந்த மன்னார்குடியில் குழுமும் பார்வையாளர் கூட்டத்தைப் போல் வேறெங்கும் நாங்கள் கண்டதில்லை. பந்தய அமைப்பாளர்களின் உபசாரத்தையும் கவனத்தையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இந்தக் காலத்தில் எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு போட்டி போடுகிறார்கள் பெண்கள். போட்டிப் பந்தயங்களில் மட்டும் நாங்கள் சளைத்தவர்களா என்ன? மேலும் கபடி விளையாட்டு ஆண்களுக்கு மட்டும் உரியது என்று சொல்வதற்கில்லை. நாங்கள் விளையாடும்போது பாருங்களேன், கபடியில் எங்களுக்குத் திறமை இருக்கிறதா இல்லையா என்பதை!



□ **நீலாம்பிகை** (தலைவி, சேலம்-வேலூர் அணி):

சேலத்துக்குப் பக்கத்தில் மோகனூரில் செகண்டரி கிரேடு ஆசிரியையாக இருக்கிறேன். என் அணியில் உள்ள ஏழு பேர்களில் மூவர் ஆசிரியப் பணி ஆற்றுபவர்கள். மற்ற நால்வரும் மாணவிகள்.

கபடி ஆட்டத்தை நான் மிகவும் விரும்புகிறேன். எனக்கு அது ரொம்பவும் பிடித்திருக்கிறது. இந்த விளையாட்டில் எனக்குப் பயிற்சி தந்தவர் என் வீட்டுக்காரர்தான். அவர் பெயர் ராஜமாணிக்கம். அப் பெயரை விடக் காட்டு ராஜா என்று சொன்னால் எங்கள் பக்கத்தில் நன்றாகத் தெரியும். அவர் ஒரு விவசாயி. நல்ல ஆட்டக்காரர்.

ஆண்களைப் போல் நீண்ட நேரம் எங்களால் மூச்சுப் பிடிக்க முடிவதில்லைதான். ஆனால் பந்தயம் என்று வரும்போது பெண் அணிக்கும் இன்னொரு பெண் அணிக்கும் இடையேதானே போட்டி ஏற்படுகிறது? அதனால் இந்தக் குறை போட்டியின் வெற்றி தோல்வியை அதிகமாய்ப் பாதிப்பதில்லை.

எனக்கு ஒரு மகன் இருக்கிறான். ஐந்து வயதாகிறது. குடும்ப வாழ்க்கை என் விளையாட்டு வாழ்க்கையைப் பாதிக்கவில்லை.

□ **குமாரி ஷோபா கலோடே, பி.ஏ.** (தலைவி, சுபாஷ் மண்டல் அணி, நாகபுரி):

நான் அரசாங்கப் பணிமனை ஒன்றில் அலுவல் பார்க்கிறேன். நில அமைப்புப் பரிசோதனைத் துறையில் அலுவல். எங்கள் அணியில் உள்ள மற்றவர்களும் அலுவலில் இருப்பவர்கள்தான்.

கபடி விளையாட்டு எங்கள் அலுவலுக்குத் தொந்தரவாக இல்லை. மாலையில் அலுவல் முடிந்ததும் பயிற்சி செய்கிற வழக்கம். மேலும் இந்த விளையாட்டுக்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் எதுவும் தேவையில்லை. அது எப்படிப்பட்ட சௌகரியம்! போதுமான நபர்கள் கூடி விட்டால் நிமிஷத்தில் ஆட்டத்தைத் தொடங்கி விடலாம்.

□ **திரு நாஜுபால்** (தலைவர், சுபாஷ் மண்டல் ஆண்கள் பிரிவு, நாகபுரி):

தந்தி குமாஸ்தாவாக நான் வேலை செய்வதைப் போலவே, எங்கள் அணியில் உள்ள மற்றவர்களும் வேலையிலீடுபட்டிருப்பவர்கள்.

கபடி விளையாட்டுக்கு அதிகமான பண முதலீடு தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சம். விஸ்தாரமான மைதானமும் தேவையில்லை. சற்றேறக் குறைய ஒரே மாதிரியான முறையில், நம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் இந்த விளையாட்டு ஆடப்பட்டு வருகிறது. பெயரில் வேண்டுமானால் பேதம் இருக்கலாம். உதாரணமாக, மகாராஷ்டிரத்தில் இந்த விளையாட்டுக்கு 'ஹுதுது' என்று பெயர். சென்னையில் 'சடுகுடு' என்கிறார்கள். மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் 'கபடி' என்கிறார்கள்.

□ **குமாரி ஜ்யோத்ஸ்னா பராஞ்சபே**, (தலைவி, யுவக் மண்டல் அணி, நாகபுரி):

எங்கள் அணியில் எல்லோரும் கல்லூரி மாணவிகள். நான் எம். ஏ. படித்துக் கொண்டிருக்கிறேன். நாகபுரி, அரசாங்க விஞ்ஞானக் கல்லூரியின் உடற்பயிற்சித் துறை டைரக்டரான ஸ்ரீ ஜி. பி. அங்லிகர் அவர்களின் தூண்டுதலால்தான் நாங்கள் கபடி விளையாட்டில் ஈடுபட்டோம். எங்களுக்குப் பயிற்சி தந்தவரும் அவரே.

காலஞ்சென்ற பிரதமர் நேரு தொடங்கி வைத்த தேசிய சாம்பியன் கோப்பைக்கான போட்டிப் பந்தயத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். 1964ல் பம்பாயில் நடைபெற்ற விமரிசையான அந்தப் பந்தயங்களுக்குக் கூட இவ்வூரில் வருகிற மாதிரி மக்கள் திரளாக வந்ததில்லை.

கபடி ஆட்டம் பிரபலமடையாததற்குக் காரணம் இரண்டு. முதலாவது முரட்டுத்தனமான விளையாட்டு என்ற கருத்து; இரண்டாவது, படித்த ஜனங்கள் இதற்குரிய அந்தஸ்தைக் கொடுக்கத் தயங்குவது.

சமீப காலமாக அந்த நிலை மாறிக் கொண்டிருக்கிறது. எங்கள் பக்கத்தில் ஒவ்வொரு பெரிய மனிதரும், மந்திரிகளும் கூட கபடி ஆட்டத்துக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

'இந்திய கபடி பெடரேஷன்' அமைக்கப்பட்ட பிறகு அநேகமாக எல்லா ராஜ்யங்களிலும் இந்த விளையாட்டு பரவிக் கொண்டு வருகிறது. இதனால் மாநில மட்டத்தில் பந்தயங்கள் நடத்த முடிகிறது. ஆனால், இது அகில உலக விளையாட்டாக இல்லையே! அகில உலக அங்கீகாரம் பெறாததும் இந்த விளையாட்டு பின்தங்கியிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம்.

□ **ஸ்ரீ கே. வஸந்தா** (தலைவர், தாளிப்பறம்பு இளைஞர் விளையாட்டுச் சங்கம், காசர்கோடு, கேரளா):

பெயரைக் கண்டு, 'இது பெண்கள் அணியோ' என்று சந்தேகிக்க வேண்டாம். மலையாளத்தில், வஸந்தா என்பது ஆண்பால் பெயர். அதன் பெண்பால், வஸந்தி!

எங்கள் அணியில் சிலர் மாணவர்கள். சிலர் அலுவலில் அமர்ந்திருப்பவர்கள். 'கேரள மாநில கபடிச் சங்க சுழலும் கோப்பை'யை இவ்வாண்டில் எங்கள் அணி அடைந்தது. 1963ல் அலஹாபாத்தில், மாநிலங்களுக்கு இடையேயான கபடிப் பந்தயத்தில் நாங்கள் விளையாடினோம்.


கேரளத்திலும் இந்த விளையாட்டுக்குப் பெயர் 'சடுகுடு'தான்.

தமிழ் நாட்டைக் காட்டிலும் கேரளம் இந்த விளையாட்டில் பின்தங்கியே இருக்கிறது. கேரளம் முழுவதையும் எடுத்துக் கொண்டாலும் காசர்கோடு பகுதியில்தான் இது உச்ச நிலையில் இருக்கிறது. இந்த லட்சணத்தில் எங்களுக்குப் பயிற்சியாளரே கிடையாது. நாங்களே விளையாடி விளையாடித் திருந்திக் கொள்ளுகிறோம்.

தமிழ் நாட்டு அணி ஒவ்வொன்றிலும் முதல் தர ஆட்டக்காரர்கள் இரண்டு மூன்று பேராவது இருக்கிறார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து அணி அமைத்தால் அதை யாருமே வெல்ல முடியாது என்று தோன்றுகிறது!

இந்த ஊர் மக்கள் விளையாட்டைப் பார்த்து விட்டுக் காரசாரமாக விவாதிப்பதைக் கேட்கும்போது எனக்குப் பொறாமை ஏற்படுகிறது. அவ்வளவு ரசிகத் தன்மை அவர்களுக்கு! — டி. எஸ். ஜெ.

சக்திக்கும், வலிமைக்கும்!




கேட்பரிஸ்

போர்ன்விடா

ஊட்டப்பொருள்கள் அனைத்தும் ஒருங்கே தேவையா? ஒரு கப் போர்ன்விடா அருந்துங்கள். தசைகள் வளர புரதங்களும், சக்திக்கும் வலிமைக்கும் ஊட்டமான மாவுச்சத்தும், எலும்புகளை வலுவாக்க தாது உப்புக்களும், பூரண ஆரோக்கியத்திற்கு மிக்க அவசியமான வைட்டமின்களும் இதிலே உள்ளன. மிகச் சுவையாக தயாரிக்கலாம். காலையில் உற்சாகத்துடன் எழுந்திருக்க வேண்டுமா? இரவில் அமைதியாக உறங்க வேண்டுமா? போர்ன்விடா அருந்துங்கள்

Bensons /CP-576 TAM





திருமுருக கிருபானந்தவாரியார்

61. முடிமன்னரும் சடை முடியும்

இமயமா மலையில் தமது புலிக் கொடியை எழுதி, தண்ணிய வெண் கொற்றக் குடையின் கீழ் உலகத்தை யாளும் விரிந்த புகழும், பரிந்த உள்ள மும் படைத்த சோழ மன்னர்களுடைய வளநாட்டின் தலைநகரமாகத் திகழ்ந் தது திருச்சிராப்பள்ளிக்கு அருகே யுள்ள உறையூர். உறந்தை, கோழியூர் முதலிய பெயர்களை உடையது. சோழர்கள் தமக்கு உறை ஊராகக் கொண்டதால் உறையூர் எனப்பட்டது. ஆங்கு ஒரு சமயம் கோழி யானையைத் துரத்தி வென்றதனால் கோழியூர் எனப்படும்.

எல்லா வளங்களும் உறையும் உறையூரில் சதா மணிவிளக்குகள் பல எரிவதனால் இரவு இல்லையாயிற்று. செல்வ மிகுதியால் இரவும் (இரத்தல்) இல்லையாயிற்று. அழகிய பல ஆவண வீதிகள், மதம் பொழியும் யானைகள் பலவுடைய சாலைகள், கடல் போன்ற குதிரைகளையுடைய கூடங்கள், ஆழ்ந்த அகழிகள், உயர்ந்த மதில்கள், கோபு ரங்கள், மலர்ச் சோலைகள், மேகம் தவழ் கின்ற காவணங்கள், சந்திர சூரியர் தவழ்கின்ற உயர்ந்த கோபுரங்கள், தேர் உலாவும் நெடுந் தெருக்கள் முதலிய பல நலங்கள் அங்கு நிறைந்திருந்தன.

இல்லையில் எல்லையில்லாத திருப் பணிகள் செய்த அநபாய மன்னர் பெருமானுடைய திருக்குலத்தில் மூதா தையாகிய புகழ்ச் சோழ நாயனார்



அந்நகரில் அரியணை மீது வீற்றிருந்து அறநெறி வழுவாது அரசு புரிந்து வந்தார். மணிமுடி வேந்தர்கள் பணி புரிய வெற்றிமாலை புனைந்து நில மகளுக்குக் கணவராகப் பெரும் புகழுடன் அவர் வாழ்ந்தார்.

புகழ்ச் சோழ நாயனார் பிறை முடித்த பெருமானுடைய திருக் கோயில்கள் முழுவதும் நித்திய நைமித்திக பூசனைகள் சிறப்பாக நிகழும்படி செய்தார். சிவாலயங்களைப் புதுப்பித்தும் அடியார்களைக் கொண்டு திருத்தொண்டுகள் செய்வித்தும் இன்புற்று வந்தார்.

அடியார்கள் வேண்டுவ அனைத்தும் வழங்கித் திருநீற்றின் திறத்தைப் போற்றி வந்தார். உலகெங்கும் மேன்மைகொள் சைவ நீதியைப் பரப்பினார்.

புகழ்ச் சோழ நாயனார் மேல் திசையில் கொங்க நாட்டு வேந்தர்களும், ஏனோரும் தரும் கப்பங்களைக் காண வேண்டும் என்று விரும்பினார். ஆதலால், தங்களுக்கு உரிமை வாய்ந்த தலைநகரங்களில் ஒன்றாகிய கருவூரைத் தம் சுற்றத்துடன் அடைந்தார். இந்திரன் அமராவதி அடைவது போல் அந்நகருள் நுழைந்து ஆனிலை என்ற திருக்கோயிலுக்குள் சென்று பசுபதீச்சுரரைப் பலகாலும் பணிந்து பரவசமடைந்தார். பின்னர் தமது கருவூர் அரண்மனையை அடைந்து, அம்மாளிகைக்கு முன் அமைந்துள்ள அத்தாணி மண்டபத்துள் அரியணை மீது வீற்றிருந்தார். மேற்றிசை நாட்டு வேந்தர்கள் கொண்டுவந்த யானைகள், குதிரைகள், பொன்மணிகள் முதலிய திறைப் பொருள்களை யெல்லாம் கண்டார். திறை கொண்டுவந்த மன்னர்களுக்கு அவரவர்கள் நிலைமைக்குத் தக்க செயல் உரிமைகளைத் தந்து உபசரித்தார்.

''நமது அரசாட்சிக்கு அடங்காது மாறுபட்ட அரசர்கள் இருப்பார்களாயின் அவர்கள் இன்னார் என்று தெரிந்துரைப்பீர்'' என்று தமது அரசர்களை நோக்கிக் கட்டளை இட்டார் புகழ்ச் சோழர்.

''ஆண்டகையே! முறையே திறை கொடாத அரசன் ஒருவன் இருக்கிறான். அவன் பேர் அதிகன்; அண்மையில் மலையரணுடையவனாக மதில் சூழ்ந்த காவல் மிக்க கடிநகரில் உறைகின்றான்'' என்று அமைச்சர்கள் கூறினார்கள்.

''அஞ்சா நெஞ்சுடைய உமக்கு, எதிர் நிற்கும் அரணும் உளதோ? நால்வகைச் சேனைகளுடன் சென்று அந்த அரணைப் பொடிப்படுத்தி வாருங்கள்'' என்று பணித்தருளினார் மன்னர்.

அவ்வாணையைச் சென்னி மிசைத் தாங்கிய மந்திரிமார்கள், சேனாதிபதிகளுடன் நால் வகைச் சேனைகள் புடைசூழச் சென்று அதிகர்கோன் நகரை வளைத்துக் கடும் போர் புரிந்தார்கள். அதிகனுடைய சேனைகளும் எதிர்த்து அமர் புரிந்தன. கண்டார் கண்கள் துணுக்குறுமாறு இரு திறத்துச் சேனைகளும் கடுஞ்சமர் விளைவித்தன. இறுதியில் அதிகனுடைய சேனைகள் உறுதி இழந்து மாண்டன. அவனுடைய மலையரண்கள் துகள்பட்டன. அவன் ஓடிக் காட்டில் ஒளிந்தான்.

சோழனுடைய சேனை வீரர்கள் அதிகனுடைய நவநிதிகளையும் மாண்ட வீரர்களது தலைகளையும் எடுத்துக் கொண்டு கருவூரை அடைந்தார்கள். மன்னவன் முன் அவைகளைக் கொண்டு வந்து குவித்தார்கள். மன்னர் தமது சேனா வீரர்களது போர்த் திறத்தை மெச்சிப் புகழ்ந்து மகிழ்ந்தார். தமது சேனைகள் கொண்டுவந்த தலைகளைக் கண்ணுற்றபோது அவைகளின் நடுவே ஒரு தலையில் சடைமுடி யிருக்கக் கண்டார்.

கண்டபொழுதே நடுங்கி மனங்கலங்கிக்
கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர்
சென்றது கொணர்ந்த
இன்புறுவோன் கைத்தலையில் சடைதெரியப்
பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப்
புரவலனார்

சடைமுடியைக் கண்ட மன்னர் மனம் நடுங்கினா' விண்ணருவியெனக்

கண்ணருவி பொழியக் கருத்தழிந்தார். "அந்தோ! கெட்டேன்" என்று அலறினர். "நான் திருநீற்றின் நெறியைக் காத்து அரசளித்த தன்மை சால அழகிது. சடைமுடியுடைய ஒரு சிவனடியார் நிலையைக் கண்டும் என் இதயம் வெடிக்காமல் இருக்கின்றதே. இனி அடியேன் உலகங் காத்து, உயிர் காத்து வாழலாமோ? சிவபெருமானே, பழிக்கும் பாவத்துக்கும் ஆளானேன். இனி எனக்கு இவ்வுலகில் செயல் உண்டோ?" என்று புலம்பினர்.

முதிமந்திரிகளை நோக்கி, "நீங்கள் இந்த அரசாட்சியை அறநெறி கடவாது ஆண்டு உரிய காலத்தில் என் புதல்வனுக்கு முடிசூட்டுவீர்களாக" என்று கட்டளையிட்டருளினர்.

அமைச்சர்கள் கதறினர்; பதறினர்.

புகழ்ச் சோழ நாயனர் விறகுகளை யிட்டுப் பெருந் தீ வளர்ப்பித்தார். உடம்பு முழுவதும் திருநீறு பூசிக் கொண்டார். சடையுடைய சிரத்தை ஒரு பொன் தட்டில் ஏந்தித் தமது முடி கொண்டு அழற்குண்டத்தை வலம் வந்தார். தாமரைப் பொய்கையில் குளிப்பார்போல் மகிழ்ச்சியுடன் நெருப்பிடைப் புகுந்தார். மலர்மழை சிந்தியது. வானில் தேவதுந்துபி முழங்கியது. புகழ்ச் சோழ நாயனர் சிவபெருமான் திருவடி நிழலைச் சார்ந்து பேரின்பமுற்ருர்.

62. திருநீறு பூசிய தூர்த்தரும் உண்டோ?

திருவாதிரை சிவபெருமானுக்கு உவந்த நட்சத்திரம். அன்று சிவ மூர்த்தியைச் சிறப்பாக வழிபட வேண்டும். திருநீலநக்க நாயனர் திருவாதிரையில் சிறப்பாகப் பூசித்தார் என்பதை வரலாற்றில் கண்டோம்.

திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. அதனைக் கண் குளிரக் கண்ட அப்பரடிகள் அவ்வாதிரை விழாவைச் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார்.

நரசிங்க முனையரைய நாயனர் ஆதிரை நட்சத்திரந்தோறும் அடியார்களை உபசரித்து, ஒவ்வொருவருக்கும் அன்னமளித்து நூறு பொன் தரும் நியதியை மேற்கொண்டு ஒழுகினர். அதனால் சிவகதி பெற்ருர்.

திருமுனைப்பாடி நாட்டையாளும் மன்னர் மரபில் அவதரித்தவர் நரசிங்கமுனையரைய நாயனர். இவர் மன்னறம் வழுவாது மாநிலத்தை ஆண்டு வந்தார். திருநீற்றில் அளவிறந்த அன்பு பூண்டிருந்தார்.

ஆலய வழிபாடு குறையாது நடைபெறுமாதலால் நாட்டில் மாரி மாறிடாது மும்முறை பொழியும். வளம் பெருகும். குளம் நிறையும். நாடு நலமுறும். ஆதலால் இவர் திருக்கோயில்தோறும் பூசைகள் சிறப்பாக நடாத்துமாறு செய்தார். நல்விழாக்கள் நடாத்தினர். திருவாதிரை தோறும் விசேட வழிபாடும், அன்னதானமும், சொர்ண தானமும் செய்தார்.

ஒரு திருவாதிரை நாளில் வழக்கம் போல் வந்த அடியார்களில் ஒருவர் தூர்த்தராக இருந்தார். காமக்குறியுடைய அவரைக் கண்டு மற்ற அடியார்கள் ஒதுங்கினர்கள்.

நரசிங்க முனையர் அடியார்களை நோக்கி, "நீங்கள் இவ்வாறு இவரை இகழக் கூடாது. தூர்த்தராயினும் திருநீறு பூசியவர்களை இகழ்ந்தால் நரகடைய நேரும். ஆகவே, எவராயினும் திருநீறு பூசியவரைப் பூசிக்க வேண்டும்" என்று கூறி அத்தூர்த்தரைப் பணிந்து அவருக்கு இரட்டிப்பாக இருநூறு பொன் கொடுத்துக் கனியமுதன்ன இனிய மொழி கூறி விடை கொடுத்தனுப்பினர்.

சீலமில ரேனிலும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந் தருநரகம் நண்ணாமல் நண்ணுவார்
பாலணைந்தோர் தமக்களித்த படியிரட்டிப் பொன்
கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடை
கொடுத்தார்

தட்டுங்கள் திறக்கப்படும்!



அமெரிக்காவில் பிரண்டீஸ் என்ற நகரில் கல்லூரி ஒன்றில் மாணவர்களெல்லாம் அந்தக் கல்லூரியில் வழக்கத்திலிருக்கும் ஓர் ஏற்பாடு மிகவும் பழைமையானது என்றும், அதை மாற்ற வேண்டும் என்றும் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தனர். அந்த பழைய ஏற்பாடு என்ன?

"ஹாஸ்டலில் அறை ஒன்றில் ஒரு மாணவனும், ஒரு மாணவியும் தனித்து இருக்கும்போது அந்த அறையின் கதவு திறந்தே இருக்க வேண்டும்!"

'பாலி' — நியூஸ் வீக்



அமெரிக்காவில் சிகரெட் குடிக்கும் பழக்கத்தை விட்டவர்கள் எப்பொழுதாவது சிகரெட் பிடிக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டால், ஒரு நம்பருக்கு 'டயல்' செய்து ரிஸீவரைக் காதில் வைத்துக் கொண்டால் போதும். மறு முனையில் சிகரெட் அதிகம் பிடித்த ஒருவர் 'லொக்' 'லொக்' என்று இருமும் சத்தம் கேட்கும். இதைக் கேட்டதும் தானே புகை பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் மறைந்துவிடுமாம்!

'பாபு' — 'கத்தோலிக் டைஜஸ்ட்'

இவ்வாறு இடையறாது திருத்தொண்டு புரிந்து, இருந்திய சிந்தையராகிச் சிவபெருமானுடைய திருவடி நிழலைச் சார்ந்து இன்புற்றார்.

63. பரதவர் குலம் தந்த பத்தர் திலகம்

பற்றற்ற அன்பினால் பரம்பொருளைத் தரிசித்துப் பரகதியடைந்தவர் அதிபத்த நாயனார். அதிகமான பக்தி பூண்டிருந்தபடியால் இவர் அதிபத்தர் எனப் பேர் பெற்றார்.

சோழ நாட்டில் கடற்கரையில் வளமையும் வாணிபமும் பொருந்திய நகரம் நாகப்பட்டினம். தேவாரம், திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம். சோழ நாடு ஒரு கற்பகக் கொடி. அதில் பூத்த மலர் நாகப்பட்டினம் என்கின்றார் தெய்வச் சேக்கிழார்.

பொன்னி நாடெனும் கற்பகப் பூங்கொடி மலர்போல் நன்மை சான்றது நாகப்பட் டினத்திரு நகரம்

நாகையம்பதியின் மருங்கிலே கடலை மிக அடுத்த நுளைப்பாடியிலே பரதவர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் கடலில் சென்று வலை வீசி அகனும் வரும் மீன்களை விற்று வாழ்க்கைச் சகடத்தை நடாத்துவார்கள். பெரிய வலைகளை இழுக்கின்ற ஒலியும், மீன் குவியல்களை விலை கூறி அழைக்கின்ற ஒலியும், வெண் சங்குகளைக் குவிக்கின்ற ஒலியும் அலைகடலுக்கு எதிரொலி செய்வது போலிருந்தன.

அந்த நுளைப் பாடியிலே பரதவர் குலத்திலே பிறந்தவர் அதிபத்த நாயனார். இவர் சிவபெருமானுடைய திருவடியை மறவாதவராய், திருத்தொண்டு புரிந்து வந்தார். பரதவர் குலத்துக்குத் தலைவராய் அவர்கள் வலை வீசிப் பிடித்து மலை போல் குவிக்கும் மீன்களைப் பெற்று வாழ்வார்.

இவ்வாறு வலையில் படுகின்ற மீன்களில் தலை சிறந்த ஒரு மீனை, "இது சிவபெருமானுக்கு" என்று அளவற்ற அன்புடன் கடலில் விட்டு விடுவார். இந்த நியதியில் நின்று அவர் ஒழுகினார்.

ஒரு நாளில் ஒரே மீன் கிடைத்து. அதனையும் அரனார்க்கென்றே கடலில் விட்டு விட்டார். பல நாட்கள் தொடர்ந்து தினத்துக்கு ஒவ்வொரு மீனே கிடைத்து வந்தது. அரிதிற் கிடைக்கின்ற ஒவ்வொரு மீனையும் சிவமூர்த்திக்கு என்று கடலில் விட்டு வந்தார். அதனால் வறுமையடைந்து சுற்றத்தாரும் அவரும் உணவின்றி வாடினார்கள். அந்த நிலையிலும் அவர் மனம் வருந்தாராய் நியதி வழுவாதிருந்தார்.

அதிபத்தருக்கு உணவின்றித் திருமேனி தளர்ந்தது. பக்தியோ வளர்ந்தது. நியதியும் தளரவில்லை. ஆலகால விடமுண்ட இறைவர் அவருடைய அன்பென்னும் அமுதத்தை உண்பவராயினார் என்று சிறப்பித்துப் பாடுகிறார் சேக்கிழார்.

ஒரு நாள் மீன் பிடிக்கச் சென்றவர்களுக்கு நவரத்தின மயமான மிக உயர்ந்த ஒரு மீன் அகப்பட்டது. உலகத்தை விலை மதிக்கும் அவ்வொப்பற்ற மீனைக் கொண்டு கரையேறினார்கள். இளஞ்சூரியன் உதித்தாற் போன்று உலகெலாம் அதிசயிக்க விளங்கும் அந்த அரிய மீனைத் தமது தலைவராகிய அதிபத்தரிடம் கொடுத்து நின்றார்கள்.

நவமணி இழைத்த அப்பொன் மீனைக் கண்ட நாயனார், "இந்த அரிய மீன் என்னையாளுடைய ஈசருக்கே யாகும்" என்று அதனை மீளவும் கடலில் விடுத்தார்.

பற்றை விடுத்த அப்பெரியவர் முன் இறைவர் தோன்றியருளினார். மூவரும் தேவரும் காணாத முழுமுதலைக் கண்டு கண்ணீர் மல்கிப் பன்முறை பணிந்து, பரவசமானார் அதிபத்தர். எம்பெருமான் அவருக்கு சிவபோகத்தில் அடியவர்களுடன் உறையும் பேரின்ப வாழ்வை வழங்கியருளினார். **(தொடரும்)**

ரேயான் - கிரேட்
காஸ்டிக் சோடா

98/99% சுத்தம்

திரவப் பொருளாகவும், கட்டியாகவும்
தூளாகவும் கிடைக்கும்

THE METTUR CHEMICAL AND INDUSTRIAL CORPORATION LIMITED

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S., சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்

விநியோகஸ்தர்கள் :

சென்னை ராஜ்யத்துக்கு :

தி அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் லிமிடெட்
நெ. 7, செகண்ட் லேன் பீச், மதராஸ்-1
டி. கே. பட்டாபிராமன், ரங்கை கவுடர் தெரு, கோயமுத்தூர்
தி கெமிகல் ஏஜென்ஸீஸ், 51, தெற்கு மாசி வீதி, மதுரை
தி கெமிகல் ஏஜென்ஸீஸ், "அருணாசல விலாஸ்" காரைக்குடி
எஸ். வி. கே. ஐயர் & கம்பெனி, 282, நேதாஜி ரோடு, ஈரோடு
எஸ். வி. கே. ஐயர் & கம்பெனி, 100, குமரன் ரோடு, திருப்பூர்
கே. எம். சுப்பையா, 63, தெற்கு ரத வீதி, திருநெல்வேலி-6
தி மேட்டூர் ஏஜென்ஸீஸ், 8, பெரிய கம்மாள தெரு, திருச்சிராப்பள்ளி
ஸ்ரீ மீனாக்ஷி வீவிங் பாக்டரி, 3, ரத வீதி, கரூர்
தி சர்வ் இந்தியா ஏஜென்ஸீஸ், 9, காமாக்ஷி ஜோஸியர் தெரு, கும்பகோணம்
கே. ஈ. ஹாஜீ நூருதீன் சாஹிப் & கம்பெனி, மண்டி மெர்ச்சன்ட்ஸ் & கமிஷன் ஏஜண்ட்ஸ், வேலூர் (வட ஆற்காடு ஜில்லா)
வாசு சோப் ஒர்க்ஸ், 105, சாலை தெரு, பெரிய காஞ்சிபுரம்
வி. ஆர். பி. ராமநாதன், 55, அப்பு செட்டி தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2
காவேரி ஏஜென்ஸீஸ், 106, இருசப்ப செட்டித் தெரு, கடலூர் O. T.

ஆந்திரா ராஜ்யத்துக்கு :

ராம்-நாத் & கம்பெனி, 141, சரோஜினி தேவி ரோடு, செகந்திராபாத்
ராம்-நாத் & கம்பெனி, 100/5, முனிஸிபல் ஆபீஸ் ரோடு, விஜயவாடா-1
ராம்-நாத் & கம்பெனி, 6/527, டி. பி. ரோடு, திம்மன்செரலா போஸ்டு குண்டக்கல் - 2
தி கெமிகல் டிரேடிங் கம்பெனி, ஏகாம்பரகுப்பம் போஸ்டு நகரி R. S. (சித்தூர் ஜில்லா)


மைசூர் ராஜ்யத்துக் :

B. R. V. சன்ஸ், 162, வாணிவிலாஸ்ரோடு, பசவங்குடி P. O. பெங்களூர்-4

கேரள ராஜ்யத்துக்கு :

யுனைடெட் கேரளா டிரேடர்ஸ், கல்லாய் ரோடு, சாலபுரம் போஸ்டு கள்ளிக்கோட்டை
பிஸினஸ் பில்டர்ஸ் கார்ப்பொரேஷன், 32/815, ஆர்யசாலா ரோடு திருவனந்தபுரம்
ஸ்ரீ சி. எஸ். வைத்தியநாதன், (கொல்லம் விநியோகஸ்தர்கள்)
டி. கே. பட்டாபிராமன், 2/280, புது ரோடு, கொச்சின்

Criterion - MC -1955



சலனம்

எஸ். ரங்கநாயகி

நான் கொடுத்த விளம்பரத்துக்கு இப்படி உடனுக்குடன் பதில் வந்து விடும் என விசுவும் நினைத்திருக்கவில்லை. ஒரு பெண்ணேதான் பதில் எழுதியிருந்தாள். விளம்பரத்தில் தன் யோக்கியதையாக வேலையை மட்டும் குறிப்பிட்டிருந்தவன், படிப்பைப் பற்றிக் குறிப்புக் கொடுத்திருக்கவில்லை. அதைச் சுட்டிக் காட்டி விட்டு, படிப்பு யோக்கியதைகளைப் புரியவைக்க முடியுமா எனக் கேட்டிருந்தாள்.

துணிச்சல் பெண்ணாகத்தான் இருந்திருக்கவேண்டும். முதலில் விளையாட்டாகக் கருதித் தன்னுடைய ஆரம்பப் படிப்பிலிருந்து இன்ஜினீயரிங் கல்லூரிப் படிப்பு முடிவுவரை முதல் வகுப்பில் முதல்வனாகத் தேறியதையும், வாங்கியுள்ள முதற் பரிசுகள் பற்றியும் 'பெர்சனல் ரெஸ்யூம்' அனுப்பும் முறை போல் எழுதித் தன் புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தான். அத்தனையும் வேடிக்கையாக, விளையாட்டாகச் செய்ததுதான். மாறுவேடப் போட்டிக்குப் போட்டிருந்த வேடமே அதைப் பார்க்க வந்த சினிமா டைரக்டரைத் திகைக்க வைத்து சினிமாவில் நுழைவதற்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது போல், அவன் எழுதிய அத்தனை விவரங்களும் உபயோகமாக எடுத்துக் காட்டி அவனைத் திகைக்க வைக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துவிடும் என்று அவன் எதிர்பார்த்திருக்கவில்லை.

பதில்கூட வராது என நினைத்திருந்தவனுக்கு ஓர் அழகிய மங்கையே கதவைத் தட்டிக் கொண்டு எதிரில் நிற்பதைப் பார்த்ததும் திகைப்பு.... தாமரை இதழ் விரிவது போல் இமை திறந்த கண்கள்; ஒட்டியும் ஒட்டாமல் நிற்கும் பனித் துளியாக அன்பு நீர். சந்தனத்தைத் தேய்த்து அப்பியது போல் முகப்பொலிவு. இதழ்க்கடை யோரத்தில் தெளிந்து தவழும் முறுவல். சிற்பி அளவிட்டுச் செதுக்கி வைத்தாற்போல், உருண்டு திரண்ட அவயவம். பாவனைச் சுழல்களாக தெளியும் பெண்மைக்கான நாணம். செம்பொன்னாக அடங்கி ஒளி வீசும் அடக்கம்.

இத்தனையையும் விசுவும் ஒரே நிமிடத்தில் கண்டு விட்டான். தன் கடிதத்துக்குப் பதில் கூறுபவளாக அவள் வந்திருக்கிறாள் என அவன் முதலில் நினைத்திருக்கவில்லை. 'சேல்ஸ் உமன்' என எத்தனையோ அழகிகள் இது போல் வருவதில்லையா? மேல் துண்டோடு

அமர்ந்திருந்த அவன், ஒரு பெண் வந்திருப்பதைக் குறித்து ஒரு பனியனை மட்டும் மாட்டிக் கொண்டான். வேறு அலங்காரம் கூடச் செய்துகொள்ளவில்லை. மீண்டும் ஒரு முறை அவளை நோக்கியபோது அவள் கையில் ஒரு பர்ஸ்கூட இல்லாதது அப்போதுதான் தெரிந்தது. அதனால் விற்பனை வனிதையாக அவள் இருக்க முடியாது.

"இதுதான்...." இழுத்துவிட்டுச் சற்று நிறுத்தினாள். வீணைத் தந்தியின் மீட்டலுக்குப் பிறகு ரீங்காரமிடும் இனிய நாதம் அவன் காதில் ஒலித்தது.

"இது விசுவம் என்பவனுடைய வீடு." அவன் அவளுடைய சந்தேகத்தைப் போக்குபவனாகப் பகன்றான்.

அவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள். பிறகு வாசற் பக்கம் சென்றாள். ஒரு விநாடியில் அவள் திரும்பினாள். அவளுடன் ஒரு பெரியவரும் வந்தார்.

திகைப்பினூடே அவர்களை வரவேற்க அவன் தவறவில்லை. இருவரையும் சோபாவில் அமரச் சொன்னான்.

"நான் சந்திரசேகரன். இவள் என் மகள் மஞ்சுளா" எனப் பெரியவர் அறிமுகம் செய்து வைத்தார்.

மஞ்சுளா உடனே தொடர்ந்து விட்டாள். "நீங்கள்தான் மிஸ்டர் விசுவம் என்று நினைக்கிறேன்."

அவன் தலையை மட்டும் ஆட்டி வைத்தான்.

"விவாகத்துக்கு நீங்கள் விளம்பரம் கொடுத்திருந்ததைப் பார்த்தோம். உங்கள் யோக்கியதைகளைக் கேட்டு எழுதியதும் இவள்தான்." சந்திரசேகரன் நிறுத்தினார்.— அவன் பேசட்டும் என்று இடைவெளி விட்டது போன்ற தோற்றம்.

"ஓ! அப்படியா? பெண்ணின் புகைப் படத்தை அனுப்பியிருந்திருக்கலாம்!" துணிவாக அவனும் கூறினான். வேறு ஒரு பெண்ணுக்காக இவர்கள் யோக்கியதாம்சங்களைக் கேட்டு எழுதியிருக்கலாம். அந்தப் பெண் இவர்களுக்கு என்ன உறவோ?

"புகைப்படத்துக்கு அந்தப் பெண் மதிப்புக் கொடுப்பவளில்லை. அதனால் நேரில் வந்து விட்டாள். இந்த மஞ்சுளாதான் அந்தப் பெண். உங்களை நேரில் சந்தித்துச் சம்மதத்தைத் தெரிவிக்க வந்தவள். நேரில் சந்தித்தால் ஒருவருக்கொருவர் குணநல விசேஷங்களையும் அறிந்து கொள்ளலாம் என்பது இவள் எண்ணம்."

சிறு காற்றுக்குத் தலை சாய்க்கும் பூவிதழாக மஞ்சுளா நாணத்தோடு தலைகுனிந்த போது, விசுவமோ காற்றுக்கு ஆட்டம் காட்டும் இலையாக மனம் ஆடுவதை உணர்ந்தான். அவன் அனுப்பியிருந்த புகைப்படம் அவனைத் தத்ரூபமாக உள்ளது உள்ளபடி எடுத்துக் காட்டுவதாகத்தான் இருந்தது. அதற்குப் பிறகு அவள் அவனை இப்போது நேரில் பார்க்கிறாள். அப்படியும் அவள் சம்மதம் தர முடியுமா? அவளோ ஓர் அழகுப் பிம்பம். தன்னைப் பற்றி எப்படி அவன் சொல்வது...? அழகுக்கு ஒப்பிட்டுக் கூற ஆயிரம் உவமைகள் உண்டு. அவனைப் போன்றவர்களுக்கோ அத்தனையும் சேர்த்து அவலட்சணம் என்ற ஒரே வார்த்தையைத்தான் சொல்ல முடியும். பெரிய முகத்தில் பெரிய விழி, பெரிய மூக்கு, நிறமும் கருமைக்குத் தீர்ந்த உதாரணம்.... நளினத்துக்கும் அவனுக்கும் ஒட்டுறவே கிடையாது. இத்தனை வைபவங்களோடு கூடிய தனக்கு மணமாலை கிட்டும் என்றே நினைக்க முடியவில்லையாதலால்தான் அவன் விளம்பரம் கொடுத்திருந்தான். அவனது உயர்ந்த உத்தியோகத்தை விரும்பியாவது ஓர் ஏழைப் பெண் மணமகளாக அவனை ஏற்க முன்வருவாள் என்ற நம்பிக்கை... தனக்கு ஒரு துணை வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன்தான் அவன் விவாகம் செய்து கொள்ள விரும்பினான். கடைசியில் அந்தத் துணை இப்படி வந்து நிற்கிறது!

விசுவத்துக்கு என்ன பேசுவது என்றே புரியாத நிலை. நிமிர்ந்து மஞ்சுளாவைப் பார்க்கக்கூட முடியாதபடி கோழைத்தனம். ஆண்டவன் படைப்பில் இப்படிப் பேதத்தைக் காண வைக்கும் நிகழ்ச்சி.

விசுவத்தின் மௌனத்தைக் கண்டு சந்திரசேகரனே பேசினார்: "பெண் பார்க்கும் படலமெல்லாம் இனி அவசியமில்லையே! பெற்றோர்கள் இல்லை என எழுதியிருந்தாய். அதனால் முகூர்த்தத் தேதி உனக்கு எப்போது சௌகரியமாக இருக்கும் எனத் தெரிவித்தால் மேற்கொண்டு ஏற்பாடு செய்யலாம்."

"பெண் சம்மதத்தை நான் அறிந்து கொள்ள வேண்டாமா?" என்று தட்டுத் தடுமாறி அவன் கேட்டுவிட்டான்.

சந்திர சேகரன் சிரித்துவிட்டார். "பெண் சம்மதம் முதலில் முடிவானதாக நிற்பதால் தானே அப்பா நானே வந்தேன்!" என்றவர், மகளை நோக்கி, "மஞ்சு, நீயே சொல்லி விடேன்!" என்றார்.

"நானாக விரும்பி ஏற்கும் வரன் என்று சொல்லி விடுங்கள் அப்பா!"

தேன் துளிகளாக இந்த வார்த்தைகள் அவன் காதில் விழுந்தபோதும் அவற்றை அவனால் ருசிக்க முடியவில்லை.

சந்திரசேகரன் தொடர்ந்து மஞ்சுளாவைப் பற்றியும் கூறிவிடுகிறார். தாயற்ற அந்த ஒரே மகளை மனங்கோணாமல் வளர்த்து வருகிறார். அவளும் கல்லூரிப் படிப்பை முதல் வகுப்பில் தேறி முடித்து விட்டவள். லட்சக் கணக்கான சொத்துக்கு வாரிசு. பெண்ணின் விவாகம் முடிந்ததும் அவர் வேதாந்த தத்துவங்களை அறியப் பெரிய மகான்களோடு தங்கிவிடப் போகிறார்.

மென்று விழுங்கிக் கடைசியில் விசுவம் ஒரே ஒரு வேண்டுகோள் விடுத்தான்: "விவாகம் ஆடம்பரமின்றி எளிய முறையில் நடந்துவிட வேண்டும்" என்று.

இல்வாழ்வும் தொடங்கும்போது மஞ்சுளாவின் குதூகலத்தை அவன் காண முடிந்தது. அவனுக்கோ... அவளுடைய குதூகலத்தைத் தட்டிப் பறிக்கத்தான் இப்படி ஏற்பாடோ என்ற அச்சம். அவள் தன் மனைவி எனக் காணும்போதெல்லாம் அதே சோதிக் கீழே தள்ளிவிடும் சிறுமை. மீண்டும் தன்னைப் பார்த்துக் கொள்ள முடியாத தவிப்பு.

விவாகம் எந்தக் காரணத்துக்காக ஆடம்பரமாக நடத்த வேண்டாமென விரும்பி

ஆனால் கடைசியில் அந்தச் சிக்கலிலிருந்தும் அவனால் விடுபட முடியவில்லை.

விவாகத்துக்கு வராதவர்கள் அத்தனை பேர்களையும் நிறுத்தி வைத்துக் கொண்டு மஞ்சுளா தன்னைச் சேர்ந்தவர்களிடம் ''இவர் என் கணவர்'' எனக் கூறும்போது அவனுள் கிளர்ந்தெழும் வெட்க உணர்ச்சி; புன்முறுவலுடன் தலைநிமிர்ந்து பதிலுக்குக் கரம் குவிக்க முடியாத இயலாமை. உடனே அங்கிருந்து நகர்ந்துவிடத் தோன்றும் துடிப்பு. அவளுடைய உரையாடலில் ''என் கணவர் ஜீனியஸ்'' எனப் பெருமை பொங்க அவள் கூறும்போது அப்பெருமை எனக்குத்தான் என மகிழ்ச்சி காட்ட முடியாத சிக்கல்.

காரியாலய நண்பர்கள், 'என்ன, எங்களுக்கெல்லாம் ரிசப்ஷன் கிடையாதா?' என நச்சரிப்பார்கள். மஞ்சுளாவை மணந்திருக்காவிடில் எத்தனை ஆடம்பரமாக அவன் ஏற்பாடு செய்திருக்க முடியும்! இப்போதோ ரிசப்ஷனைத் தட்டிக் கழிக்க அவனுக்கு விருப்பம். ரிசப்ஷனின்போது இந்த அழகுப் பெண் என் மனைவி மஞ்சுளா என அவள் அருகில் நின்று மகிழ்ச்சியோடு கூற முடியாத நெருக்கம். அவள் அருகில் நின்று இருவரையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சந்தர்ப்பத்தை மற்றவர்களுக்கு அளித்துவிடக் கூடாதென்ற பதற்றம் அவனுக்கு ஏற்பட்டது.

கடைசியில் ஒரு நண்பர் மஞ்சுளாவிடமே ரிசப்ஷனைப் பற்றிக் கேட்டுவிட்டபோது மஞ்சுளா வீட்டிலேயே ரிசப்ஷனுக்கு ஏற்பாடு செய்துவிட்டாள். அவனால் தடுக்க முடியவில்லை. அழகுத் தெய்வத்துக்கு எதிரில் தன்னால் எதையுமே சொல்ல முடியாதது போல் அவன் உணர்ந்தான். அவளை மேல் படியில் நிற்க வைத்து விட்டுத் தான் கீழ்ப் படியில் நிற்பது போன்ற பிரமை. வந்திருந்த விருந்தினர்களை வரவேற்கும், பணியை அவளே முழுவதும் ஏற்கும்படியான கதையாக நின்றுவிட்ட போதிலும் அவன் சளைக்கவில்லை.

தன்னை அவள் விரும்ப முடியுமா, இது மாயையாக இருக்குமோ என்ற அச்சம் கிளர்ந்தெழும்போது அவள் அவன் அருகில் அமர்ந்தபடி தன் நெருங்கிய தோழிக்கோ தந்தைக்கோ கடிதம் எழுதிக் கொண்டிருப்பாள். முடிவில் 'இப்படிக்கு மிஸஸ் மஞ்சுளா விசுவம்' என அவள் எழுதும் கையெழுத்து அவனுக்குத் தெளிவுகளை உண்டாக்குவது போல் உணர்வான். மஞ்சுளாவுக்கும் விசுவத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என அவள் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்டுவது புரியும்.

இத்தனைக்கும் அவனிடம் அவள் கொஞ்சியதில்லை. கல்லானாலும் கணவன் என்ற கொள்கையைப் பின்பற்றுபவளாக அவனுக்குப் பிடித்ததையே உடுத்த வேண்டும், உண்ண வேண்டும் என்று கண்மூடித்தனமாகப் பின்பற்றவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது. தன்னையும் அவள் கொஞ்சிக் குலாவ வேண்டும் என அவள் எதிர்பார்க்கவில்லை. தனக்குத் தோன்றுவதைத் தான் கூறுவது போலும், செய்வது போலும் அவனுக்குத் தோன்றுவதை அவன் சொல்லிச் செய்யவேண்டுமென்பது அவள் விருப்பம். இருவரும் ஒருவருக்கொருவர் மதிப்புத் தருவதாக அவனை அவள் மதிக்கிறாள். தான் கொடுக்கும் மதிப்பை, தன் செய்கை மூலம் காட்டவும் செய்கிறாள். அவனுக்கும் அவளுக்கும் பேதமில்லை என அவளால் எப்படி இருக்க முடிகிறது? அவளால் எப்படி அவனோடு ஒட்ட முடிகிறது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை.

காரியாலயத்தில் அவனுடைய திறமையை வெகுவாகப் பாராட்டி உற்பத்திப் பிரிவுக்கே தலைமை அதிகாரியாகப் போட்ட போது அவள்தான் அதிகமாக மகிழ்ச்சியைக் காட்டினாள். 'என் குறிக்கோள் தவறவில்லை' என அவள் கூறியது அவனுக்குப் புரியவில்லை.

தந்தையாகப் போகும் பூரிப்பில்தான் விசுவம் தன் மனக் குழப்பத்தை ஓரளவு மறந்தான் எனக் கூற முடியும். ஆனால் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடாமல் திடீரென அவள் டைபாய்ட் ஜுரத்தில் படுத்துவிடுவாள் என இருவரும் எதிர்பார்த்திருக்கவில்லை. இரவு பகலாக அவன் அவளுக்கு எவ்வளவு செய்திருப்பான்! கடைசி

மலையைப் புரட்டி...

அகாபா வளைகுடாவில் இஸ்ரேலிய கப்பல்களின் போக்குவரத்துக்குத் தடை விதித்திருக்கிறது ஐக்கிய அரபுக் குடியரசு. இந்த வளைகுடாவில் இஸ்ரேலிய நாட்டை நோக்கிச் செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் என அறிவித்துள்ளது. இஸ்ரேலின் தெற்குக் கோடியில் உள்ள ஈலாட் துறைமுகம் இதனால் பாதிக்கப்படுகிறது. இஸ்ரேலுக்குப் பெருமளவு வருவாய் பெட்ரோலியம் எண்ணெய் இத்துறைமுகம் வழியாகவே வந்து கொண்டிருந்தது. இஸ்ரேலிய மக்களின் ஆக்கத் திறனுக்கும் ஊக்கத்துக்கும் ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமானால் தெற்குக் கோடியில் இந்த ஈலாட் துறைமுகத்தை அவர்கள் அபிவிருத்தி செய்த விதத்தைக் கூறலாம். நம் பக்கத்தில் மலையைப் புரட்டுகிற காரியம் என்பதாகப் பேச்சு வழக்கில் சொல்வோம். இஸ்ரேலிய மக்கள் இதைச் செய்தே காட்டியுள்ளனர். ஈலாட் துறைமுகத்தை விஸ்தரிக்க நினைத்தபோது இட வசதிக்காக ஒரு மலையையே தகர்த்துக் கடலுக்குள் தள்ளிவிட்டனர்! இதன் பிறகு இத் தெற்குப் பகுதியில் ரசாயனத் தொழிற்சாலைகள் ஏகமாகப் பெருகியுள்ளன.

— ஆதாரம்: 'ஹிந்து', மே, 28உ



[illegible] ஆண்டுகள் வருவே ஏமாற்றிவிட்டான். அவன் பிழைத்து விட்டான். காரியாலயமும் போக ஆரம்பித்து விட்டான்.

இப்போதோ மனத்தில் வேறு உணர்ச்சல். இரவு பகலாக அவனுக்குச் சேவை செய்த தன் பலனாக இருக்குமோ அல்லது தாய்மைச் சுமை தாங்காத தன்மையோ, மஞ்சுளா ஏன் இப்படி வாடிவிட்டாள்! கண்களில் மிளிரும் அன்புக்குள் சோர்வின் சேர்க்கை, முகப் பொலிவினூடே அயர்ச்சி. அவனால் தான் அந்த அழகு குன்றிவிட்டதோ!

அவன் அவளிடம் கேட்டுவிட்டான்: ''மஞ்சுளா! நான் டைபாய்டில் படுத்திருக்காவிடில் உன் அழகு பழைய பொலிவுடன்தானே இருந்திருக்கும்?''

அவள் மென்னகை புரிந்து விட்டுக் கேட்டாள். ''நீங்கள் என்றேனும் கண்ணாடியைப் பார்த்துக் கொள்வது உண்டா?''

அவனுக்கு அந்தக் கேள்வி சுருக்கென முள்ளாகத் தைத்தது. 'உங்கள் அழகைவிட என் அழகு குறைந்துவிடவில்லை' எனச் சுட்டிக் காட்டுகிறாளோ? அவளிடம் அவன் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது.

அவனுடைய மௌனத்தைக் கலைப்பதற்காக அவளே பேசினாள். ''நீங்கள் நிலைக் கண்ணாடியைப் பார்க்காமல் என் முகத்தை நோக்கினால் நீங்கள் உங்களைக் காண முடியும். நான் சொல்வது புரிகிறதா? மனைவியின் அன்புதான் கணவனின் அழகுக்கு எடைக் கல் என்பது என் கொள்கை. அதே போல் உங்கள் முகத்தில்தான் நான் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.''

அழகுக்கு விமரிசனம் கொடுப்பதாக அவளுடைய சொற்கள் அமைந்துள்ளதை அவன் புரிந்து கொண்டான். ஒரு நிமிடம் உணர்ச்சிப் பெருக்கினால் அவனால் பேச முடியவில்லை. ஆனால் மீண்டும் சஞ்சலத்துக்கான வித்துதான் மனத்தில் எழுந்தது. அவள் அவனைக் கணவனாக எந்த விதத்தில் அன்பு கொள்ள முடியும்? உலக சுகானுபவங்களை விரும்பி அனுபவிக்கிறாள் அவள். புது முறையில் வீட்டை அலங்கரிப்பதோடு தன்னையும் நன்கு அலங்கரித்துக் கொள்கிறாள். புது விதமான துணிகள் வாங்குகிறாள். நகைகளைக்கூட விரும்பி அணிகிறாள். அவனை அவன் வேதாந்தியாக, கிடைத்தது போதும் என்ற திருப்தியுடையவளாகக் காண முடியவில்லை. எத்தனையோ வரன்கள் குவிந்திருக்கும். அத்தனையையும் ஒதுக்கி விட்டு அவனை மணாளனாக ஏற்றதை என்னவெனக் கூறுவது!

பிரசவம் நல்லபடி முடிந்து ஆண் குழந்தை என்ற செய்தி கேட்டதுமே குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்போடு, குழந்தை தன்னைப் போல் இருந்துவிடுமோ என்ற அச்சம் தானாக மனத்தில் பதிகிறது. தன்னையே குழந்தை உருவில் பார்க்கும்படி நேரிட்டால் எந்த உணர்வுடன் வரவேற்பது என்ற தவிப்பு.

குழந்தையைப் பார்க்க அறையினுள் நுழையும்போதே தவிப்பு. தன்னைப் போல் இருப்பதைத் தானே பார்க்க முடியாதது போன்ற அச்சம். கண்ணாடியாக எடுத்துக் காட்டும் குழந்தையை அவன் விரும்பவில்லை. அவன் உள்ளே நுழைந்ததுமே புன்சிரிப்புடன் படுத்தபடியே மஞ்சுளா வரவேற்றாள். அருகில் அவள் கை அணைப்பில் தெரியும் உருவம். மேல் துணியை அவள் மெள்ள நீக்கிக் காட்டுவதற்குள் அவனுக்குத் துடிப்பு. தங்கள் இருவருக்கும் பொதுவான சொத்தாக அக் குழந்தையை அவள் உருவில் அவன் கண்டதும் ஆனந்தம் எல்லை மீறுகிறது.

''ஓ! மஞ்சு! நம் குழந்தை உன்னைப்போல் இருப்பதில் நான் எவ்வளவு ஆனந்தம் காண்கிறேன்!'' எனக் குழந்தையாகவே அவன் கூச்சலிட்டுக் குதூகலம் கண்டபோது மஞ்சுளா அவனை நோக்கிப் புன்னகை புரிந்தாள்.

மீண்டும் சிறு துணியால் குழந்தையைப் போர்த்தியபடி அவள் கூறினாள்: ''அவன் உங்களைப் போல் வளர்வதைத்தான் நான் விரும்புகிறேன். என் குறிக்கோள் தவறக் கூடாது.'' அவள் கூறியது அவன் செவிகளில் விழுந்ததாகவே தெரியவில்லை.

நான்கு ஆண்டுகள் எவ்வளவு வேகமாக ஓடிவிட்டன! குழந்தை ரவியின் மழலை மொழியிலும், புத்திசாலித்தனமான பேச்சிலும் பெற்றோர்கள் இன்பம் கண்டார்கள். கிண்டர்கார்டனில் அத்தனை பேரையும் அவன் வசீகரித்து விட்டான். மலருக்கு இடையே இதழில் பூச்சி அரித்த ஓட்டை போல் விசுவத்துக்கு மட்டும் இன்பத்துக்கிடையே சிறிதான துன்பம். குழந்தைக்கும் மஞ்சுளாவுக்கும் இடையே தான் தனித்து நிற்பதான பிரமை. மஞ்சுளா எவ்வளவோ வாடிவிட்டாள். அவளுடைய அழகின் பிரதிநிதியாகக் குழந்தை வளரும்போது அவனைப் பார்த்து, கணவனையும் அருகில் பார்க்கும்போது அவள் என்ன நினைப்பாள்! இத்தனை வருடங்களுக்குப் பிறகும், பல பக்கங்களைப் படித்தும் இன்னும் மர்மம் விடுபடாத கதை போல மஞ்சுளாவை இன்னும் புரிந்துகொள்ள இயலாத தேக்கம்.

அன்று வந்த கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்று விசுவத்துக்குப் புரியவில்லை.

மஞ்சுளா பெட்டியைத் திறந்து ஒரு தம்பதியின் புகைப்படத்தை அவனிடம் நீட்டினாள்.


''நம் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து தங்கப் போவதாகத் திருச்சியிலிருந்து வந்திருக்கும் கடிதம் இவர்களுடையதுதான்.''

புகைப்படத்தைப் பார்த்ததுமே விசுவத்தின் மனத்தில் மீண்டும் எழும்பியது புகைச்சல். உடைந்த பொம்மையின் ஒரு பாகம் திடீரெனக் கண்ணில் பட்டதும் பழைய நினைவுகளும் அது உடைந்த காரணமும் அடுத்தடுத்து மனத்துள் நகரும் செய்கையாக, புகைப்படத்தில் கண்ட ஆணழகனைக் கண்டதும், அந்த உருவம் மறைந்து, தன் உருவம்தான் புகைப்படத்தைக் கண்ணாடியாக்கிக் காட்டுவது போல் இருந்தது. அந்தத் தம்பதி வந்தால் மஞ்சுளாவின் மனம் ஒரு கணம் தன் கணவனை நினைத்து அப்படி ஆறுதல் தானே செய்யும்!

''இவர்கள் யாரென்று நீங்கள் கேட்கவில்லையே!''

''உம்...''

''இருவரும் என்னோடு படித்தவர்கள். இந்த மூர்த்தி, அவன் பக்கத்திலிருக்கும்.


எச் சாலைகளிலும் நன்னம்பிக்கையோடு நடந்திடுவீர். வழுக்காத் தன்மையுடைய விசேஷ சோல்களை உடைய ஸிஎஸ்ஸி மழைக் கால மிதியடிகள் உங்களை அடிநழுவ விடாதவை. அதோடன்றி, உங்கள் பாதங்களுக்கு முழுப் பாதுகாப்பு தருபவை. வசதியோடு நீடித்து உழைப்பதற்கென்றே உருப்பெற்றவை. அணிந்திடுங்கள் ஆனந்தமாய்; மழை என்ற நினைப்பே இன்றி நடந்திடலாம்.
பலாரீனா
தேர்ந்தெடுக்கப் பல்வேறு அழகுநவீன பாணிகள். எவ்வொரு விருப்பத்திற்கும் ஏற்றவை. ஆடவருக்கான மொஹாக், தாஜ் ஹவா, வர்ஷ பஹார், பெண்மணிகளுக்கான பலாரீனா. இன்றே பெறுங்கள் ஸிஎஸ்ஸி மிதியடிகள்.
வர்ஷ பஹார்
ஸிஎஸ்ஸி பாத அணிகள் உழைப்பின் கடுமைக்கும் உராய்வுகளுக்கும் ஈடுகொடுப்பவை.
கரோனா ஸாஹு கோ. லிட்.
ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: 221, டாக்டர் தாதாபாய் நவ்ரோஜி ரோடு, பம்பாய் 1.
மொஹாக்
தாஜ் ஹவா
அணிந்திடுங்கள்
ஸி.எஸ்.ஸி.
மறந்திடுங்கள்
மழையினையே



கலியாண கால விசேஷ விற்பனை!
SILK SAREES
பட்டுச் சேலைகள்
சோளி பீஸ்கள்
மற்றும்
நூல் சேலைகள்
ஜவுளி ரகங்களும் கிடைக்கும்
நல்லி
டெக்ஸ்டைல்ஸ்
போன்:
442567
பாண்டி பஜார்
தி.நகர் — சென்னை-17



தரமான வேலைத்திறனுக்கு நிகரற்றது
கணேஷ்
டிலைட் விசிறிகள்
GANESH
DELITE FANS
A. G. F. M. Product

உஷா நாங்களெல்லோரும் ஒன்றாகப் படித்தவர்கள். இந்த மூர்த்தி என்னைத்தான் விவாகம் செய்து கொள்வேன் என ஒற்றைக் காலில் நின்றவன்'' எனக் கூறிவிட்டு மஞ்சுளா கடகடவெனச் சிரித்தாள்.

விசுவத்தின் உடலெல்லாம் எரிச்சல் காணுவது போல் இருந்தது.

''திருச்சியில் ஒரு கிராமமே இவர்களுக்குச் சொந்தம். ஒரே பிள்ளை....''

மஞ்சுளா மீண்டும் நிறுத்தினாள். இத்தனை வருடங்களுக்குப் பிறகு அவனை வதைக்க இப்போது கங்கணம் கட்டிக் கொண்டாளோ! விவாகம் 'செய்துகொள்வது தானே' எனக் கேட்டுவிடத் துடிப்பு இருந்தும் கேட்க முடியாத அந்தக் குமுறலை, ஆத்திரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

''நான் கண்டிப்பாக மறுத்ததும், உஷா அவனை மணந்துவிட்டாள். 'இதோ பார், உன்னைவிட அழகான மனைவி' என அவன் என்னிடமே கூறினான். உஷாவுக்கும் இப்படிப்பட்ட அழகுக் கணவன் கிடைத்ததில் கர்வம்.''

அவன் பதில் கூறாமல் நகர்ந்து விட்டான்.

விருந்தாளிகள் வந்துவிட்டார்கள். விசுவம் வந்தவர்களையும் அவர்கள் குழந்தைகளையும் மாறி மாறிப் பார்த்தான். குழந்தை ராமப் பிரசாத் எவ்வளவு அழகாக இருந்தது! ரவியை விட இரண்டு வயது மூத்தவனாக இருக்கலாம். ஆனால் ரவியிடம் காணப்படும் துடிதுடிப்பும், ஆர்வமும், சாதுர்யமும் ஏனோ காணவில்லை.

மூர்த்தியும் உஷாவுமோ? இவர்களின் அழகு மங்கிப் போயிருக்குமோ! புகைப் படத்துக்கும் நேரில் காண்பதற்கும் எவ்வளவு பேதம்.

விசுவம் மஞ்சுளாவைக் கவனிக்கத் தவறவில்லை. கணவனுக்காக அவள் பயந்ததாகத் தெரியவில்லை. மூர்த்தியோடும் உஷாவோடும் சரளமாகப் பழகினாள். இடையிடையே விசுவத்துக்குக் கிடைத்துள்ள உத்தியோக உயர்வுகளைப் பற்றியும் அவன் எழுதிய கட்டுரை சிலவற்றுக்குக் கிடைத்த பரிசுகளையும் பாராட்டுரைகளைப் பற்றியும் எவ்வளவு குதூகலமாகக் கூறுகிறாள்! அத்துடன் விடவில்லை. குழந்தை ரவி பள்ளியிலும் மற்றவர்களிடமும் பெற்றுள்ள பரிசுகளை எடுத்துக் காட்டிப் பெருமை கொள்கிறாள். இதையெல்லாம் பார்த்து உஷாவின் முகம் ஏன் தொங்கிவிட வேண்டும்!

விருந்தாளிகள் சென்றுவிட்டனர். ஏதோ ஒரு வேலைக்கான 'இண்டர்வ்யூ'வுக்கு வந்த மூர்த்தியோடு உஷாவும் எதற்காக வந்தாள் எனப் பிறகுதான் தெரிந்தது.

''உஷாவுக்கு ரொம்பவும் குறை. மூர்த்திக்கு உத்தியோக உயர்வு கிடைப்பதில்லையாம். அதனால் வேறு வேலைக்கான விண்ணப்பமும் இண்டர்வ்யூவும். இங்கும் மூர்த்தி சரியாகப் பதில் கூறியதாகத் தெரியவில்லை. கண்காணிக்கத்தான் இவளும் வந்திருக்கிறாள். ஆனால் இவளால் என்ன செய்யமுடியும்? அவனுக்கு ஆண்டவன் அளித்துள்ள மூளைக்கு மேல் இவள் எதிர்பார்க்க முடியாதே. நான் என்ன செய்யட்டும், இப்போது உஷாவுக்கு என்னைப் பார்த்துப் பொறாமை'' என்று மஞ்சுளா கூறிவிட்டு நிறுத்தினாள்.

விசுவம் திரும்பி அவளை நோக்கினான். ''நீ என்ன சொல்கிறாய்?''

''சொல்வதென்ன, தெரிந்த விஷயம் தானே! இந்த மூர்த்தி இருக்கிறானே, எங்களைவிட இரண்டு வருடங்கள் சீனியர். கடைசியில் எங்களோடுதான் பி. எஸ்ஸி. முடித்தான். அவளுக்கும் இது தெரிந்ததுதானே. உருவத்தைக் கண்டு மயங்கி விட்டாள். இப்போது குழந்தையும் அப்பாவைப் போல் இருக்குமோ என்ற அச்சம்!'' எனக் கூறிக் கொண்டே வந்தவள், விசுவத்தின் இரு தோள்களையும் பிடித்துக் கொண்டாள். ''அவள் என்ன சொல்கிறாள் தெரியுமா? நான் ஆராய்ந்து புத்திசாலித்தனமாகக் கொள்முதல் செய்துவிட்டேனாம்'' எனக் கூறியபடி அவன் தோளின்மீது சாய்ந்து கலகலவென நகைத்தாள்.

அவனுக்கு எல்லாமே வேடிக்கையாக இருந்தது. அவள் கண்களை அவன் உன்னிட்டு நோக்கியபோது, அதனுள் அழுத்தமாகப் பதிந்திருந்த அன்பும், மகிழ்ச்சியும் அவனுக்குப் பளிச்செனத் தெரிந்தன. ''எனக்கு ஒன்றும் புரியவில்லை மஞ்சு!'' அவளைத் தோளிலிருந்து நிமிர்த்திக் கேட்டான்.

''எனக்குத் தெரிகிறது, உங்களுக்குப் புரியவில்லையென்று ... நான் முன்னைவிட அழகு குறைந்திருக்கிறேனாம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள்.'' புதிர் போல் அவள் திடீரெனக் கேட்டு வைத்தாள்.

''நீ கண்ணாடியில் காணாமல் என் முகத்தில் உன் அழகைப் பார் தெரியும்... இந்தப் பாடம் நீ கற்றுக் கொடுத்தது...'' சடக்கென அவன் பதிலுரைத்தான்.

''நீங்கள் கெட்டிக்காரர் என்பது தெரிந்து தானே கணவராகத் தேர்ந்தெடுத்தேன். என்னிடமும் மூர்த்தி-உஷாவிடமும் உள்ளது கிருஷ்ணபட்சத்து வம்சம். உங்களிடம் உள்ளது சுக்லபட்சத்தைச் சேர்ந்தது. புரிந்ததா? வேடிக்கையைப் பாருங்கள். அழகைப் படைக்கும் தெய்வம் அதைக் காலத்தின் கையில் தேய விட்டுவிட்டுக் கவலைப்படுவதில்லை, துன்பச் சூழ்நிலையில் அடிபட்டால் மாய்ந்து போவதையும் பார்த்தபடி நிற்கிறான். ஆனால் அதே தெய்வம் அறிவைப் படைக்கும்போது காலத்தின் கையில் அதற்கு மெருகை ஏற்றிவிட்டுப் பளபளக்கச் செய்கிறான். துன்பச் சூழ்நிலையில் அதன் உதவியையும், காட்டி அழிவற்றதாகச் செய்கிறான். அழகைக் குறிவைத்துக் காலப் போக்கில் ஒருவனை அடையாளம் காண முடியும். அறிவு, குழந்தைகளுக்கு அவன் வம்சத்துப்பரம்பரைச் சொத்து. ராமப்பிரசாத் தன் தந்தையைப் போல் இருப்பதில் உஷாவுக்குக் குறை...''

விவாகமான பிறகு முதல் முதலாக மனத்தில் நிர்மலமான எக்களிப்புடன் ''ஓ, மஞ்சு!'' எனக் கூவியபடி விசுவம் மஞ்சுளாவின் கைகளை ஆர்வத்துடன் பிடித்துக் கொண்டான். ''ஆண்டவன் அழகையும் அறிவையும் ஒரே இடத்தில் பதித்து விட்டால் அதை சூரிய வம்சம் எனக் கூறலாமா?'' என்று அவன் கேட்டதும் அவள் புன்னகையுடன் அவன் மார்பின்மீது சாய்ந்தாள்.

வட்ட மேஜை

* கட்டாயத் திணிப்பு!
* வரப்புயர....!
* தமிழ்ப் பணி
* ஒரு ஷொட்டு!

இப்பவும் சென்னை மாநில அரசினராலும் சென்னை மாநில மின்சார போர்டு குழுவினராலும் வெளியிடப்பட்டுள்ள ஐந்தரை ஐந்தேமுக்கால் சதவிகிதப் பத்திரங்களை என் போன்ற ஏழை விவசாயிகளையும் வியாபாரிகளையும் மின்சார ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வலுக்கட்டாயப்படுத்தி வாங்கச் செய்கின்றார்கள். நாங்களும் வாங்கியதை எங்களுடைய சிரமங்களுக்காக அருகிலுள்ள அரசாங்க வங்கியில் கொண்டு கொடுத்து மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டியிருக்கிறது. இப்பத்திரங்களை உடனுக்குடன் விற்பவர் பலர் இருப்பதால் இப்பத்திரங்களின் மதிப்பு மிகக் குறைந்து போய் நூறு ரூபாய்ப் பத்திரத்தைப் பத்து ரூபாய்க்கு விற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏழைகள் மீது இப்பத்திரங்களைக் கட்டாயமாகத் திணிக்காமல் இருக்க அரசினர் ஆவன செய்யக் கோருகிறேன்.

கரூர் 26–4–67 — சோ. ஆறுமுகம்

தமிழ் நாட்டின் சிறந்த வார இதழான தங்கள் 'கல்கி'யின் 21–5–67 வெளியீட்டில் ''விஞ்ஞானமும் விவசாயமும்'' என்ற ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. யூதர்கள் வாழும் இஸ்ரேயில் நாடு, விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி, நல்ல விவசாயம் செய்து, முன்னைய நிலையிலும் பன்மடங்கு இன்று வளம் பெருகச் செய்து வாழ்வதைக் காட்டியுள்ளீர்கள். இத்தகைய பயனுள்ள கட்டுரை கல்கியில் வெளிவந்ததைப் பாராட்டுகிறேன்.

இன்று உணவுப்பற்றுக்குறை நாடாக விளங்கும் நம் பாரத நாடும் இதேபோல் முன்னேற வேண்டும். கிராமத்தில் வாழும் விவசாயிகள், நவீன விஞ்ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும்.

சேவல்பட்டி
20–5–67 — எப். எஸ். செல்லச்சாமி

தங்கள் ''வயிறு வாழ்த்தும்'' என்ற தலையங்கம் நடுநிலையினின்று எழுதப்பட்ட தலையங்கம். குழந்தைக்குப் பால் தேவை என்பது எந்த அளவுக்கு இன்றியமையாததோ அது போல் தமிழர்களுக்கு அரிசி இன்றியமையாதது.

ஔவைப் பாட்டி கூறியது போல, 'வரப்புயர' என்ற தத்துவத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உழவுத் தொழிலுக்கு ஏற்றம் வரும் வகையில், திறன்மிக்க செயல்களைத் தமிழக அரசு இனி செய்ய வேண்டும். சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும்? உழவுத் தொழில்தானே தலையாய தொழில்? மற்றவரெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்கள்தானே?

பம்பாய் — ந. பழநி ஆண்டவன்
16–5–67 — ,வைதே பழநிஆண்டவன்
க. மீ. சங்கரலிங்கம் பிரபுராம்

வெள்ளிவிழாக் கண்ட பம்பாய்த் தமிழ்ச் சங்கம் இவ்வாறே தமிழ் வளர்த்துப் பொன் விழா, வைர விழா எல்லாம் காணவேண்டும் என வெள்ளி விழாக் கண்ட பாரதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துகிறேன். 14–5–67 கல்கி இதழில் 'சங்கத் தமிழ்'க் கட்டுரையில் ''இந்த வெள்ளி விழாவே தமிழ் நாட்டுக்கு வெளியே தமிழ் பரப்பி வரும் எந்த இலக்கியச் சங்கமும் கொண்டாடியிராத ஒரு விசேஷம்தானே'' என்று திருபர் குறிப்பிட்டிருக்கிறார். இது சரியில்லை. 1941ம் வருடம் விஞ்ஞான மேதை டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தொடக்கப்பட்டுப் பயனுள்ள 25 ஆண்டுகள் தமிழ் இலக்கியப் பணி புரிந்து, சென்ற 1966 ஜனவரி 26ந் தேதி முதல் 30ந் தேதி வரை வெள்ளி விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடியது கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கம்.

கல்கத்தா–26 — டி. வெங்கடேஸ்வரன்,
20–5–67 — (செயலாளர்)
பாரதி தமிழ்ச் சங்கம்

'சரஸ்வதியின் சபதம்' விமரிசனத்துக்கு முதுகிலே ஒரு ஷொட்டு — ''நையாண்டி தூாஸ்யம்'' இலை மறை காயாக அமைய வேண்டும் என்று தைரியத்தையும் வரவழைத்துக்கொண்டு சொன்னதற்கு — மன்னிக்க வேண்டும்—எழுதியதற்கு.

சினிமாக் கதாசிரியர்களைக் கேலி செய்து விட்டு நீதிமன்றக் காட்சியிலே அதே பாணியைப் பின்பற்றியுள்ளாரே 'சோ'! அதையும் அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளார் உங்கள் விமரிசகர்.

தாராபுரம்
29–5–67 — கப்பூடு

சிறந்த இந்திய எழுத்தாளரும் நாவலாசிரியருமான திரு ஆர். கே. நாராயணன் லீட்ஸ் சர்வகலாசாலையில் பட்டம் பெறுவதையொட்டிய நன்னாளில் அவர் எழுதிய ''காற்றோடு'' என்ற நகைச்சுவைக் கதையை மொழிபெயர்த்துப் பிரசுரித்து அவரைக் 'கல்கி' மூலம் பாராட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். செல்லம் சீதாராமனின் மொழிபெயர்ப்பு சிறந்து விளங்குகிறது.

மதுரை
26–5–67 — ஏ. கே. ஹரிஹரன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor: T. Sadasivam

உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

- அதிக எண்ணெய்ப்பசை இல்லாமலும், தாறுமாறாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
- மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
- உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்கியமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.
- உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இனிமேல் பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலக முழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்

BP/11/P/1165 TM


நல்ல
புகையிலே
என்றாலே
நல்ல
சிகரெட்
Panama
20
பனமா
ஒரு
நல்ல
சிகரெட்
செழுமையிலும் மென்மை
யிலும் உன்னதமாகத்
தேர்ந்தெடுத்த
வர்ஜீனியாப்
புகையிலைகள்! பனமா
சிகரெட்டிலே நிபுணத்து
வத்துடன் அவை
கலவைபெற்றுள்ள
பயன், பல்லாயிரம்
மக்களுக்குப்
பரவசமூட்டும்
தன்மையான
புகையாம்!
பாரதத்தில் இத்தகைய தேசீய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது
GTC
கோல்டன் டுபாக்கோ கம்பெ
பிரைவேட் லிமிடெட்,
பம்பாய்-56